விலை.: 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ரா
மி
கோ
MADRAS CEMENTS LTD.
RAMCO CEMENT
R A M C O
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 சித்திரை 10 செவ்வாய்க்கிழமை (23.04.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 125

# 6 ஆயிரம் ஏக்கர் காணி இராணுவத்தால் சுவீகரிப்பு

## வலிகாமம் பகுதி மக்கள் செய்வதறியாது திண்டாட்டம்

(கொழும்பு)

வலிகாமம் வடக்கு மற்றும் வலிகாமம் கிழக்கு ஆகிய பிரதேசங்களில் உள்ள 6 ஆயிரத்து 381 ஏக்கர் பரப்புள்ள காணிகளை இராணுவ தேவைகளுக்காக சுவிகரிப்பதற்கான அறிவித்தல் வெளியாகியுள்ளது. (02ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவுடன் முரண்பாடு இல்லையாம்

(கொழும்பு)

இந்தியாவுடன் எவ்வித முரண்பாடுகளும் கிடையாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

தமிழகத்தில் சில குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட போதிலும் இந்தியாவுடனான உறவுகளில் எவ்வித விரிசலும் கிடையாது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டின் உண்மையான நிலைமைகளை நேரில் பார்வையிட தமிழ் அரசியல்வாதிகள் இலங்கைக்கு விஜயம் செய்ய முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டுக்கு விஜயம் செய்வதன் மூலம் உண்மை நிலைமைகளை கண்டறிய (19ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலை சீருடைத் துணிகளைப்பெற ஏழு மணி நேரம் காத்திருந்த மாணவர்கள்

### தென்மராட்சியில் நேற்று சம்பவம்

(யாழ்ப்பாணம்)

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் பாடசாலை சீருடையை பெற்றுக்கொள்வதற்காக காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரை தென்மராட்சி வலயத்திற்குட்பட்ட 1500 பாடசாலை மாணவர்கள் காத்திருந்தனர். இராணுவத்தினரின் ஏற்பாட்டில் தென்மராட்சி வரணி கரம்பன் குறிச்சிப்பகுதியில் உள்ள 52ஆவது படைப்பிரிவின் தலைமையகத்தில் வைத்து கோத்தபாய ராஜபக்ஷவினால் மாணவர்கள் மற்றும் தென்மராட்சி வலயத்திற்கு உட்பட்ட 24 பாடசாலைகளைச் சேர்ந்த (20ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு மாகாண சபைத் தேர்தலில் அமைச்சர் டக்ளஸ் தனித்துப் போட்டி?



(யாழ்ப்பாணம்)

வட மாகாணசபைத் தேர்தலில் அமைச்சர்டக்ளஸ்தேவானந்தாதலைமையிலான ஈபிடிபி கட்சி பெரும்பாலும் தனித்துப் போட்டியிடக் கூடும் என்று கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஆளும்ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணியில் பங்காளிக்கட்சியாக ஈபிடிபியும் இடம்பெற்றுள்ள போதிலும் வட மாகாண சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவது (20ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானத்தை சீர்குலைத்தால் உத்தேச சட்டம்

(கொழும்பு)

சமாதானத்தை சீர்குலைக்கும் நபர்களுக்கு எதிரான உத்தேச சட்டம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இன,மத மற்றும் குல பேதங்களை தூண்டும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கக் கூடிய வகையில் தேசிய மொழியில் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார புதிய உத்தேச சட்டமொன்றை தயாரித்துள்ளார்.

இந்த சட்டமே அண்மையில் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த சட்டத்திற்கு ஜனாதிபதி இணக்கம் வெளியிடுவார் என அமைச் (19ஆம் பக்கம் பார்க்க)

## சொகுசு பஸ் மோதி ஒருவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற சொகுசு பஸ்ஸும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் இளைஞன் ஒருவன் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் நேற்றிரவு 9.15 மணியளவில் கிளிநொச்சி உமையாள்புரம் அம்மன் கோயில் அருகே இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்துச் சம்பவம் தொடர்பில் உடனடியாக விபரங்களை பெறமுடியவில்லை. (19ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் குடும்ப ஆதிக்க ஆட்சி அமெரிக்காவின் அறிக்கை சரியானது

### ஐ.தே.க. தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் குடும்ப ஆட்சி அதிகாரத்தின் கீழ் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் மேலோங்குகின்றன என அமெரிக்கா முன்வைத்துள்ள குற்றச்சாட்டு முற்றிலும் உண்மையானது எனத் தெரிவித்து அமெரிக்க அறிக்கையை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி வரவேற்றுள்ளது.

அநீதியான ஆட்சியை நடத்திக் கொண்டு சர்வதேசத்தின் பலமிக்க நாடுகளைப் பகைத்துக் கொள்வதால் நாடுதான் அபாய நிலைக்குள் தள்ளப்படுகிறது.

எனவே, சர்வதேச சமூகத்துடனான முறுகல் நிலைக்கு முற்றுப் புள்ளி வைக்க அதனுடன் சமரசப் பேச்சு நடத்த அரசு தயாரெனில், தாமும் (20ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமை மீறல் தொடர்பில் விசாரணை நடத்த தயார்!

### ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

மனித உரிமை மீறல்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்தத் தயார் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ஆதாரத்துடன் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டால் அது குறித்து விசாரணை நடத்தத் தயார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலத்திரனியல் ஊடகப் பிரதானிகளுடன் நடைபெற்ற சந்திப்பின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கவும் பாதுகாக்கவுமே அரசாங்கம் விரும்புவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சாதாரண குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும் அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்தப்படுவதாகவும் இவை மனித உரிமை மீறல்களாக சித்தரிக்கப்படு (20ஆம் பக்கம் பார்க்க)

## இன ஒருமைப்பாட்டை கட்டியெழுப்ப அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்



### யாழ். வந்த பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வெளிநாடுகளுக்கு புலம் பெயர்ந்து சென்றவர்கள் மீண்டுமொரு அழிவு யுத்தத்தை ஏற்படுத்தவிடாது இன ஒருமையைப்பாட்டை இலங்கையில் கட்டியெழுப்ப ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென பாதுகாப்புச் அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ (19ஆம் பக்கம் பார்க்க)

## திட்டமிட்டபடி செப்ரெம்பரில் வடக்கு மாகாண சபை தேர்தல்

(கொழும்பு)

வட மாகாண சபை தேர்தலை எதிர்வரும் செப்டம்பர் மாதம் நடத்த அரசாங்கம் தீர்மானித்தாக ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ உறுதிப்படுத்தியுள்ளார். நேற்று முற்பகல் ஊடகப் பிரதானிகளுடனான சந்திப்பின் போதே ஜனாதிபதி இந்த அறிவித்தலை விடுத்தார்.

யாருடைய செயல்பாட்டிற்காகவும் வடமாகாண தேர்தலை நடத்தவில்லை என அங்கு வாழும் பொது மக்களின் தேவைகளைச் கருத்திற் கொண்டே இந்த நடவடிக்கையினை மேற்கொள்வதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தற்போது வடக்கு மக்களின் வாழ்கைத் தரம் ஒரு நிலையை அடைந்துள்ள நிலையில் தேர்தலை நடத்தக் கூடிய ஏதுநிலை உள்ளதாகவும் ஜனாதிபதி இதன் போது குறிப்பிட்டார். (19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 6 ஆயிரம் ஏக்கர் காணியை...

1990ஆம்ஆண்டில் இந்தப் பகுதிகள் இராணுவத்தின் உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டதை அடுத்து பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்திருந்தன.

இந்தப் பிரதேசத்தின் ஒரு பகுதியில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள போதிலும் 27 கிராம சேவகர் பிரிவுகளில் மீள்குடியேற்றம் இன்னும் அனுமதிக்கப்படவில்லை.

இவ்வாறு மீள்குடியேற்றம் அனுமதிக்கப்படாத பகுதியிலேயே காணிகள் சுவீகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் வடக்கில் 24 கிராம சேவகர் பிரிவுகளிலும் வலிகாமம் கிழக்கில் 3 கிராம சேவகர் பிரிவுகளிலும் காணிகளை சுவீகரிப்பதற்கான அறிவித்தல்கள் அங்கு காணிகளில் மீதமுள்ள சேதமடைந்த வீடுகளின் சுவர்களில் ஒட்டப்பட்டுள்ளது.

இந்தப்பகுதிகளில் மீள்குடியேற்றத்தை எதிர்பார்த்து 9 ஆயிரத்து 995 குடும்பங்களைச் சேர்ந்த 29 ஆயிரம்பேர்யாழ்.குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள பத்து நலன்புரி நிலையங்களிலும் உறவினர், நண்பர்களின் வீடுகளிலும் இன்னும் தஞ்சமடைந்துள்ளனர்.

தங்களை தமது சொந்தக் காணிகளில் மீள்குடியேற்றம் செய்ய வேண்டும் என்று இந்த மக்கள் தொடர்ச்சியாகக் கோரி வந்திருக்கின்றனர். அத்துடன்தமது கோரிக்கைகளை வலியுறுத்திபலபோராட்டங்களையும் அவர்கள் நடத்தியிருக்கின்றனர்.

அத்துடன் பொதுமக்களுக்குச் சொந்தமான இந்தக் காணிகளில் மீள் குடியேற்றம் செய்ய அரசுக்கும் அதிகாரிகளுக்கும் உத்தரவிட வேண்டும் எனக் கோரி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் வழங்கப்பட்டுள்ள இடைக்கால தீர்ப்பொன்றில் இந்தப் பகுதிகளில் கண்ணிவெடிகளை அகற்றி மக்களைப் படிப்படியாக மீள்குடியேற்றம் செய்ய வேண்டும் என்று தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அந்த உத்தரவு தொடர்பான நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அரசாங்க அதிபருக்கும் அதிகாரிகளுக்கும் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்ததாக குறிப்பிட்டார்.

இடைக்கால உத்தரவில் உள்ள அந்த வழக்கு பிரேரணை மீதான விசாரணை அடுத்த மாதம் நடைபெறவுள்ள நிலையிலேயே இந்தக் காணிகளை இராணுவ தேவைக்காக சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.மாவட்ட காணி சுவீகரிப்பு அதிகாரி ஏ.சிவசுவாமியின் கையெழுத்துடன் ஒட்டப்பட்டுள்ள துண்டுப் பிரசுரங்களில் இராணுவத்தின் யாழ்ப்பாண பாதுகாப்பு பற்றாலியனின் தலைமையகம்அமைப்பதற்காகவும் பலாலி மற்றும் காங்கேசன் துறை இராணுவ தளங்களின் உயர்பாதுகாப்பு வலயத்திற்காகவும் இந்தக்காணிகள் எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.(எ-11)

# காணி சுவீகரிப்பை நிறுத்தக்கோரி காணி அமைச்சருக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு மற்றும் வலிகாமம் கிழக்குப் பகுதிகளின் காணி சுவீகரிப்பு நடவடிக்கைளை நிறுத்துமாறு காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோனுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடிதம் அனுப்பியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை.சோ.சேனாதிராஜா அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

யாழ்.மாவட்ட செயலகக் காணி சுவீகரிப்பு உத்தியோகத்தர் ஆ.சிவசுவாமியால் 27.04.2003 ஆம் திகதியிட்டு வெளியிடப்பட்ட அறிவித்தல் தொடர்பான பிரதி தங்களின் மேலான கவனத்துக்கு இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகின்றது.


இந்த சுவீகரிப்பு அறிவித்தல் தங்களின் பணிப்பின் பேரிலேயே வெளியிடப்பட்டுள்ளதாகக் கூறுகின்றது.


பெரும்பாலும் விவசாய மற்றும் மீனவ மக்களின் தனித்தனி உரித்துடைய பூர்வீக வாழ்நிலமான 6 ஆயிரத்து 381 ஏக்கர் பரப்பளவு நிலத்தைச் சுவீகரிப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கை மிகவும் அதிர்ச்சியளிப்பதாக உள்ளது.

எமது காணிகளில் என்னையும் ஏனைய எமது பிரதேச மக்களையும் மீளக் குடியமர அனுமதிக்க வேண்டும் எனக் கோரி உச்ச நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்த வழக்கு எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த சுவீகரிப்பு முயற்சிக்கு எதிராக எமது தீவிரமான ஆட்சேபனைகளைத் தெரிவிப்பதுடன் இந்த அறிவித்தலை இரத்துச் செய்துமக்களை அவர்களின்சொந்தநிலங்களில் மீளக்குடியமர அனுமதிக்க நடவடிக்கை எடுக்குமாறும் தங்களை கேட்டுக் கொள்கின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ-11)







தென்மராட்சிக்கு நேற்று விஜயம் செய்த பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவை மாணவி ஒருவர் மலர் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதையும் ஆசிரியர் ஒருவருக்கு சீருடை வழங்கப்படுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.ஆர்.கரன்)


## காணி, வீடு விற்பனைக்கு

**காணி — யாழ்ப்பாணம்**
யாழ்ப்பாணம் வெலிங்டன் தியேட்டர்ச் சந்திக்கு அண்மையில் 11/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
NRE/L/021

**வீடு — சங்குவேலி**
சங்குவேலி தெற்கு ஸ்ரீ அம்பாள்சனசமூகநிலைய வீதியில் 7 பரப்புக் காணியுடன் சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக் குண்டு.
NRE/H/024

**காணி — தெல்லிப்பழை**
மல்லாகம் சந்திக்கும் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயிலுக்கும் இடையில்கே.கே. எஸ் வீதியில் 2 பரப்புக் காணி விற்னைக்குண்டு. NRE/L/020

**காணி — திருநெல்வேலி**
திருநெல்வேலி விவசாயப் பாடசாலைக்கு வடக்கு பக்கமாக $10\frac{1}{2}$ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.
NRE/L/013

தொடர்புகளுக்கு:
ராஜலக்ஷ்மி என்ரபிறைஸ்
Rajaluxmy Enterprise
Real Estate
காணி, வீடு வாங்கித் தருவதற்கும் விற்றுக்கொடுப்பதற்குமான நிறுவனம்
26D. பிறவுண் வீதி. கொக்குவில். யாழ்ப்பாணம்.
(தொழில்நுட்பக் கல்லூரிக்கு முன்பாக)
E-mail:nrluxmy@gmail.com
தொ.பே: 0779994603, 0215684810



## யாழ்ப்பாணம் செல்லா சினிமா




சரத்குமார், சேரன், சூர்யா, பிரசன்னா, பிரகாஸ் ராஜ் மற்றும் பிரபலமான நட்சத்திரங்கள் நடித்த
சென்னையில் ஒரு நாள்
10.30, 2.30, 6.30, 9.30
இன்று முதல் இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு



## கண்ணீர் அஞ்சலி



**அமரர் மாதவர் அரிச்சந்திரன்**

எமது பாடசாலை ஆசிரியர் குகதாசன் அவர்களுடைய தந்தை மாதவர் அரிச்சந்திரன் 17.04.2013 அன்று இறைபதம் எய்தியமையை இட்டு எமது பாடசாலை சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யா/திருவடிநிலை
சைவத் தமிழ்க் கலவன் பாடசாலை
அதிபர், ஆசிரியர், மாணவர்கள்

(2432)



## பிறந்த நாள் வாழ்த்துக்கள்




**கனிஸ்டன் அனுஷ்கா**

இன்று (23.04.2013)
தனது இரண்டாவது
பிறந்த நாளைக் கொண்டாடும்
செல்வி கனிஸ்டன் அனுஷ்கா
அவர்கள் நீடுழி காலம் சீரும்
சிறப்புடனும் வாழ
வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:
தாவீது பேரின்பநாதன் குடும்பம் (தாத்தா),
53 (30), டேவிட் றோட்,
யாழ்ப்பாணம்.

(C-3087)



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு:
T.P : 021 321 0815, 021 567 1540
E-mail : valampurii@yahoo.com,
valampurijaffna@gmail.com



## குறைந்த கட்டணத்தில் பொதிகள் சேவை

3 நாள்களில் உங்கள் கைகளில் பொதிகள் கிடைக்கக் கூடியவாறு துரித சேவை ...




கட்டணங்கள் (1 Kg) இற்கு
லண்டன் 1450 /-
கனடா 2550 /-

விசேட கட்டணங்கள் (5 Kg) இற்கு
சுவிஸ் 7800 /-
அவுஸ்திரேலியா 5500 /-
ஜேர்மனி 5500 /-

சாதாரண சேவை 1 Kg இற்கு கனடா 700 /- Uk 600 /-
(பொதிகள் நிறை 5 Kg இற்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும்.)

(C-3082)

குறிப்பு : கருவாடு, மருந்து வகை, எண்ணை வகைகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

குறிப்பு : வெளிநாடுகளிலிருந்து வருபவர்களுக்கும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்வோருக்கும் வெள்ளவத்தையில் மூன்று அறைகள் இணைந்த குளியலறை A/c, Non A/c அறைகள் நாள், கிழமை, மாத வாடகைக்கு மிகவும் குறைந்த கட்டணத்தில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு : Rainbow Travels 30/2, 3ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். T.P. : 021 221 9596, 077 87 10 732


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## ஞானமார்க்கம்

காடொன்றின் மத்தியிலே நிழல்தரும் மரம் ஒன்று இருந்தது. அந்த மரத்தடியிலே ஒரு ஞானி அமர்ந்திருந்தார். அக்காட்டுப் பக்கமாகத் தினமும் விறகு வெட்டுவதற்காக ஒருவன் வந்து போவான்.

வெட்டிய விறகினை விற்று அதன் மூலம் தனது வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தான்.

இவன் அக்காட்டுப் பக்கம் வந்து போவதை அந்த ஞானி அவதானித்தார். "இதோ பார்... மரம் வெட்டுவதிலே உன் வாழ்நாளை வீணடிக்காதே ... இன்னும் சிறிது தூரம் காட்டிற்குள் முன்னேறிச் சென்றால், ஒரு செம்புச் சுரங்கம் இருக்கும். அதிலே ஒருநாள் வேலை செய்தால் ஒரு வாரத்துக்கு நீ கவலை கொள்ளத் தேவையில்லை. தினமும் வேலை செய்யவேண்டி இருக்காது அங்கே போ" என்றார்.

அவனுக்கு நம்ப முடியவில்லை!

"இந்த ஞானி ... எப்போது பார்த்தாலும் இந்த மரத்தடியிலே தான் கண்ணை மூடிக்கொண்டு அமர்ந்திருக்கிறார். இவருக்கு எப்படித் தெரிந்தது. அங்கேயுள்ள சுரங்கம் ? என்று யோசனை செய்தான்.

"இருந்தாலும் போய்த்தான் பார்ப்போமே" என்று நினைத்து காட்டினுள்ளே புறப்பட்டான். அவர் சொன்ன மாதிரியே ஒரு செம்புச் சுரங்கம் அவனது கண்ணிலே தென்பட்டது. அவன் அதிலே இணைந்து வேலை செய்தான். ஞானி கூறிய மாதிரியே ஒருநாள் வேலையின் ஊதியமே அவனது வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்த முடிந்தது. குடும்பத்தையும் கவனிக்கக் கூடியதாக இருந்தது. அதோடு வரும் விருந்தாளிகளையும் உபசரிக்க முடிந்தது.

மறுபடியும் அந்த ஞானி அவனை அழைத்து இன்னும் சற்று உள்ளே போனால் ஒரு வெள்ளிச் சுரங்கம் இருக்கும். அங்கே ஒருநாள் வேலை செய்தால் போதும்... ஆறு மாதத்திற்கு வேலை செய்ய வேண்டிய அவசியம் இருக்காது என்றார்.

இதையும் அவன் முதலில் நம்பவில்லை. இருந்தாலும் போய் பார்த்தான். அங்கே உண்மையாகவே ஒரு வெள்ளிச் சுரங்கம்.

மறுபடியும் ஒருநாள் வேலைசெய்தான்... ஆறுமாதத்திற்கு அவன் ஆடம்பரமாக வாழ்க்கை நடத்தினான். இப்படியாக சில நாட்கள் நகர்ந்தன.

மறுபடியும் ஞானியிடம் இவன் தானாகவே சென்றான். அப்போது ஞானி இவனைப் பார்த்து இன்னமும் நீ விபரம் புரியாமலா இருக்கிறாய் ... இன்னும் சற்று முன்னேறி போனால் ஒரு தங்கச் சுரங்கம் உன் கண்ணிலே தென்படும் என்று கூறினார்.

ஆசை யாரை விட்டது?...அங்கேயும் போனான். நாட்கள் நகர்ந்தன. அவன் ஒரு பெரிய பணக்காரனாக மாறிவிட்டான். செல்வம் நிறைய அவனிடம் இருந்தது. "இனிமேல் ஞானியைப் பற்றி நமக்கு என்ன கவலை" என்று இருந்து விட்டான்.

அதுமட்டுமல்ல... "அந்த ஞானியே விபரம் எதுவும் தெரியாதவர்" என்று நினைத்து விட்டான்.

ஏனென்றால் இப்படி ஒரு தங்கச் சுரங்கம் இருக்கிறது தெரிந்தும் அந்த நபர் கண்ணை மூடிக்கொண்டு உட்காந்திருக்காரே ...அவர் எப்போதும் ஒரு ஏமாளியாகத்தான் இருப்பாரோ. என்று நினைத்தான். அவரைப் போய் பார்க்கவே இல்லை.

ஒருநாள் ஞானியே இவனை அழைத்தார்.

என்ன இது.. இப்படியே இருந்துவிட்டால் எனக்கு வயது போய்க் கொண்டிருக்கிறது. நீ இன்னும் சற்றுத்தூரம் முன்னேறிப் போனால் வைரச் சுரங்கத்தையே பார்க்கலாம். நீ தங்கத்துடனேயே உன் நேரத்தை வீணடிக்கிறாய்" என்றார்.

அவன் பின்னர் வைரச் சுரங்கத்தையும் கண்டுபிடித்தான்.

பின்பு அவன் ஞானியிடம் நீண்ட நாட்களாக வரவில்லை.

ஞானி மரணப்படுகையிலே இருந்தார். உடனே வா... உன்னிடம் கடைசி இரகசியத்தையும் சொல்ல வேண்டியிருக்கிறது" என்று சொல்லி அனுப்பினான். வந்தான் அவர் முன்னால் நின்றான்.

வைரத்தை விட பெரிதாக என்ன இருந்து விட முடியும்?" இன்னும் முன்னேறி போ" என்று சொல்லப் போகின்றீர்களா? என்றார்.

ஆமாம் சற்று தூரம் நகர்ந்தால் அள்ள அள்ளக் குறையாத ஒரு பொக்கிஷம் இருக்கிறது. அதை நீ பார்க்கலாம் வைரச் சுரங்கம் தீர்ந்து போய்விடும் என்றார்.

சரி "இவ்வளவு தூரம் தெரிந்து வைத்திருக்கிற நீங்கள் ஏன் இன்னமும் இந்த மரத்தடியிலே அமர்ந்திருக்க வேண்டும்" அந்தப் பொக்கிஷம் எனக்குள்ளே இருக்கிறது. அதற்காகத்தான் உன்னை அழைத்தேன்" என்றார். அவனால் அதை புரிந்து கொள்ள முடியவில்லை.

காட்டுக்குப் போனான் கண்ணை மூடிக்கொண்டு அமர்ந்திருந்தான். அந்த பொக்கிஷத்தைக் அவன் கண்டு பிடித்தான். நாம் இப்போது வாழும் சூழ்நிலையிலே இது பைத்தியக்காரத்தனமாகத் தெரியவில்லை... என்றார்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# வலி.மேற்கு பிரதேசத்திற்கு குடிநீர் விநியோகத்திட்டம்

(கொழும்பு)

மக்களுக்கு தேவையான பல்வேறுபட்ட அபிவிருத்தி செயற்றிட்டங்களை நாம் முன்னெடுத்து வருகின்றோம். தற்போது ஏ9 வீதி மட்டுமல்லாது ஏனைய பல வீதிகளும் புனரமைக்கப்பட்டுள்ளதுடன் மக்களுக்கான அடிப்படைத் தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன.

மேலும் வலி.மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட அனைத்து பகுதிகளுக்கான குடிநீர் விநியோகத்திட்டம் விரைவான செயற்றிட்டத்தின் கீழ் பூர்த்தி செய்யப்படுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வட்டு.தெற்கு குடிநீர் விநியோக திட்ட நிகழ்வில் நேற்று முன்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த பல வருடங்களாக சீரமைக்கப்படாது இருந்த ஏ9 பாதை தற்போது சிறப்பான முறையில் சீரமைக்கப்பட்டு வருகின்றது.

இப்பாதை முன்னர் மக்கள் பாவனைக்கு தடைசெய்யப்பட்டிருந் துடன் மூடப்பட்டும் இருந்தது. அழிவு யுத்தம் முடிவடைந்த பின்னர் நாம் அரசுடன் கலந்துரையாடியதன் பிரகாரம் அந்தப் பாதை மீளத் திறந்து வைக்கப்பட்டதுடன் தற்போது சிறந்த முறையிலும் மீள் புனரமைக்கபட்டு வருகின்றது.

அந்தவகையில் மக்களுக்குதேவையான குடிநீர் உள்ளிட்ட பல்வேறு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் இதனை அங்குராப்பணம் செய்து வைக்கின்றோம் என்றார்.

வட்டுக்கோட்டை தெற்கு முதலி கோயிலடிப் பகுதியில் உலக தரி சனம் நிறுவனத்தின் 7.5 மில்லியன் ரூபா மற்றும் வலிமேற்கு பிரதேச சபையினால் 2 மில்லியன் ரூபா நிதிப் பங்களிப்புடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நீர்த்தாங்கி மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

40 ஆயிரம் லீற்றர் கொள்ளளவுடைய இந்நீர்த் தாங்கியூடாக 237 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் நன்மையடையவுள்ள அதேவேளை இப் பிரதேசத்தில் நீண்டகாலமாக குடிநீரைப் பெற்றுக் கொள்வதில் மக்கள் பெரும் இடர்பாடுகளை சந்தித்த நிலையில் தமக்கு புதிதாக நீர்த்தாங்கியை அமைத்து தருமாறு அமைச்சர் டக்ளஸ் தேவாணந்தா விடுத்த கோரிக்கைக்கு அமைவாக 4 கிலோ மீற்றர் தூரத்திற்கு இக்குடிநீர் விநியோகம் இடம் பெறவுள்ளது. முன்பதாக நினைவுக் கல்லை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா திரைநீக்கம் செய்து வைத்ததுடன் மக்களுக்கான குடிநீர் விநியோக திட்டத்தையும் சம்பிரதாயபூர்வாகமாக தொடக்கி வைத்தார். (அ-2)

# தடகள போட்டி

(கரவெட்டி)

வடமராட்சி வலய பாடசாலைகளுக்கிடையிலான தடகள போட்டிகள் இன்று செவ்வாய்க்கிழமையும் நாளை புதன்கிழமையும் எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் காலை 8 மணி தொடக்கம் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இதில் பங்குபற்றும் பாடசாலை வீர, வீராங்கனைகளைத் தவறாது கலந்து கொள்ளும்படி வடமராட்சி வலயக் கல்வி அலுவலகம் அறிவித்துள்ளது. (அ-3-24)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 60 | 70-140 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 120 | 80 |
| தக்காளி | 60 | 50 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 40 | 50 | 50 |
| கோவா | 60 | 60 | 80 | 80 |
| கரட் | 120 | 120 | 140 | 120 |
| பூசணி | 30 | 30 | 50 | 40 |
| புடோல் | 30 | 60 | 60 | 40 |
| வாழைக்காய் | 35 | 30 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 160 | 120-160 | 100-140 | 120 |
| பெரிய வெங்காயம் | 65 | 90 | 80 | 80 |
| பாகற்காய் | 130 | 120 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 40 | 80 | 60 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | -- | 100 |
| பயற்றங்காய் | 100 | 90 | 120 | 60 |
| லீக்ஸ் | 140 | 140 | 140 | 120 |
| பீற்றூட் | 60 | 30 | 80 | 60 |
| கறிமிளகாய் | 90 | 90 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 600 | 400 | 500 | 400 |
| போஞ்சி | 80 | 100 | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | 20 | 70 | 30 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 30 | 20 |
| [illegible] | 100 | 60 | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40-50 | 50 | 45-50 |
| இராசவள்ளி | 100 | 100 | 120 | 100 |

# இராசி பலன்

23.04.2013
(சித்திரை 10, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
திரயோதசி பின்னிரவு 5.08 மணிவரை
உத்தரம் மாலை 6.28 மணிவரை
இராகுகாலம் 3.00-4.30 மணிவரை
சுபநேரம் 10.30-12.00 மணிவரை
பிரதோச விரதம், அமிர்தசித்தம்

**மேடம்** மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், தேகநலன்கருதி எடுத்த முயற்சி வெற்றி பெறும்.

**இடபம்** மன மகிழ்ச்சியோடு செயற்படும் நாள், பிள்ளைகளின் தேவையறிந்து செயற்படுவீர்கள், கனவுகள் நனவாக பரம்பொருளை வழிபட வேண்டிய நாள்.

**மிதுனம்** நண்பர்கள் மத்தியில் நற்பெயர் கிடைக்கும், பயணங்களின் போது பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், யோசிக்காமல் செய்த வேலைகளில் கூட முன்னேற்றம் காண்பீர்கள்.

**கடகம்** புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு, முயற்சிகள் கைகூடும், உடன் பிறப்புக்கள் உங்களின் கருத்துக்களை ஏற்றுக் கொள்ள முன்வருவர்.

**சிங்கம்** புண்ணிய காரியங்களில் ஈடுபாடு செலுத்துவீர் ள், நாவன்மையால் நல்ல பெயரும் எடுப்பீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் உறவினர் சந்திப்புண்டு.

**கன்னி** ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், புதிய அனுபவங்கள் ஏற்படும், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**துலாம்** நடப்பதெல்லாம் நன்மைக்கு என நினைக்க வேண்டிய நாள், புகழ் மிக்கவர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கலாம், வழிபாட்டில் கவனம் செலுத்துவீர்கள்.

**விருச்சிகம்** குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும், புதிய பொருட்சேர்க்கையுண்டு, எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் மேலோங்கும்.

**தனுசு** பிறர் உதவியுண்டு, குடும்ப ஒற்றுமை கூடும், செய்தொழில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், உற்சாகமான நாள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.

**மகரம்** சந்தித்தவர்களால் சந்தோஷம் கிடைக்கும் நாள், திடீர் பயணங்கள் ஏற்படலாம், வரவேண்டிய வரவுகள் வந்து சேரலாம் வழிபாட்டில் கவனம் செலுத்துவீர்கள்.

**கும்பம்** கௌரவக்குறைவான நாள், எடுத்த காரியங்களில் சில தாமதங்கள் ஏற்படலாம், குடும்ப பொறுப்புகள் அதிகரிக்கும், நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதிகாண வேண்டிய நாள்

**மீனம்** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், சொந்தபந்தங்கள் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும் முயற்சிகள் கைகூடும்.

வளவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறைமுகத்தை புனரமைக்க வருகிறது இந்தியக் கப்பல்

யாழ்ப்பாணம்- காங்கேசன்துறைமுகம் ஆழமாக்கும் பணிகள் ஆரம்பித்து வைக்கப் பட்டுள்ளன. இந்த ஆழமாக்கும் பணியை மேற்கொள்வதற்கு இந்தியாவில் இருந்து கப்பல் ஒன்று காங்கேசன்துறை துறைமுகத் தை வந்தடைந்துள்ளதாக யாழ். இந்திய துணைதூதரகம் தெரிவித்துள்ளது.

காங்கேசன்துறைமுக அபிவிருத்தி பணி இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது. இதுவரை துறை முகப் பகுதியில் மூழ்கியிருந்த கடற்கலங் களை அகற்றும் பணிகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன. பெரிய கப்பல்களை உள்வாங் கும் நோக்கில் துறைமுகத்தினை 8 அடி ஆழமா க்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்தப் பணியை மேற்கொள்வதற்காக இந்தியாவில் இருந்து கப்பல் ஒன்று காங்கேசன் துறை துறைமுகத்தை வந்தடைந்துள்ளதா கவும் அடுத்து வரும் 15 நாட்கள் இந்த ஆழ மாக் கும் பணி நடைபெறவுள்ளதாகவும் இந்திய துணைத் தூதரகம் தெரிவித்துள்ளது. இந்த ஆழமாக்கும் பணியை இந்திய தூதரக அதிகாரி கள், கடற்படையினர் உத்தியோகபூர்வமாக நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்துள்ள னர். (அ-2)



நன்றி: ஐலண்ட்

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தின் வரு டாந்த மஹோற்சவம் திருவிழா கடந்த 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமானது.

அந்த வகையில் இன்று செவ்வாய்க் கிழமை சப்பறத்திருவிழாவும் நாளை புதன் கிழமை காலை 8.30மணிக்கு இரதோற் சவமும் மறுநாள் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்த உற்சவமும் நடைபெற்று எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை திருக்கல்யாண உற்சவமும் இடம்பெறவு ள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்து ள்ளனர். (அ)

# சித்திரா பௌர்ணமி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வில்லூன்றி வீரகத்தி விநாயகர் திருக் கோவில் சித்திரா பௌர்ணமி பெருவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 5.45 மணி முதல் விசேட அபிஷேக ஆராதனையுடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து முற்பகல் 6.45 மணிக்கு விசேட பூசையும் 7 மணிக்கு வசந்த மண்டப பூசையும் 8 மணிக்கு வில்லூன்றி புனித தீர்த்தத்தில் தீர்த்தவாரியும் இடம்பெறவுள்ள தாக தேவஸ்தான தர்மபரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ-5)

(யாழ்ப்பாணம்)

யாழ் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலை யத்தின் ஸ்ரீ சத்தியசாயி ஆராதனா மஹோற் சவம் நாளை, புதன்கிழமை அதிகாலை 4.45 மணிமுதல் மாலை வரை யாழ்ப்பாணம், சேர் பொன். இராமநாதன் வீதியில் அமைந்து ள்ள பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலை யத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் போது தியானம், சிறப் புரை, பஜனை, இசை நிகழ்ச்சி, சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகள், இளைஞர்களுக்கான கலந்துரையாடல் ஆகியவையும் இடம்பெற வுள்ளன. (அ-5)

# வாகன விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

(மிருசுவில்)

தனியார் பேருந்துடன் துவிச்சக்கரவண்டி மோதிய விபத்தில், துவிச்சக்கர வண்டியில் பயணித்த நபர் ஒருவர் பரிதாபமாக உயிரி ழந்துள்ளார்.

இச்சம்பவம் யாழ். மாவட்ட செயலகத்தை அண்மித்த பகுதியில் கடந்த 20 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவது, செய லகப்பகுதியில் இருந்து யாழ் நகர் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த தனியார் பேரு ந்து துவிச்சக்கரவண்டியில் சென்று கொண் டிருந்த நபருடன் மோதியதிலேயே இவ்விப த்து இடம்பெற்றுள்ளது. குறித்த தனியார் பேருந்து சாரதியும் நடத்துநரும் துவிச்சக்கர வண்டியில் வந்த நபரை மோதிவிட்டு தப்பிச் சென்று பொலிஸாரிடம் சரணடைந்துள்ளனர். காயமடைந்த நபர் அரைமணி நேரத்தின் பின் அப்பகுதி மக்களால் யாழ். போதனா வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டு சிகி ச்சை பலனின்றி நேற்று திங்கட்கிழமை அதி காலை ஒரு மணியளவில் உயிரிழந்தார்.

இச்சம்பத்தில் குருநகர் பகுதியை சேர்ந்த இராஜரட்ணம் இரட்ணவேல்துறைரோ (வயது 32) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ் வாறு படுகாயமடைந்து சிகிச்சை பலன்றி உயிரிழந்தவராவார்.

இச்சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற னர். (அ-3-85)

# தந்தை செல்வாவின் 36 ஆவது நினைவுதினம்

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வாவின் 36 ஆவது நினைவு நாள் நிகழ்வும் அஞ்சலி நினைவுரையும் எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் தந்தை செல்வா சதுக்கத்தில் அமைந்துள்ள தந்தை செல்வா நினைவாலயத்தில் தந்தை செல்வா நினைவு அறங்காவற்குழுவின் தலை வரும் தென்னிந்திய திருச்சபையின் முன் னாள் பேராயருமான அதி.வண. கலாநிதி எஸ்.ஜெபநேசன் தலைமையில் நடைபெற வுள் ளது என தந்தை செல்வா நினைவு அறங் காவற்குழு அறிவித்துள்ளது.

தந்தை செல்வா சிலைக்கு மலர் மாலை கள் அணிவித்து மற்றும் மலர் அஞ்சலியுடன் ஆரம்பமாகும் இந்நிகழ்வில் அஞ்சலியுரை யினை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், அருட் கலாநிதி அ.பி.ஜெயசேகரம் அடிகள் மௌலவி எம்.ஐ.மஹ்மூத் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

நிகழ்விற்கான நினைவுப் பேருரையினை பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ் லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான நீதி அமைச்சரவும் ஹக்கீம் வழங்கவுள்ளார். (அ-5)




# தமிழ்த்தினப் போட்டிகள்

(சித்தன்கேணி)

மாவட்டமட்ட தமிழ்த்தினப் போட்டிகள் எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை முற் பகல் 8.30 மணிக்கு யாழ். நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள் ளன என யாழ்.மாவட்ட தமிழ்த்தினப் போட்டி யின் குழுத் தலைவரும் வடமராட்சி கல்விப் பணிப்பாளருமான சி.நந்தகுமார் அறிவித்து ள்ளார்.

இதற்கமைய வடமோடி, தென்மோடி நாட்டுக்கூத்தும் முஸ்லிம் நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

என்வே போட்டியாளர்கள் உரிய நேரத்திற்கு சமுகமளித்து போட்டிகளில் கல ந்து கொள்ளும் படியும் அவர் கேட்டுள் ளார். (அ-5-17)

# கிரிக்கெட் போட்டிகள்

(கரவெட்டி)

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கி டையில் இருபாலாருக்குமான கிரிக்கெட் போட்டிகள் எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக் கிழமை காலை 8 மணி தொடக்கம் வடமராட்சி யில் மூன்று மைதானங்களில் இடம் பெறவுள் ளன.

இதில் ஆண்களுக்கான போட்டிகள் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்திலும் இமையாணன் மத்திய விளையாட்டு கழக மைதானத்திலும் நடை பெறவுள்ளன.

பெண்களுக்கான போட்டிகள் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

15 பிரதேச செயலகங்கள் இப்போட்டி யில் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக் கது. (அ-3-24)

# வடமராட்சி பிரதேசத்தின் சதுரங்க போட்டி முடிபுகள்

திருநாவலூர் விளையாட்டு கழகம் வட மராட்சி பிரதேசத்தை உள்ளடக்கி நடத்திய சதுரங்க போட்டிகளின் முடிவுகள் அறிவிக்க ப்பட்டுள்ளதுடன் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு,

**9 வயது பிரிவு ( ஆண்)**

அ.சகின்ஞ்னய (தும்பசிட்டி மெ.மி.த.க), சி அஞ்சனன்(ஹாட்லிக்கல்லூரி), தெ. அபிசேக் (நெல்லியடி மெ.மி.த.க)

**9 வயது பிரிவு (பெண் )**

ந.நிவேதா(தும்பளை சிவப்பிரகாச மகா வித்தி), க.கவிவர்ஷா(நெல்லியடி மெ.மி.த.க)

**11 வயது பிரிவு (ஆண்)**

கி.சுதன்ராஜ் ( உடுப்பிட்டி அ.மி.த.க பாட சாலை),கி. விதுர்ஷனன்(தும்பசிட்டி மெ.மி. த.க), செ.நிவேரகன்(உடுப்பிட்டி அ.மி.த.க பாடசாலை),தி.அபிசேக் (நெல்லியடி மெ.மி. த.க)

**11வயது பிரிவு (பெண்)**

இ.பிரவீணா (தும்பசிட்டி மெ.மி.த.க) , வ. வைதேகி (வடமராட்சி இந்து ஆரம்ப பாட சாலை), பி.சாகித்யா (வடமராட்சி இந்து ஆர ம்ப பாடசாலை)

**13 வயதுபிரிவு (ஆண்)**

சு.சுமன் (உடுப்பிட்டி அ.மி.த.க பாடசாலை), ப.சிவபாலசிறி( உடுப்பிட்டி அ.மி.த.க பாட சாலை), இ.தனுசன் (ஹாட்லிக் கல்லூரி), ஜெ.றிசிகோபன் (ஹாட்லிக் கல்லூரி)

**13 வயது பிரிவு (பெண்)**

ஜெ.சர்மினி,ரா.மாதுமை,கே.விஷ்ணு , பி.ஜோதினி (பருத்தித்துறை மெ.பெ. பாட சாலை)

**15 வயது பிரிவு (ஆண்)**

கி.இலக்கணன் (நெல்லியடி ம.ம.வித்தி), இ. உதயதர்ஷன் (ஹாட்லிக் கல்லூரி), சு.சுதர் சன் (உடுப்பிட்டி அ.மி.த.க பாடசாலை),த. அபி னேஸ் (ஹாட்லிக் கல்லூரி)

**15 வயது பிரிவு (பெண்)**

கு.தர்மி ( உடுப்பிட்டி மகளிர் கல்லூரி) , வ.மாதுமை (வடமராட்சி இந்து மகளிர் கல் லூரி),வி.கஜானா ( உடுப்பிட்டி அ.மி.த.க பாடசாலை)

**17 வயது பிரிவு (ஆண்)**

சி.நித்திகன்,எஸ்.துளசிகன் ,ஆர். லோஜி தன் (ஹாட்லிக் கல்லூரி)

**19 வயது பிரிவு (ஆண்)**

க.மகிந்தன்,சொ.சஞ்சயன் ,இ.ஆனந்த கஜன் (ஹாட்லிக் கல்லூரி)

**திறந்த போட்டி (ஆண்)**

இ.மதுஷன் (ஹாட்லிக் கல்லூரி). வி. கஜன் ( உடுப்பிட்டி அ.மி.த.க பாடசாலை) . சு.சுமன்(உடுப்பிட்டி அ.மி.த.க பாடசாலை)

**திறந்த போட்டி (பெண்)**

வே. நிதர்சனா ( மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை) , செ.பிரமிலா (உடுப்பிட்டி நாவலடி) (அ- 3-24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கத் தூதுவரின் முன்மாதிரி...



சர்வதேச புவி தினம் நேற்று முன்னெடுக்கப்பட்டது. இவ்விழிப்பு நடவடிக்கையின் போது இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் மிச்சேல் ஜே.சிசன் கொழும்பு காலி முகத்திடலில் கோல்பேஸ் சுற்றுவட்டம் முதல் பழைய நாடாளுமன்ற கட்டடம் வரையிலான பகுதியில் காணப்பட்ட குப்பைகளை சேகரிப்பதைப் படத்தில் காணலாம்.

# இலங்கையுடன் உறவை பேண ருமேனியா ஆர்வம்

இலங்கையுடனான உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள ருமேனியா ஆர்வம் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையுடன் அரசியல் மற்றும் பொருளாதார உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள ருமேனியா விரும்புவதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

பயங்கரவாத ஒழிப்பின் பின்னர் நாடு அடைந்துள்ள அபிவிருத்தியை ருமேனிய வெளிவிவகார அமைச்சர் டைடுஸ் கொராலடீன் தெரிவித்துள்ளார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல்.பீரிசுக்கும் ருமேனிய வெளிவிவகார அமைச்சர் டைடுவிற்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. இதன்போதே இக்கருத்து வெளிப்பட்டு ள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரு நாடுகளுக்கும் இடையில் இரட்டை வரி அறவீடு தவிர்ப்பு உள்ளிட்ட சில உடன்படிக்கைகள் விரைவில் கைச்சாத்திடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ருமேனிய வெளிவிவகார அமைச்சரை இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு அமைச்சர் பீரிஸ் அழைப்பு விடுத்துள்ளார். அவர் அண்மையில் ருமேனியாவிற்கு விஜயம் செய்திருந்த போதே அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# சட்டவிரோதமான முறையில் குளத்து நீர் பெறப்படுகின்றது

பிரமந்தனாறு குளத்தை சூழவுள்ள விவசாயிகள் சட்டவிரோதமான முறையில் குளக்கட்டின் ஊடாக நீரைப் பெறுவதால் ஏனைய விவசாயிகள் பாதிக்கப்படுவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

புளியம்பொக்கணை கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட பிரமந்தனாறு குளம் கடந்த 2011 ஆம் ஆண்டு புனரமைக்கப்பட்டது.

இதன்மூலம் பிரமந்தனாறு கிராமத்திற்கு உட்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் மேட்டு நிலப் பயிர்ச் செய்கைக்கு சிறிய நீர்ப்பாசன கால்வாய்கள் அமைக்கப்பட்டு நீர் வழங்கப்பட்டது. ஆனாலும் பிரமந்தனாறு குளத்தை அண்மித்த சில விவசாயிகள் சட்டவிரோதமான முறையில் குளத்தின் அணைக்கட்டுக்கள் ஊடாக பெருமளவு நீர்பெற்று 20 ஏக்கர் காணியில் சிறுபோக நெற்செய்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால் மேட்டு நில விவசாயிகளுக்கு அதிக விளைச்சல் ஏற்பட்ட போதும் நீர் கிடைக்காமை காரணமாக அழிவடையக் கூடிய அபாயநிலை உள்ளது.

ஆகவே, நீர்ப்பாசன திணைக்களத்தினர் இந்நிலைமையை கருத்திற்கொள்ள வேண்டுமென விவசாயிகள் வேண்டுகோள் ஒன்றை முன்வைத்துள்ளனர். (அ-3-263)

# வைத்திய அதிகாரிகளுக்கு முகாமைத்துவ பயிற்சி

(கொழும்பு)

சுகாதார நிறுவனங்களில் பணிபுரியும் சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு முகாமைத்துவ பயிற்சியை வழங்குவதற்கு சுகாதார அமைச்சு முடி வெடுத்துள்ளது.

இதன்படி வைத்தியசாலைப் பணிப்பாளர், வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் மற்றும் கணக்காளர்கள் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு இந்த விசேட பயிற்சி வழங்கப்படவுள்ளது.

வைத்தியசாலை முகாமைத்துவம், பரிசோதனைகளை மேற்கொள்ளல், செயற்றிட்டங்களை ஒழுங்கமைத்தல் போன்ற பல பயிற்சிகள் இதன்போது வழங்கப்படவுள்ளன. (அ-2)

# அசாத் சாலியை குற்றப்புலனாய்வு பிரிவினர் நேற்று விசாரித்தனர்

(கொழும்பு)

தேசிய ஐக்கிய முன்னணி பொதுச் செயலாளர் அசாத் சாலி குற்றப்புலனாய்வு பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

நாட்டில் இனவாத மற்றும் மதவாதங்களைத் தூண்டும் வகையில் கையடக்கத் தொலைபேசி வழியாக குறுந்தகவல்களைப் பரப்பியமை தொடர்பாகவே அசாத் சாலியிடம் நேற்றைய தினம் விசாரணை நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது அண்மைக் காலங்களில் ஆங்கில ஊடக நிறுவனம் ஒன்றை சேர்ந்த ஊடகவியலாளர் ஒருவர் முஸ்லிம்கள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தும் வகையில் சுமார் 27 குறுந்தகவல்களைப் பரிமாறியுள்ளதாகவும் அவற்றில் மூன்று தகவல்கள் அசாத் சாலிக்கு அனுப்பப்பட்டுள்ளமை பற்றியும் கேள்வியெழுப்பினர்.

குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு தான் அளித்த பதில்கள் தொடர்பில் அசாத்சாலி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தினசரி நூற்றுக்கணக்கான குறுந்தகவல்களும் எனக்கு வருகின்றன. யார் என்ன தகவலை எப்போது அனுப்புகின்றார்கள் என்றெல்லாம் என்னால் நினைவில் வைத்திருக்க முடியாது.

நீங்கள் கேள்வி கேட்க வேண்டியது தகவல் அனுப்பியவரையே தவிர அதைப்பெற்றுக் கொண்ட என்னையல்ல. நாட்டில் குழப்பம் விளைவிப்பதும் விளைவிக்க முயல்வதும் பதற்ற நிலையை ஏற்படுத்துவதும் நாங்கள் அல்ல. அது யார் என்பதை நான் உங்களுக்கு ஆதாரபூர்வமாகக் காட்டுகின்றேன்.

அநுராதபுரம் தர்கா உடைக்கப்படுவது, தம்புள்ள பள்ளிவாசல் தாக்கப்படுவது உட்பட இன்னும் பல முஸ்லிம் விரோத செயற்பாடுகள் பற்றி தன்வசம் உள்ள படங்களை அவர்களுக்குக் காட்டியுள்ளார். உங்களது உயர் அதிகாரிகள் கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கையில்தான் இவ்வளவு அநியாயமும் இந்த நாட்டில் நடந்திருக்கின்றது. அவர்களை விசாரித்தால் இந்தச் சம்பவங்களின் பின்னணியில் யார் இருக்கின்றார்கள். அதில் எந்த அச்சமும் எனக்கில்லை.

நடந்த சம்பவங்களை பொலிஸாராகிய நீங்களே மூடி மறைக்கப்பார்க்கின்றீர்கள். இவை தொடர்பாக இதுவரை ஒருவரையாவது நீங்கள் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தியுள்ளீர்களா? என்றும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார். (அ-2)

# தலவாக்கலையில் ஆலங்கட்டி மழை

(கொழும்பு)

தலவாக்கலை பிரதேசத்தில் நேற்று பிற்பகல் 2 மணிமுதல் பெய்த மழையுடன் பனிக்கட்டிகளும் விழுந்துள்ளன. தற்போது நிலவும் கடும் வெப்பமான காலநிலைக்கு மத்தியில் பெய்த இந்த ஆலங்கட்டி மழையை மக்கள் மிக அதிசயத்துடன் பார்வையிட்டுள்ளனர்.

தலவாக்கலை பிரதேசத்திற்கு ஆழங்கட்டி மழை பெய்தமை அதிசயம் என அங்குள்ளவர்கள் தெரிவிக்கின்றனர். இந்த பனிக்கட்டிகள் சுமார் 15 விநாடிகள் வரை காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)


கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: கார்த்திகை 3,<br>12 இல் செவ்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: Engineer<br>கனடா<br>தொ.இ: B -1674 | பிறப்பு: 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: புனர்பூசம் 2<br>உயரம்: 5'<br>கி.பா:27.5, 2 இல் செவ்<br>தகைமை/ தொழில்: A/L<br>தொ.இ: G -1688 |
| பிறப்பு: 1986 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அனுசம்<br>உயரம்: 167 cm<br>கி.பா: 33.75<br>தகைமை/தொழில்: A/L<br>(கணனி வேலை சொந்தம்)<br>முன்னாள் மிதிவெடி (டெனிஸ்)<br>தொ.இ: B -1675 | பிறப்பு: 1988 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: உத்தராடம் 2<br>உயரம்: 5'6"<br>தகைமை/ தொழில்: LLB (Hons)<br>தொ.இ: G-1689 |
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 2<br>உயரம்: 5'5"<br>கி.பா: 26.25<br>தகைமை/ தொழில்: Computer Engineering (Hons)<br>Manager in UK(Double PR)<br>தொ.இ: B -1676 | பிறப்பு: 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூராடம் 3,<br>1இல் செவ்<br>உயரம்: 5'4"<br>தகைமை/ தொழில்: MBBS<br>(கனடா PR) தனியார் வைத்தியசாலை<br>தொ.இ: G -1695 |
| பிறப்பு: 1986 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: கார்த்திகை 2<br>உயரம்: 5'5"<br>கி.பா: 59, 7 இல் செவ்<br>தகைமை/தொழில்: A/L<br>தபால் ஊழியர், பயிற்றுவிப்பாளர்<br>(பாடசாலை தனியார்)<br>தொ.இ: B -1678 | பிறப்பு: 1989 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: கார்த்திகை 2,<br>1இல் செவ்<br>கி.பா: 56.25,<br>தகைமை/ தொழில்: A/L<br>தொ.இ: G -1697 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநலவாய மாநாடு இலங்கையில் நடக்குமா?

(கொழும்பு)

கொழும்பில் நடத்தப்படவுள்ள பொதுநலவாய நாடுகளின் மாநாடு வேறொரு நாட்டுக்கு மாற்றப்படக்கூடிய சாத்தியங்கள் ஏற்பட்டுள்ளதாக ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை லண்டனில் நடைபெறவுள்ள பொதுநலவாய அமைச்சு செயற்குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும் இந்தக் கூட்டத்தின் போது இலங்கை விடயம் தொடர்பில் பேசுவதற்கு முன்னதாக தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை.

எனினும் கடந்த வாரம் தென்னாபிரிக்காவில் இடம்பெற்ற பொதுநலவாய நீதித்துறை மாநாட்டின் போது இலங்கை தொடர்பில் முக்கிய தீர்மானங்களை நிறைவேற்றி இருந்தனர்.

அதில் இலங்கையை பொதுநலவாய அமைப்பில் இருந்து நீக்க வேண்டும் எனவும் கொழும்பில் நடத்தவுள்ள மாநாட்டை இடமாற்றம் செய்ய வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன் எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறவுள்ள அமைச்சரவை செயற்குழு கூட்டத்தில் இலங்கை விடயம் பேசப்பட வேண்டும் என்றும் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை இலங்கை விடயத்தை அமைச்சரவை செயற்குழு விவாதிக்கவுள்ளது.

இதன்போது பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை இலங்கையில் நடத்துவதா? இல்லையா? என்பது தொடர்பில் முக்கிய தீர்மானம் எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

## தேவாரப் பண்ணிசைப் பயிற்சி

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினால் நடத்தப்படும் இலவச தேவாரப் பண்ணிசைப் பயிற்சி வாராந்தம் சனி, ஞாயிறு, செவ்வாய்க் கிழமைகளில் நடைபெற்று வருவதாக மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி அறிவித்துள்ளார். இதன் பிரகாரம் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 3 மணி தொடக்கம் 4.30 மணிவரை யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் பிற்பகல் 4.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை யாழ். சிவதொண்டன் நிலை அறுபத்தி மூவர் நாயன்மார் மண்டபத்திலும் நடைபெறும். செவ்வாய்க்கிழமைகளில் பிற்பகல் 5 மணி தொடக்கம் மாலை 6.30 மணிவரை யாழ். சிவ தொண்டன் நிலைய கொழும்புத்துறை மகளிர் ஆச்சிரமத்திலும் இலவசத் தேவாரப் பண்ணிசைப்பயிற்சிகள் இடம்பெற்று வருகின்றன.

இப் பயிற்சி வகுப்புக்கள் யாவும் அகில இலங்கைத்திருமுறை மன்றம், வட இலங்கை சங்கீத சபையினதும் பாடவிதானங்களுக்கு அமைவாக நடைபெறுவதாகவும் குறித்த பயிற்சி வகுப்புகளில் ஆண், பெண் இருபாலாரும் மூத்தோர், இளையோர், மாணவர்கள் ஆகியோர் அனைவரும் இதில் கலந்து கொண்டு பயன்பெறமுடியுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

# வடக்குத் தேர்தலை எதிர்கொள்ள அரசாங்கம் தயார்- அமைச்சர் பசில்

(கொழும்பு)

வடக்கு மாகாண சபைத் தேர்தல் இவ்வருடம் நடைபெறவுள்ள நிலையில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தேர்தலுக்கு ஆயத்தமாகிவிட்டது. நீல அலை என்ற வேலைத்திட்டத்தின் கீழ் வடக்குத் தேர்தலை எதிர்கொள்வதற்கான திட்டம் ஒன்றை ஆளும் கட்சி தயாரித்துள்ளது.

எதிர்வரும் மே தினத்திற்கு பின்னர் அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவோம் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாண சபைத் தேர்தலில் எதிரணியினர் எந்த வேட்பாளரையாவது நிறுத்தி வெற்றிபெற்று காட்டட்டும். தேர்தலில் போட்டியிட முயற்சிக்கும் தனிநபர் வேட்பாளர்கள் குறித்து நாங்கள் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை.

புலிகளுக்கு கடந்த காலங்களில் வக்காளத்து வாங்கியவர்களுக்கு வடக்குத் தேர்தலைக் கோர எந்த அருகதையும் இல்லை. வட மாகாண சபைத் தேர்தலுக்கு ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆயத்தமாகி விட்டது.

இதற்கான தயார்ப்படுத்தலில் நாங்கள் ஈடுபட்டு வருகின்றோம். குறிப்பாக வடக்குத் தேர்தலை எதிர்கொள்வதற்கான திட்டம் ஒன்றை ஆளும் கட்சி தயாரித்துள்ளது.

அத்துடன் எதிர்க்கட்சிகள் எந்தவொரு பலமான வேட்பாளரையும் வடக்குத் தேர்தலில் நிறுத்தி வெற்றிபெற்று காட்டட்டும். எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி எந்தவொரு பலமான வேட்பாளரையும் நிறுத்தி வெற்றியீட்டட்டும் என சவால் விட்டுள்ளார்.

ஆயினும் மக்களின் ஜனநாயக உரிமைகளை உறுதிப்படுத்தும் நோக்கில் அரசாங்கம் தேர்தல்களை உரிய நேரத்தில் நடத்தும் எனவும் கூறினார். (அ-2)

# இலங்கையின் அமைதியை சிலர் சீர்குலைக்க முயற்சி!

மேற்கத்தேய செல்வந்த நாடுகள் ஆசிய நாடுகளின் சமாதானத்தை குழப்பும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

பெருந்தோட்டத்துறை அமைச்சரும் மனித உரிமைகள் பிரதிநிதியுமான மஹிந்த சமரசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஆசிய நாடுகள் சமாதானத்துடன் அமைதியாக இருந்து வந்தன. எனினும் மேற்கத்தேய நாடுகள் இலங்கை போன்ற அமைதியான நாடுகளில் அமைதியற்ற சூழ்நிலையை ஏற்படுத்த பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

இதன்மூலம் அந்த நாடுகள் சுயலாபம் அனுபவித்து வருகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன் அடிப்படையிலேயே இலங்கை மீதும் அமெரிக்கா போன்ற பல்வேறு நாடுகள் அழுத்தங்களை பிரயோகிக்க முற்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார். (அ-2)

# மின்கட்டண உயர்வு குறித்து தகவல்களை வெளியிடுக

## டிரான் பெரன்சி நிறுவனம் கோரிக்கை

(கொழும்பு)

மின்சாரக் கட்டண உயர்வு தொடர்பில் சாட்சியங்களுடன் தகவல்கள் வெளியிடப்பட வேண்டுமென டிரான் பெரன்சி இன்டர் நஷனல் நிறுவனம் கோரிக்கை விடுத்துள்ளது.

எவ்வாறான சாட்சியங்களின் அடிப்படையில் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு மின்சாரக் கட்டண உயர்விற்கு அனுமதி அளித்தது என்பது பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்.

பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு வெளிப்படைத்தன்மையுடன் செயற்படவில்லை.

மக்கள் வழங்கிய சாட்சியங்களுக்கு புறம்பான வகையிலேயே விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அனைத்து நுகர்வோரின் உரிமைகளையும் உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என டிரான் பெரன்சி இன்டர்நஷனல் நிறுவனம் அறிவித்துள்ளது. (அ-2)

# மின்கட்டண உயர்வுக்கு எதிராக நேற்று போராட்டம்

நாட்டில் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டமைக்கு எதிராக நேற்று இரவு ஜே.வி.பியினர் தீப்பந்தம் ஏந்தி மஹரகமவில் போராட்டம் நடத்தியதாக ஜே.வி.பியின் செயலாளர் விஜித் ஹேரத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்புட்ட புதிய மின்சாரக் கட்டணம் தற்போது அமுலாக்கப்பட்டுள்ளது.

மே மாத மின்சாரக் கட்டணம் இதுவரையில் பாவித்து வந்த மின்கட்டணத்தை விட மூன்று மடங்கு அதிகமாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் நிர்வாகத்திறன் இன்மையே இந்த மின்சாரக் கட்டண அதிகரிப்புக்கு காரணம் என்று ஜே.வி.பி.குற்றம் சுமத்தியுள்ளது.

இந்த நிலையில் இதற்காக பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்று தெரிவித்து ஜே.வி.பியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (அ-2)

# இந்திய குடியுரிமை வழங்குமாறு தமிழக அகதிகள் கோரிக்கை

தமிழக முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் தங்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இரண்டு தசாப்த காலமாக தாம் தமிழகத்தில் வாழ்ந்து வருவதாகவும் தொடர்ந்தும் தம்மை அகதிகள் எனக் குறிப்பிடுவதனை விரும்பவில்லை எனவும் இலங்கை அகதிகள் தெரிவித்துள்ளனர்.

தமது பிள்ளைகள் பாடசாலைகளில் சிறிய குற்றங்கள் செய்தாலும் அவர்கள் அகதிகள் என தூற்றப்படுவதாகவும் அகதிகள் என்ற முத்திரை குத்தப்பட்ட காரணத்தினாலேயே தாம் பல்வேறு வழிகளில் துன்புறுத்தலுக்கு உள்ளாகி வருவதாகவும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதனால் தமக்கு பெரும் விரக்தி ஏற்பட்டுள்ளதாகவும் உடனடியாக தமக்கு குடியுரிமை வழங்கப்பட வேண்டுமெனவும் தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கை தமிழ் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# ரணில் நாடு திரும்பியவுடன் இங்கு போராட்டம் வெடிக்கும்

(கொழும்பு)

தற்போது மக்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியதும் கலந்துரையாடப்புட்டு உடனடி தீர்வு எட்டப்படும் என அக்கட்சி அறிவித்துள்ளது.

மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டமையின் காரணமாக மக்கள் பெரும் சுமைக்குள் தள்ளப்பட்டுள்ளதாகவும் இதற்கு எதிராக மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்து தாம் கவனம் செலுத்தி வருவதாகவும் ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டமையினால் ஏற்படும் விளைவுகள் குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்துதல், நாடு முழுவதிலும் மக்கள் போராட்டங்களை ஏற்படுத்துதல் என மின்சாரக் கட்டண அதிகரிப்பிற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தமது கட்சி தயாராக இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதான பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

வெளிநாட்டுப் பயணமொன்றை மேற்கொண்டுள்ள கட்சித் தலைவர் ரணில் சில தினங்களில் நாடு திரும்புவார் எனவும் அவர் நாடு திரும்பியதும் இந்நடவடிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும் எனவும் அப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் மின்சாரக் கட்டண அதிகரிப்பிற்கு எதிரான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் சுட்டிக் காட்டினார். (அ-2)

# சம்பூர் அனல்மின் நிலைய பணிகள் எதிர்வரும் ஜூலையில் ஆரம்பம்

சம்பூர் அனல் மின் நிலையத்தில் 500 மெகாவோட்ஸ் மின்சாரத்தை பெற்றுக் கொள்வதற்கான பணிகள் எதிர்வரும் ஜூலையில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மின்சக்தி மற்றும் மின்வலு அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அதிகரித்து வரும் மின் பாவனைக்காக அனல் மின் நிலைய திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன்படி இலங்கையின் இரண்டாவது அனல் மின் நிலையமாக சம்பூர் அனல் மின் நிலையம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

சம்பூர் அனல்மின் நிலையத்தினை இலங்கை மின்சார சபையும் இந்தியா என்.ரீ.பீ.சி. கம்பனியும் இணைந்து உருவாக்க திட்டமிட்டுள்ளதுடன் இதற்கான கூட்டு ஒப்பந்தம் 2011 ஆம் ஆண்டு செப்டெம்பர் 6 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு உயிர்களை பலியெடுத்த காதல்



(நேற்றைய தொடர்ச்சி...)
மூத்த மகள் அதில் ஒரு கவளத்தை வாயில் வைத்து விட்டு கசக்கிறது அம்மா என்று உணவைத் துப்பியுள்ளாள். தாயார் உனக்கு சாப்பிட விருப்பம் இல்லாட்டிஇப்படித்தான் சொல் லுவாய் என்று கடிந்து கொண்டதாக கூறப்படுகிறது. பின்னர் தந்தை ரகுவும் உணவை உண்டபோது ஏதோ ஒரு கசப்புத் தன்மை காணப்படுவதை உணர்ந்தார்.

அன்றிரவு ரகுவும் மனைவி யும் வழமைபோல் ஓர் அறையி லும் இளைய மகள் மற்றைய அறையிலும் உறக்கத்திற்குச் சென்று விட்டார்கள். அத்தினம் நள்ளிரவுக்குச் சற்று முன்னதாக இளைய மகள் தொலைபேசி மூலம் தனது காதலனுடன் தொடர்பில் இருந்திருக்கிறார். அவர்களை அழைத்து வீட்டின் முன் கதவை திறந்து ஒத்துழைப்பு வழங்கியிருக்கிறாள். கொலையாளிகள் உள்ளே நுழைந்து படுக்கையறைக்குள் சென்று கைத்தொலைபேசி வெளிச்சத்தின் உதவியுடன் கட்டிலில் படுத்துக் கொண்டிருந்த விப்ராவை அடையாளங்கண்டு தாக்கி கழுத்தை அறுத்துள்ளனர். இச்சமயம் அருகில் படுத்திருந்த ரகு எழுந்து கொலையாளிக ளுடன் போராடியுள்ளார். கொலையாளிகளிலொருவர் ரகுவின் வாயைப் பொத்தியுள் ளார். அந்தநேரம் ரகு கொலை யாளியின் கையைக்கடித்து காயப்படுத்தியுள்ளார். கொலை யாளிகள் ரகுவைப் பொல்லால் கடுமையாகத் தாக்கி கழுத்தையும் அறுத்துள்ளார்கள். அச்சமயம் தாக்கும் சத்தம் கேட்டு விப்ராவின் தந்தை சுந்தரமூர்த்தி மகளின் வீட்டிற்கு வந்தபோது படுக்கை யறையில் மின்விளக்கு வெளி ச்சத்தில் ரகுவை பொல்லால் அடிப்பதை அவதானித்தார். அதனைக் கண்டதும் அவருக்கு இரத்த அழுத்தம் அதிகரித்து விட்டது. மூச்சுத் திணறல் ஏற் பட்டது. செய்வதறியாது தடு மாறினார். உடனடியாக திரும்பி தனது வீட்டிற்குச் சென்று மருந்து உட்கொண்டு விட்டு மீண்டும் வந்தபோது நபரொருவர் ஓடுவதை அவதானித்திருக்கிறார். அப்போது மகளின் வீட்டுக்கத வின் குறுக்குப் பொல்லு விழுந்த சத்தமும் கேட்டது. அவ்வேளை வீட்டில் படுத்திருந்த தலக்ஷனா அம்மா அம்மா என்று கூப்பிடும் சத்தம் கேட்டதும் சுந்தரமூர்த்தி சத்தம் போட வேண்டாம் மகள் வந்து குசினிப்பக்க கதவைத் திற என்றார். உள்ளே வந்து பார்த்த போது மகளும் மருமகனும் இரத்த வெள்ளத்தில் கிடப்பதைக் கண்ணுற்றார். அயல் வீட்டாரை அழைத்தார். எவருமே வரவில்லை. வீட்டின் முன்னால் இருந்த செங்கலடிப் பிரதேச வைத்தியசாலைக்குச் சென்று நிலைமையைக் கூறினார். அங்கு செங்கலடிச் சந்திப் பொலிஸாரிடம் கூறுமாறு ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள் ளது. அதன் பின்னர் பொலிஸார் வந்து பார்வையிட்டனர்.

இந்த இரட்டைக் கொலைச் சம்பவம் தொடர்பாக மக்கள் மத்தியில் பல்வேறு ஊகங்கள் உலாவின. முன்னாள் ஆயுதக் குழுக்களுடன் தொடர்புடைய வர்கள் யாராவது சம்பந்தப் பட்டிருக்கலாம்? குடும்பத்தில் யாராவது பின்னணியில் இருந் திருக்கலாம்? வர்த்தகப் போட்டி யாக இருக்கலாம்? என்று சந்தேகங்கள் நிலவின. இருந்தபோதிலும் தற்போது கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபரான இளைய மகள் தலக்ஷனாவின் நடவடிக்கைகள், முகபாவங்களைக் கண்டு மரணச்சடங்கிற்கு வந்த பலரும் அவளின் மீது சந்தேகப் பட்டு கண் புருவங்கள் சுருக்கிப் பார்த்தனர். ஏதேதோ பேசிக் கொண்டனர்.

இது தொடர்பான மரண விசாரணை ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிபதி ரி.கருணாகரன் முன்னிலையில் நடைபெற்றது. கொல்லப்பட்டவர்களின் இரண்டாவது மகள் தலக்ஷனா (தற்போது சந்தேக நபர்களில் ஒருவர்) சாட்சியமளிக்கையில், ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணியளவில் நான் அப்பா, அம்மா, அக்கா அனைவரும் சித்திரைப் புத்தாண்டிற்காக உடுப்பு எடுக்க மட்டக்களப்பிற்குச் சென்று அன்றிரவு 7 மணிக்கு பின்பு வீட்டிற்கு வந்தோம். அக்கா அம்மம்மா வீட்டில் உறங்கச் சென்றார். எங்கள் அம்மா அக்காவிற்கு இரவுச் சாப்பாடு எடுத்துச் சென்றார்.


அக்கா கொஞ்சம் சாப்பிட்டுப் பார்த்து விட்டு கறி கசக்கிறது என்றார். அதற்கு அம்மா உனக்கு இதுதான் கதை என்று சொன்னார். அப்பாவும் கறியைச் சாப்பிட்டுவிட்டு ஓம் கசக்கிறதுதான் என்றதும் அக்கறியை வீசி விட்டோம். அதன் பின்பு அம்மம் மாவின் வீட்டில் ஆட்டிறைச்சிக் கறியை சாப்பிட்டோம்.


அத்தினம் நள்ளிரவு வேளையில் அலறல் சத்தம் கேட்டது. நுளம்பு வலைக்குள் இருந்தவாறு அம்மாவைக் கூப்பிட்டேன். வாசலில் நின்று அம்மப்பா என்னைக் கூப்பிட்டு குசினிக் கதவைத் திறக்குமாறு கேட்டார், திறந்தேன். அதன் பின்னர் படுக்கையறையை அவதானித்தேன். அம்மா கட்டிலிலும் அப்பா நிலத்திலும் இரத்த வெள்ளத்தில் காணப்பட்டனர் என்றார்.

இது தொடர்பான மரண விசாரணை ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிபதி ரி.கருணாகரன் முன்னிலையில் கொலை செய்யப்பட்ட பெண்ணின் தந்தை பொன்னுத்துரை சுந்தரமூர்த்தி சாட்சியமளிக்கையில்,

சம்பவதினம் நள்ளிரவு வேளையில் அடிக்கும் சத்தம் கேட்டது. எழுந்து முன்னால் இரு ந்த மகளின் வீட்டைப் பார்த்தேன். ஆள் அலறும் சத்தமும் வந்தது. உடனே குசினிப் பக்கம் சென் றேன். கதவுகள் மூடிய நிலையி லேயே இருந்தன. ஜன்னல் ஊடாக படுக்கையறையைப் பார்த்தேன். மருமகனுக்கு ஒருவன் அடித்துக் கொண்டு இருந்தான். மின் விளக்கு எரிந்தபோதிலும் ஜன்னலின் சிறிய துவாரத்தினால் அங்கு அடித்துக்கொண்டு இருந்த நபரை அடையாளம் காண முடியவில்லை. நான் அதிர்ச்சி அடைந்து செய்வதறியாது அங்கு மிங்கும் ஓடினேன். அப்படியிருக்க கதவு மூடும்போது தடியொன்று விழும் சத்தம் கேட்டது. அதை அடுத்து ஒரு நபர் ஓடிச் செல்வதைக் காண முடிந்தது. நான் மகளின் வீட்டிற்குச் சென்று தம்பி தம்பி என்று மருமகனைக் கூப்பிட்டேன். எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. பின்னர் மகள் மகள் என்று கூப்பிட்டேன் பதில் எதுவுமில்லை. அப்படியிருக்க அவ்வீட்டில் உறங்கிய பேர்த்தி எழுந்து வந்து கூப்பிட்டாள். நான் சத்தமிட்டு குசினிப் பக்கக் கதவைத் திறக்கச் சொன்னேன். திறந்து என்ன அம்மப்பா என்று கேட்டாள். ஒன்றுமில்லை ஒன்றுமில்லை என்று கூறிவிட்டு மகளின் படுக்கையறைக்குச் சென்றேன். அங்கு மகளும் மருமகனும் இரத்த வெள்ளத்தில் கிடந்தனர்.

உடனே அக்கம் பக்கத்த வர்களை அழைத்தேன். எவரும் வரவில்லை. முன்னால் உள்ள ஆஸ்பத்திரிக்குச் சென்று நிலைமையைக் கூறினேன்.





அங்கு பொலிஸாருக்கு அறிவிக்கும் படி தெரிவித்தார்கள். ஓடோடிச் சென்று செங்கலடி சந்தீ யில் கடமையிலிருந்த பொலிஸா ரிடம் சம்பவத்தைக் கூறினேன். விரைந்து வந்து பார்த்தார்கள். இவ்வளவு தான் என்னால் கூற முடியும் என்றார்.

மரண விசாரணைசாட்சி யங்கள் மற்றும் பிரேத பரிசோதனை அறிக்கையின் படி இரண்டு மரணங்களும் கொலை என தீர்ப்பளிக்கப்பட்டது.

இந்த இரட்டைக் கொலை தொடர்பாக பொலிஸார், உறவினர்கள், அயலவர்கள், பாடசாலைச் சமூகம் மற்றும் சக மாணவர்கள் என பலரையும் விசாரணைக்குட்படுத்தியதாகவும் இருவர் இரகசிய பொலிஸாரினால் விசாரணைக்கென கொழும்புக்கு அழைத்து செல்லப்பட்டதாகவும் அறிய முடிகிறது.

இந்த விசாரணைகளின்படி பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் பிரகாரம் புத்தாண்டிற்கு முதல் நாள். 13 ஆம் திகதி குமரசிங்கம் நிலக்சன் என்பவர் செங்கலடி-பதுளை வீதியிலுள்ள கித்துள் பிரதேசத்தில் அவரது வீட்டிலிருந்த நிலையில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

இவரிடம் மேற்கொண்ட விசாரணையை அடுத்து படுகொலை செய்யப்பட்டவர் களின் இளைய மகள், அவளது காதலன் மற்றும் நண்பர் என சந்தேக நபர்கள் புதுவருடத்தின மன்று கைது செய்யப்பட்டார்கள். இவர்களிடம் விசாரணை மேற்கொண்ட போது திடுக்கிடும் பல தகவல்கள் வெளியாகியதாக பொலிஸார் கூறினர்.

இக் கொலை தொடர்பாக பொலிஸ்தரப்பு தகவல்கள் மூலம் தெரிய வருவதாவது, கொலையாளிகள் அஜந்தின் வீட்டிலிருந்த கத்திகள் மற்றும் கோடரிப்பிடி, முகமூடி, கையுறை, காலுறை, தூக்கமாத்திரை மற்றும் மிளகாய்த் தூள் போன்றவற்றை பாடசாலைப் பையில் எடுத்துக் கொண்டு செங்கலடிப் பிள்ளையார் கோவில் பகுதியில் மறைத்து வைத்துள்ளனர்.

அதன் பின்னர் சந்தை வீதியிலுள்ள சுமனின் வீட்டிற்குச் சென்று பிறந்த நாள் வைபவ வீடொன்றில் சோடனை செய்வதற்காகச் செல்வதாகக் கூறி அவரையும் அழைத்துக் கொண்டு பிள்ளையார் கோவில் மதில் பகுதியில் பதுங்கியிருந்து தலக்ஷனாவுடன் எஸ்.எம்.எஸ். மூலம் தொடர்பு கொண்டுள்ளனர். பெற்றோர் உறங்கி விட்டனர். வரலாம் என எஸ்.எம்.எஸ். வந்தவுடன் இவர்கள் மூவரும் ஆயுதங்களுடன் வீட்டின் முன் மதிலால் பாய்ந்து வளவிற்குள் சென்றதும் தலக்ஷனா முன் வாசல் கதவைத் திறந்து உள்ளே வரவழைத்து பெற்றோரின் படுக்கையறையைத் திறந்து விட்டுள்ளார். இந்த நேரம் ரகுவின் வீட்டு நாய் குசினிக் கதவருகில் நின்று குரைத்துக் கொண்டிருந்தது. தலக்ஷனா நாயைக் கட்டுப்படுத்தியுள்ளார்.

கொலையாளிகள் வெளியேறிய பின்னர் கையுறைகள், முகமூடிகள், கொலைச் சம்பவத்தின்போது இவர்கள் அணிந்திருந்த ஆடைகள் அம்மன்புரம் ஆற்றோரம் பிரம்புப் புதருக்குள் புதைக்கப்பட்டிருந்தன.

இவர்களிடம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது வர்த்தகரின் மகள், ஒன்றுக்கு மேற்பட்ட சிம்களை பயன்படுத்தி வெவ்வேறு இலக்கங்களில் தொடர்புகளை ஏற்படுத்தி இருந்ததாக அறிய முடிகிறது. தலக்ஷனா சந்தேகத்தின் பேரில் கைது செய்யபபட்டபின்பு பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலத்தில், நான் அஜந் என்பவரை காதலித்தது உண்மை. முகமூடி அணிந்து அவர்களை மிரட்டுவதற்காக அவர்களை வரச் சொன்னேனே தவிர கொலை செய்யும் நோக்கத்திற்காக அல்ல. இவர்களது நடமாட்டத்தைக் கண்டு நாய் குரைத்ததும் வெளியே வந்து நாயைக் கலைத்துவிட்டு மீண்டும் வீட்டிற்குள் வந்து பார்த்த போது அம்மா இறந்து கிடந்தார். அப்பாவை அஜந் அடித்துக் கொண்டிருந்தார். சத்தம் கேட்டு பக்கத்து வீட்டில் வசிக்கும் பாட்டனார் வந்த வேளை மூவரையும் அனுப்பிவிட்டு நான் பயத்தினால் எனது அறையைப் பூட்டிவிட்டு தூங்கிவிட்டேன் என தெரிவித்துள்ளதாக பொலிஸ் தகவல்கள் மூலம் அறிய முடிகின்றது.

குருவி மற்றும் அயன் போன்ற சினிமாப் படங்களைப் பார்த்து இந்தக் கொலைக்கான முன்மாதிரியை அறிந்து கொண்டதாக சந்தேக நபர்கள் கூறியுள்ளனர்.

ரகு தம்பதியினரை மர்மமான முறையில் கொலை செய்வதற்கு ஏற்கனவே இவர்கள் திட்டமிட்டிருந்ததாகவும் தெரிய வந்துள்ளது. கடந்த மார்ச் 27 ஆம் திகதி தூக்க மாத்திரையை உட்கொள்ளச் செய்துவிட்டு தலையணையால் அமுக்கி கொலை செய்த பின்னர் தகப்பனைக் கிணற்றுக்குள் போட்டுக் கொலை செய்வதாக திட்டம் ஒன்று இருந்தது. அப்போது ரகு தனது மனைவியைக் கொன்றுவிட்டு தான் தற்கொலை செய்து விட்டாரென தகவல் வெளியாகும்.

இதன்மூலம் தான் தப்பிக் கொள்ளலாம். தமது காதலும் சிரமமின்றி நிறைவேறும் என இவர்கள் எண்ணி இருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. எனினும் தற்போது இடம்பெற்றுள்ள திட்டங்கள் செங்கலடி மத்திய கல்லூரி மற்றும் பிரைட் ரியூசன் சென்ரரிலும் வகுக்கப்பட்டது. கொலை செய்வதற்கான நுட்பத்தை அறிந்து கொள்வதற் காக இணையத் தளங்களைப் பயன்படுத்தி உள்ளதாக கைது செய்யப்பட்ட மாணவர்கள் தெரிவித்துள்ளனர். குற்றவாளி கள் யார் என்பதை நீதிமன்றம் தீர்மானிக்கும் வரை உறுதியாக எதனையும் கூற முடியாது என்பதே யதார்த்தம். எது எவ்வா றிருப்பினும் செங்கலடியில் இடம்பெற்ற இரட்டைக் கொலை இக்காலகட் டத்தில் அனைவரது உள்ளங் களையும் உலுக்கியி ருக்கும் என்பதில் ஐயமில்லை.

(முற்றும்)

நன்றி : வீரகேசரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குந்தகம் செய்யும் குடற்புழுக்கள்

உடல்நலக் கோளாறு என்று பொது மருத்துவரை அணுகும் நூறு நோயாளிகளில் அறுபதுக்கும் மேற்பட்டோர் இரைப்பை மற்றும் குடல் சம்பந்தமான நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களாகத்தான் இருக்கிறார்கள். எஞ்சியுள்ளோர் மட்டுமே வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் ஆவர்.


நாடாப்புழு

நம்மவர்கள் வயிறு மற்றும் சமிபாடு சம்பந்தமாக என்ன பிரச்சினை வந்தாலும் அதை அல்சர் என்று பொதுவாகக் கூறுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். ஆனால் அல்சர் என்பதைத் தாண்டி டிஸ்பென்சியா எனப்படும் ஒரு வகையான குடல் நோயாலும் மனிதர்கள் வெகுவாக பாதிக்கப்படுகிறார்கள் என்பதுதான் உண்மை. டிஸ்பென்சியா என்பது உண்ட உணவு வகைகள் சமிபாடு ஆகாத காரணத்தைக் கொண்ட ஒருவகைகுறைபாடு. ஒழுங்கான உணவு பழக்கவழக்கங்களின் மூலமும் சுகாதார மான வாழ்வியலின் மூலமும் இது போன்ற நோய்களில் இருந்து எம்மை காத்துக் கொள்ள முடியும் என்பது தான் பேருண்மை. எவ்வளவு வேலைப் பழுவாக இருந்தாலும் உணவைச் சரியான நேரத்தில் உண்பது அவசியம். எண்ணெயில் பொரித்த உணவு வகைகளைத் தவிர்த்திடுவது, கண்ட கண்ட நேரங்களில் சாப்பிடுவது போன்ற சின்னச்சின்ன கட்டுப்பாடுகளால் டிஸ்பென்சியாவினைத் தவிர்த்திட முடியும்.

இது எல்லாவற்றையும் விட குடலில் தங்கிவிடும் குடல் புழுக்களால் தான் வயிற்றுப்போக்கு, நீர்ப் போக்கு போன்ற பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. இந்த குடற் புழுக்களால் அதிக


முள்புழு

பாதிக்கப்படுவது சிறுவர்கள்தான். தரையில் உருண்டு புரண்டு விளையாடிவிட்டு வீடு திரும்பும் சிறுவர்கள் சரியாக கை கால்களை தூய்மைப் படுத்தாமல் உணவு உட்கொள்வதன் மூலம் இந்த குடற்புழுக்கள் உருவா கின்றன.

முதலில் என்னஎன்ன வகையான குடற்புழுக்கள் இருக்கின்றன என்பதைப் பார்ப்போம்.

கொக்கிப்புழு (Hook Worms), நூற்புழு (Thread Worms,) முள்புழு Pin Worms, உருளைப்புழு (Round Worms), நாடாப்புழு (Tape Worms )என பலவகையான குடற்புழுக்கள் உள்ளன.

இதில் பெரும்பாலும் நாடாப் புழுக்களும் உருளைப்புழுக்களும் சிறு குடல் மற்றும் பெருங்குடல் பகுதிகளில் அதிகமாக காணப்படும். இந்த வகைப் புழுக்கள் அதிகமாக குடலிலேயே உண்டாகின்றன. ஆனால் மற்ற வகை புழுக்களோ வெளியிலுள்ள சுற்றுச் சூழலில் இருந்து உடலுக்குள் வந்து இறங்குகின்றன. அப்படி வருபவை வயிற்றில் முட்டையிட்டு மேலும் பன்மடங்காகும் என்பதும் கவனிக்க


கொக்கிப்புழு

படவேண்டியதொன்று. புழுவகைகளில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு குணாதிசயங்களை கொண்டவையாகும். சில புழுக்கள் குடலில் தேங்கி நிற்கும். சில புழுக்கள் மற்ற உறுப்புகளை நோக்கி நகர ஆரம்பித்து அந்த உறுப்புக்கு ஊறு விளைவிக்கும்.

உலக சுகாதார அமைச்சின் சமீபத்திய ஆய்வுப்படி உலகில் 35 மில்லியன் பேர் குடல் புழுக்களால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதில் பெரும்பாலும் குழந்தைகள்தான் அதிலும் குறிப்பாக வெப்ப மண்டல பகுதிகளான ஆசியா மற்றும் ஆபிரிக்கா பகுதிகளை சேர்ந்தவர்கள் குடல் புழுக்களால் அதி கம் தாக்கப்படுகிறார்கள் என்கிறது அந்த ஆய்வு.

இந்த குடல் புழுக்கள் பலவகையான முறைகளில் பரவுகின் றன. அவற்றில் மிக முக்கிய காரணிகளாக இருப்பவை அசுத்தமான நிலமும் நீரும்தான்.

நிலத்தில் குழந்தைகள் விளையாடும் பொழுது மிகவும் நுண்ணிய புழுக்கள் குழந்தைகளின் உடலில் ஏறி தோலை ஊடறுத்து உள்ளே சென்று விடக்கூடும். இப்படி செல்பவை படிப்படியாக குடலை அடைந்து அங்கே ஒட்டுண்ணியாக வாழத் தொடங்கி பிரச்சினைகளைக் கிளப்ப ஆரம்பிக்கும்.

கிராமப்புறங்களில் ஆடு, மாடு என கால்நடைகளை குளிப்பாட்டுதல்,


உருளைப்புழு

மலசலம் கழித்தல் போன்றவற்றால் குளம், குட்டை நீர் மாசுடைகிறது. அந்த நீரையே குளிப்பதற்கும் குடிப்பதற்கும் பயன்படுத்தும் போது அதன் மூலமாக புழுக்கள் எளிதில் பரவும் அபாயம் உள்ளது. நகர்ப் புறங்களில் நீச்சல் கற்றுக்கொள்கின்றேன் என்று குளம்குட்டைகளில் விளையாடும் சிறுவர்கள் அதன் மூலமும் புழுக்களை இழுத்துக் கொள்கிறார்கள்.

மாறிவிட்ட உணவுக் கலாசாரத்தினால் சிறுவர்கள் மட்டுமன்றி இளைஞர்களும் கூட புழுக்களினால் வருகின்ற பாதிப்புக்களை சந்திக்க நேருகின்றது. செல்லப்பிராணிகளை கொஞ்சுவதாலும் மனிதர்களுக்கு புழுக்கள் தொற்றிக் கொள்கின்றன.

இங்கே சொல்லப்பட்டுள்ள அத்தனை பாதிப்புக்களும் இளஞ் சிறார்களுக்குத்தான் எளிதாக பரவுகின்றது என்றாலும் அவர்களோடு நில்லாமல் பின்னர் வீட்டிலுள்ள பெரியவர்களையும் தொற்றிக் கொள்கின்றன. மேலும் இந்தப் புழுக்களில் மிகவும் சிறிய அளவிலானவையும் உண்டு. ஒரு மீற்றருக்கும் அதிகமான நீளத்தை கொண்டவையும் உண்டு. அதிலும் பெண்புழுக்கள் ஒரு நாளைக்கு பத்தாயிரம் முதல் 25 ஆயிரம் வரை முட்டைகள் இட்டு நோய்க்காரணியாக மாறும். இவற்றால் வயிற் றுப் போக்கு, நீர்ப்போக்கு போன்ற இன்னல்மிகு நோய்களைக் குழந்தைகள் சந்திக்க நேரலாம்.


புழுக்களைக் கண்டறிதலும் அதை சிகிச்சை அழிப்பதும் மிக எளிதான ஒன்று தான். புழுக்களால் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறதை உறுதி செய்ய நோயாளிகளின் மலத்தினை சோதனை செய்து அதில் புழுவின் முட்டைகள் உள்ளனவா என மருத்துவர்கள் ஆராய்வாய்கள். அப்படி மலத்தில் முட்டைகள் இருந்தால் வயிற்றில் புழுக்கள் இருப்பது உறுதி செய்யப்படும்.

மேலும் இவற்றுக்கு ஆரம்ப கட்டத்தில் சிகிச்சை அளிப்பது மற்ற நோய்களுக்கு சிகிச்சை அளிக்கும் அளவிற்கு அவ்வளவு கடினம் கிடையாது.

ஒருசில சிறு ஒட்டுண்ணிகளானது தானாகவே மறைந்து விடும். ஆனால் சில புழுவகைகளை ஒழிப்பதற்கு பல்வேறு நோய்த்தடுப்பு மற்றும் புழு எதிர்ப்பு மருந்துகளை உட்கொள்வது அவசியமாகும்.

மேலும் மருத்துவர்களின் பரிந்துரைப்படி உடற்குழாய் உள்நோக்கல் போன்ற நவீன மருத்துவ முறைகளால் புழுக்களை கண்டறிந்து நீக்கிவிட முடியும்.

இந்தப் புழுக்களை நாம் கண்டு கொள்ளாமல் அஜாக்கிரதையாக இருக்கும் பட்சத்தில் அவை அல்சர், சிஸ்பென்சியா போன்ற நோய்களில்


நூற்புழு

கொண்டு போய் அறுவைச் சிகிச்சையில் நிறுத்திவிடும்.

எனவே இவற்றை தடுக்க நாம் முறையான உணவுப் பழக்கவழங்களை மேற்கொள்ள வேண்டும். எப்போதும் காலணி அணிந்து வெளியில் செல்வது, கண்ட இடங்களில் விளையாடுவதை தவிர்ப்பது போன்ற விழிப்புணர்வு மிக்க செயல்களோடு சிறுவர்களை வளர்க்கும் பட்சத்தில் புழுக்களிடமிருந்து அவர்களை பாதுகாத்திட முடியும். மேலும் குழந்தைகளை மலசலம் கழித்த பின்னர் கைகளை சுத்தமாக கழுவ வேண்டும் என பெற்றோர்கள் அறிவுறுத்தல் வேண்டும்.

சிறார்கள் மட்டுமின்றி பெரியவர்களும் பயணங்களின் போது கண்ட கண்ட பானங்களை குடிக்காமலும் வீதியோர உணவகங்கள் மற்றும் பழக்கடைகளில் சாப்பிடாமலும் இருந்து புழுக்களின் தொற்றினால் வரும் நோய்களில் இருந்து தப்பித்துக்கொள்ளலாம்.




# காணாமற் போனோர் குறித்து ஜே.வி.பி. ஆய்வு

(கொழும்பு)

கடந்த 1987 ஆம் ஆண்டு தொடக்கம் 1989 ஆண்டு வரையான காலப்பகுதியில் காணாமற்போன தங்களின் உறுப்பினர்கள் குறித்து ஜே.வி.பி. உள்ளக ஆய்வினை மேற்கொண்டு வருகிறது.

இதற்கென விசேட சட்டத்தரணிகள் குழு ஒன்றையும் நியமித்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் இந்தக் காலப்பகுதியில் காணாமற் போனவர்களின் குடும்பத்தாரை சந்தித்து சாட்சியங்களைத் திரட்டி வருவதாக அதன் பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

மாத்தளை வைத்தியசாலைக்கு அருகில் அண்மையில் 150 இற்கும் மேற்பட்ட மனித எச்சங்கள் மீட்கப்பட்டிருந்தன.

இவையாவும் 1980 ஆம் ஆண்டுகளில் புதைக்கப்பட்டவை என்று இரசாயன பகுப்பாய்வுகளில் உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் அவை ஜே.வி.பி.யின் முன்னாள் உறுப்பினர்களுடையதாக இருக்கலாம் என்று ஜே.வி. பி. யினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையில் குறித்த விடயத்துக்கு சாட்சியமாக காணாமற்போன தங்கள் உறுப்பினர்களின் உறவினர்களை முன்னிறுத்த ஜே.வி.பி.நடவடிக்கை எடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# இலங்கையர்களுக்கு பொது மன்னிப்பு

(கொழும்பு)

சவுதியில் ஜெட்டா நகரில் அநாதரவான நிலையில் இருந்த இலங்கையர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது என சவுதி அரேபிய ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

பல்வேறு தொழில்களுக்காக இலங்கையில் இருந்து சென்ற சுமார் 6 ஆயிரம் பணியாளர்கள் தங்களின் தொழில்வாய்ப்பை இழந்த நிலையில் சவுதியில் அநாதரவாக்கப்பட்டனர்.

அவர்கள் அனைவருக்கும் இலங்கைக்கு திரும்புவதற்கான வாய்ப்புக்கள் கிட்டவில்லை.

இந்த நிலையில் அவர்கள் ஜெட்டா நகரில் உள்ள சேர்பியா பாலத்துக்கு அடியில் ஒன்று கூடி வசித்து வந்தனர் .

அவர்களை மீண்டும் இலங்கைக்கு அழைக்கும் முயற்சியில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணிமனை மேற்கொண்டிருந்தது.

இந்தநிலையில் அவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கி விரைவில் அவர்களை இலங்கைக்கு அனுப்ப சவுதி அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதாக சவுதி அரேபிய ஊடகம் ஒன்று இச் செய்தியினை வெளியிட்டுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாமன்னன் சங்கிலியன்

23


## காசி நயினார்

அந்த வயதில் அவளை மறக்க பரநிருபசிங்கனால் முடியவில்லை. நந்தாதேவி எவ்வளவோ தடுத்துப் பார்த்தாள். அவர் கேட்கின்ற நிலையில் இல்லை.

"நீங்கள் அரசகுமாரர். நாளைக்கு அரசனாவீர்கள். நான் கேவலம் ராணியின் சேடிப்பெண்...

இங்கு சந்தித்தார்.

"திடீரென தகப்பனார் ஊருக்கு அழைத்து வந்தார். உங்களிடம்சொல்லிக் கொள்ளவும் முடியவில்லை. இங்கு வந்த பிறகுதான் நான் கர்ப்பமாகியிருப்பது தெரிந்தது. காலம் கடந்துவிட்டது. துயரத்தோடு தந்தை காலமானார். நான் தனியனானேன்.



சங்கிலியன் கோட்டை கல்வெட்டு ஒன்று

குழந்தை அனாதையாக வளர்ந்தது. அரச சேவகத்தில் சேர்ந்தான். தனது தகப்பன் யார் எனக்கேட்பான். நான் இதுவரை யாரெனக் கூறவில்லை. உங்களை உயிருடன் கண்டுவிட்டேன். இனிக்கூறத் தடையில்லை. அவன் உங்கள் மூத்த மகன். ஒருநாட்டின் இளவரசன். ஒருவகையில் உங்களின் பின் அரசனாக வேண்டியவன். போகும்போது எங்களையும் கூட்டிப்போங்கள்" நந்தாதேவி அவனிடம் யாசித்தாள்.

பரநிருபசிங்கன் கோழையைப் போல அவர்களுக்குத் தெரியாமல் ஓடிவந்தமையை எண்ணிக்கொண்டார். கலியாணமாவதற்கு முன்னரேயே தான் ஒரு மகனுக்குத் தந்தையான செய்தியை அறிவிக்க அவர் விரும்பவில்லை. பரராசசிங்கனுக்கு மூத்தவன் ஒருவனை அறிமுகப்படுத்த அவர் விரும்பவில்லை. முறையற்ற வழியில் உறவான ஒருத்தி இருப்பதை அவர் காட்டிக் கொள்வதா? மாதவிதேவி நிச்சயமாகத் தாய் வீட்டிற்கு ஓடிவிடுவாள். அவ னால் மக்கள் முன் தலைகாட்ட முடியுமா?

புரவிகள் தளர் நடை பயின்றன.

"இவ்வளவு நடந்திருக்கிறதா?

சரிவராது. மலையும் மடுவும் ஒன்றாக முடியுமா? வேண்டாம் இளவரசே"

தீ பஞ்சோடு பற்றிக்கொண்டது. உண்மை தெரிந்துகொண்ட வள்ளியம்மை திகைத்துப்போனாள். அடுத்த கணமே நந்தாதேவியை தந்தையுடன் அனுப்பிவிட்டாள். ஆவலோடு அவளைக் காண வந்த அவர் அவளைக் காணாது தவித்தார். யாரிடம் கேட்பது? அப்போது நந்தாதேவி பரநிருபரின் மகவைச் சுமக்கத் தொடங்கியிருந்தாள். இருபத்தைந்து வருடங்களின் பின்னர் தான் முதன்முறையாக அவளை

நான் அண்ணரை அப்பாவி என நினைத்தேன்"

கனகராஜன் சிரித்தான்.

"இந்த விடயத்தில் அப்படி எண்ணக்கூடாது. இளமை உணர்வுகள் எல்லாவற்றையும் மறக்கடித்துவிடும். காமத்துக்கு முன் எல்லாம் அடிபட்டுப்போகும்"

"பரநிருபரின் மகன் பெயர் என்ன தெரியுமா?"

கனகராஜன் பேச்சை நிறுத்தினான்.


"சொல் கனகராஜா..."

"காசிநயினார்... காசி நயினார்... யாழ்ப்பாண முடிக்குப் புதியதொரு வாரிசு தோன்றியுள்ளது... அரசே. தனக்குத்தான் இந்த இராச்சியம் உரித்து என இப்பொழுது சொல்கிறானாம் இந்தக் காசிநயினார். அதில் ஆகச் சோகம்..."

"என்ன?"

"கோட்டைக்குப்போய் போர்த்துக்கேயரிடம் சரணடைந்துள்ளானாம். யாழ்ப்பாண இராசதானியின் முடியைதனக்குப் பெற்றுத் தரவேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளானாம். பெற்றுத்தந்தால் அவர்களைக் கோட்டை கட்டவும் மக்களை மதம் மாற்றவும் அனுமதிப்பதோடு, தான் மதம் மாறவும் தயாராம்"

"என் இராச்சியத்தில் எவர் மதம் மாறினாலும் என் வாளுக்கு இரையாக்குவேன்" என்று சூளுரைத்தான் சங்கிலி மன்னன். "தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட முதற்படியாக



அமைவது மதமாற்றம். மதம் மாற்றம் நிகழ்ந்தால் அந்நியரின் ஆதிக்கம் வலிய நிகழ்ந்துவிடும். மதம் மாறியவர்கள் போர்த்துக்கேயரின் ஊடுருவலிற்குத் துணை நிற்பார்கள். மதமாற்றத்தை அனுமதிக்கக் கூடாது. என் வாளுக்கு காசிநயினார் முதலில் இரையாகப் போகின்றான்"

### செங்கை ஆழியான்

அரண்மனை நெருங்கியது.

சேனையுடன் வன்னிக்குத் திக்விஜயம் மேற்கொண்ட சங்கிலி இவ்வளவு விரைவில் திரும்பி வருவானென எவரும் எதிர்பார்க்கவில்லை. முக்கியமாக அப்பாமுதலியும் பரராசசிங்கனும் திகைத்துப் போனார்கள்.

"இப்படி நடந்து விட்டதே?" என்றான் ஏமாற்றத்துடன் பரராசசிங்கன்.

"நீ எதைச் சொல்கிறாய்?"

சங்கிலி வரவைத்தான்.

"அதனால் என்ன? நாம் திட்டமிட்டபடி வருகின்ற போர்த்துக்கேய கப்பித்தானை பருத்தித்துறை பிலத்துவார மண்டபத்தில் சந்திப்போம். வரச்சொல்லிவிட்டோம். காக்கை வன்னியன் அழைத்து வருவான். நல்ல சந்தர்ப்பம். பின்வாங்கக் கூடாது. பயப்படத்தேவையில்லை..."

(தொடரும்)

# இம்முறையும் அறிக்கை வெளியிட்டது அமெரிக்கா!

அமெரிக்க இராஜாங்கச் செயலர் வெளியிட்டுள்ள மனித உரிமை நடைமுறைகள் தொடர்பான நாடுகளின் 2012ஆம் ஆண்டிற்குரிய அறிக்யையில் இலங்கைமீது மீண்டும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஆண்டுதோறும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தொழிலாளர், ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் விவகாரப் பிரிவினால் மனித உரிமைகளின் நடைமுறைகள் தொடர்பான நாடுகளின் அறிக்கை வெளியிடப்பட்டு வருகிறது.

2012 ஆம் ஆண்டுக்கான இந்த அறிக்கை அண்மையில் அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் ஹெரியால் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் ஆரம்பத்திலேயே இலங்கையில் ராஜபக்ஷ குடும்பத்தின் அதிகாரம் ஆட்சி நிர்வாகத்தில் மேலோங்கியிருப்பது குறித்து சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரசபடையினர் குடியியல் நிர்வாகத்தைக் கட்டுப்படுத்துவதாகவும் தேர்தல்கள் மோசடிகள் நிறைந்தவை என்றும் இதில் ஆளும் கட்சியினரால் அரச வளங்கள் தவறாகப் பயன்படுத்தப்படுவதாகவும் இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

குடியியல் சமூகச் செயற்பாட்டாளர்களும், விடுதலைப்புலிகளின் அனுதாபிகள் எனக் கருதப்படுவோரும் அரசாங்கத்தை விமர்சிக்கும் ஊடகவியலாளர்களும் தாக்கப்படுவதும் துன்புறுத்தப்படுவதும் இலங்கையின் பிரதானமான மனித உரிமைப் பிரச்சினை என்று இந்த அறிக்கை தெரிவித்துள்ளது.

ஆட்கள் காணாமற்போனமை தொடர்பாக விசாரணைகளோ, அதற்குப் பொறுப்பானவர்கள் தண்டிக்கப்படவோ இல்லை என்றும், காவற்றுறையின் சித்திரவதைகள், தாக்குதல்கள் தொடர்வதாகவும் ஊடகத் துறை மற்றும் நீதித்துறை மீதான தாக்குதல்கள் தொடர்ந்து இடம்பெற்றுள்ளதாகவும் அமெரிக்காவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக அரச படைகள் மற்றும் அரச ஆதரவு துணை ஆயுதக் குழுக்களின் சட்டத்துக்குப் புறம்பான கொலைகள் இலங்கையில் இன்னொரு பாரிய மனித உரிமைப் பிரச்சினை என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தோடு தமிழ்ப் பிரதேசங்களில் இலங்கைப்படையினர் மற்றும் காவற்றுறையினரால் காரணமற்ற கைதுகள், துன்புறுத்தல்கள், தடுத்து வைப்புக்கள் தொடர்ந்து இடம்பெறுவதாகவும் மோசமான சிறைகளில் நீண்டகாலம் தடுத்து வைக்கப்படுவதாகவும் இந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

நீதித்துறைச் சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ளதாகவும், பொதுமக்களின் தனிப்பட்ட உரிமைகளான கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், ஊடக சுதந்திரம், ஒன்றுகூடும் உரிமை, ஒன்றிணையும் உரிமை, நடமாடும் உரிமை என்பன கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும், தீவின் பெரும்பாலான இடங்களுக்கும் செல்ல முடிகின்ற போதிலும், வடக்கில் தொடர்ந்தும் இராணுவ, காவற்றுறை சோதனைச் சாவடிகளில் சோதனைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகவும் உயர் பாதுகாப்பு வலயங்களால் மக்கள் நடமாட முடியாமல் தடுக்கப்பட்டுள்ளதாகவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'அரசாங்கத்தை விமர்சிக்கும் ஊடகவியலாளர்கள் தாக்கப்படுவதால் சுயதணிக்கையை அவர்கள் பின்பற்ற வேண்டியநிலை உள்ளதாகக் குறிப்பிடும் அவ்வறிக்கை, வெளிப்படைத்தன்மையுடன் செயற்படாமை அரசாங்கத்தின் மிகப்பெரிய குறைபாடு என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

பெண்களும் சிறார்களும் துன்புறுத்தப்படுவடன் தமிழர்கள் மீதான இனரீதியான பாகுபாடுகள் தொடர்வதாகவும் இந்த அறிக்கை மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட மிகச் சில அதிகாரிகளை அரசாங்கம் சட்டத்தின் முன் நிறுத்தியுள்ள போதிலும் 2009 இல் முடிவுக்கு வந்த போரில் அனைத்துலக மனிதாபிமான மற்றும் மனித உரிமை சட்ட மீறல்களில் ஈடுபட்டவர்கள் எவரும் பொறுப்புக்கூற வைக்கப்படவில்லை.

துணை ஆயுதக்குழுக்களுக்கும் அரச படைகளுக்கும் நெருக்கமான உறவுகள் உள்ளன.

நீதிக்குப் புறம்பான படுகொலைகள் குறித்து சனல் 4 வெளியிட்ட காணொலி தொடர்பாக விசாரிக்க இலங்கை இராணுவத் தளபதியினால் நியமிக்கப்பட்ட விசாரணை நீதிமன்றத்தின் அறிக்கை இன்னமும் வெளியிடப்படவில்லை. வவுனியா, வெலிக்கடைச் சிறைகளில் கைதிகள் படுகொலை செய்யப்பட்ட விவகாரமும் இந்த அறிக்கையில் இடம்பெற்றுள்ளது.

வடக்கு- கிழக்கில் விடுதலைப் புலிகள் எனச் சந்தேகிக்கப்படுவர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்படும் சம்பவங்களுடன் இலங்கை இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் ஏனைய படையினர் மற்றும் துணை ஆயுதக் குழுக்களும் சம்பந்தப்பட்டுள்ளதாகவும்,



புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட விடுதலைப்புலிகள் தாம், புனர்வாழ்வு முகாம்களில் அதிகாரிகளால் மோசமாக நடத்தப்பட்டதாகவும் சித்திரவதை செய்யப்பட்டதாகவும் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்டதாகவும் தகவல் வெளியிட்டுள்ளதுடன், பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்களில் பெரும்பாலும் ஆயுதப்படையினர் காவற்றுறையினர் படையில் இருந்து தப்பியோடியோர் ஆயுதக்குழுக்களின் உறுப்பினர்களோ தொடர்புபட்டுள்ளதாக நம்பகமான அறிக்கைகள் கிடைத்துள்ளதாகவும் இங்கு குறிப்பிடப்படுகிறது.

போரின் போது இடம்பெற்ற நீதிக்குப் புறம்பான படுகொலைகள், காணாமற்போதல்கள், பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் உள்ளிட்ட பரந்தளவிலான மனித உரிமை மீறல்களில் இலங்கையின் முன்னாள் இராணுவத்தளபதி சரத்பொன்சேகா தொடர்புபட்டுள்ளதாக மனித உரிமை அமைப்புகள் குற்றம்சாட்டுகின்றன.

போர்க்காலத்தில் இராணுவ முகாம்களைச் சுற்றிய பொதுமக்களின் பெருமளவு நிலங்கள் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் கையகப்படுத்தப்பட்டதாகவும் இதனால் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பெருமளவு மக்கள் இன்னமும் இடம்பெயர்ந்தே வாழ்கின்றனர் என்பதுமான முக்கியமான விடயங்கள் ஜோன் கெரியின் இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது கவனத்துக்குரியதாகும்.

-இணையம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரை மாத இராசி பலன்கள்

## 14.04.2013 - 14.05.2013



## கும்பம்

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்**

## நல்ல காரியம் இல்லத்தில் நடைபெறும்!

**வாழ்க்கைத்தேவைகள் பூர்த்தியாகும்! கற்ற கல்வியைக் காட்டிலும் பெற்ற அனுபவமே பெரிதாகக் கருதும் கும்ப இராசி நேயர்களே!**

உங்கள் இந்த சித்திரை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, மாதத் தொடக்கத்திலேயே இராசிநாதன் சனி வக்ர இயக்கத்தில் இருக்கிறார். பன்னிரண்டாம் இடத்திற்கு அதிபதியாக இருப்பவர் வக்ரம் பெறுவது நன்மைதான். என்றாலும், ராசிநாதனுமாக அல்லவா இருக்கிறார் சனிபகவான். எனவே, உடல் ஆரோக்கியத்தில் அடிக்கடி அச்சுறுத்தல் ஏற்பட்டு அகலும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்ய உடல்நிலை இடம்கொடுக்காது.

விரயங்கள் அதிகமாக ஏற்படும் இந்தநேரத்தில், வீடு சம்பந்தப்பட்ட வகையில் பழுது பார்க்கும் வேலைகளை மேற்கொள்ளலாம். வேற்று மனிதர்களின் ஒத்துழைப்போடு கூட்டு முயற்சிகளைச் செய்யத் தொடங்குவீர்கள். ஆற்றல் மிக்கவர்களைப் பின்னணியாக வைத்துக்கொண்டு அறிஞர் பெருமக்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பதன் மூலம் வெற்றி வாய்ப்புகளை வரவழைத்துக் கொள்ள இயலும்.

அர்த்தாஷ்டம குருவின் ஆதிக்கம் ஒருபுறம் இருந்தாலும், அது பார்க்குமிடம் 10 ஆம் இடமாக இருப்பதால் செயல்கள் துரிதமாக நடைபெற குரு வழிபாட்டை நீங்கள் முறையாக மேற்கொள்ள வேண்டும். வீடு மாற்றங்கள், இடமாற்றங்கள், உத்தியோக மாற்றங்கள் ஒருசிலருக்கு உறுதியாகும். ஆகஸ்ட் மாதத்திற்கு மேல் அவற்றை ஏற்றுக்கொள்வது நல்லது. சனி வக்ர நிவர்த்திக்குப் பிறகு நீங்கள் எந்த முடிவும் சரியாக எடுக்க முடியும். கூட்டாளிகளைத் திடீர் திடீரென மாற்றம் செய்ய முன்வருவீர்கள்.

அஷ்டமாதிபதி புதன் சகாய ஸ்தானத்தில் சேரும் பொழுது உறவினர்களால் சில உபத்திரவங்கள் ஏற்படலாம். உடன்பிறப்புகள் வழியில் கவலைக்குரிய சம்பவங்களும் நடைபெறும். எனவே, வாழ்க்கைத்தேவைகள் பூர்த்தியாவதில் சில இடையூறுகள் ஏற்படத்தான் செய்யும். குருப்பெயர்ச்சிவரை சற்று பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. குருவின் பார்வை உங்கள் இராசியில் முழுமையாகப் பதியப்போதால் படிப்படியாக முன்னேற்றம் வந்து சேரும். பக்கபலமாக இருப்பவர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும்.

**புதனின் மேட இடப சஞ்சாரங்கள்!**

மாதத் தொடக்கத்தில் நீச்சமாக இருக்கும் புதன் ஏப்ரல் 21 ஆம் திகதி மேட இராசியில் சஞ்சரிக்கப்போகிறார். பஞ்சம, அஷ்டமாதிபதியாக விளங்கும் புதன் மூன்றில் சஞ்சரிக்கும் பொழுது பிள்ளைகள் வழியில் உதிரி வருமானங்கள் வந்து சேரும். அவர்களின் வாழ்க்கைப் பாதையை சீராக்கிக் கொள்ள நீங்கள் எடுத்த முயற்சி வெற்றி பெறும். உடன்பிறப்புகளுக்காக சில சொத்துக்களை விற்றுக் கொடுக்கவும் முன்வருவீர்கள்.

புதன் மே 7 ஆம் திகதி இடபத்தில் சஞ்சரிக்கும் பொழுது தாயின் உடல்நலத்தில் கவனம் தேவை. தக்க விதத்தில் மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வது நல்லது. வாகனப் பழுதுச் செலவுகள் அதிகரிக்கும். நூதனப்பொருட்களின் சேர்க்கை உண்டு. பங்காளிப்பகை மாறும். என்றாலும், புதிய பகைகளும் உருவாகும். அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வதன் மூலம் அன்றாட வாழ்க்கையில் அமைதியைக் காண முடியும்.

**இடப சுக்ரனின் சஞ்சாரம்!**

மே 5 ஆம் திகதி இடப இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக சில நல்ல வாய்ப்புகள் இல்லம்தேடி வந்து சேரலாம். குடும்ப ஒற்றுமை பலப்படும். கொடுக்கல்- வாங்கல்கள் திருப்திகரமாக இருக்கும். விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர். பாகப்பிரிவினைகள் சுமூகமாக முடியும். நாட்டுப்பற்று மிக்கவர்களின் ஒத்துழைப்போடு நல்ல காரியம் ஒன்று இல்லத்தில் நடைபெறும்.

இம்மாதம் சனீஸ்வரர் வழிபாடு சந்தோஷத்தை வழங்கும்.

# சிவல்புரி சிங்காரம்



## மீனம்

**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

## வாய்ப்புகள் வாயில் கதவைத் தட்டும்!

**திடீர் திருப்பங்கள் ஏற்படும் நேரம்! யாரை எப்போது பார்த்தால் காரியம் முடியும் என்பதை அறிந்து வைத்திருக்கும் மீன இராசி நேயர்களே!**

உங்கள் இந்த சித்திரை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது அஷ்டமத்துச் சனியும் ராகுவும் ஒன்று கூடி இருக்கிறார்கள். அதோடு தனாதிபதி செவ்வாயும் வலிமை இழந்திருக்கிறார். எனவே, பற்றாக்குறை ஏற்படலாம். பணவரவில் திடீர் திடீரெனத் தடைகள் ஏற்பட்டு அகலும். இராசிநாதன் குரு சகாய ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் எப்படியாவது காரியம் முடிந்துவிடும்.

என்ன இருந்தாலும், அஷ்டமத்தில் இரண்டு கிரகங்கள் சஞ்சரித்துக் கொண்டிருக்கும் பொழுது எதையும் யோசித்துச் செய்ய வேண்டும். அது மட்டுமல்ல, இறைவனைப் பூஜித்தும் செய்ய வேண்டும். அவனது திருப்பெயரை வாசித்தும் செய்ய வேண்டும். சிலநேரங்களில் சுறுசுறுப்பாக பணிபுரிவீர்கள். சில நேரங்களில் மந்தநிலைமையோடு செயற்பட இயலும். கூட்டாளிகளிடம் சிலர் ஏமாற்றத்தைச் சந்திக்க நேரிடும். என்ன இருந்தாலும் பணப்பொறுப்புகள் சொல்வதைத் தவிர்ப்பது நல்லது. அதேநேரத்தில் பக்கபலமாக இருப்பவர்களைப் பகைத்துக்கொள்ளாமலும் இருக்க வேண்டும்.

அப்போதுதான் தக்க சமயத்தில் ஒத்துழைப்பும் கிடைக்கும்; தடுமாற்றங்களைச் சந்திக்காமல் இருக்கவும் முடியும். இல்லத்தில் உள்ளவர்களின் ஆசைகளைப் பூர்த்திசெய்யும் சூழ்நிலை உருவாகும். வீட்டுப் பழுதுச் செலவுகள் மற்றும் வாகனத்திற்கான பழுதுச்செலவுகள் வந்துகொண்டே இருக்கிறதே என்று கவலைப்படுவீர்கள். ஆனால், இந்த நேரத்தில் அதுபோன்று வரும் செலவுகளை முழுமனதுடன் ஏற்றுக்கொள்வதே நல்லது. வீண் விரயங்கள் ஏற்படாமல் இருக்க வேண்டுமானால் சுபவிரயங்களை மேற்கொள்ள வேண்டும்.

அந்த அடிப்படையில் திருமண வயதிற்கு வந்த பெண்கள் வீட்டில் இருந்தால் தீவிரமாகப்பேசி திருமணத்தை முடிக்கலாம். சிறிய குழந்தையாக இருந்தால் வரும் வருமானத்தை குழந்தைகள் பெயரில் சேமிப்பு நிதியாக்கிக்கொள்ளலாம். அடிக்கடி பயணங்களும் அலைச்சல்களும் ஏற்படும் மாதமாகவே இம்மாதம் விளங்குகிறது.

**புதனின் மேட இடப சஞ்சாரங்கள்!**

புதன் ஏப்ரல் 21 ஆம் திகதி மேட இராசியில் சஞ்சரிக்கப் போகிறார். உங்கள் இராசிக்கு 4,7க்கு அதிபதியான புதன் 2 இல் சஞ்சரிக்கும் பொழுது குடும்ப ஒற்றுமை பலப்படும். வாழ்க்கைத்துணை வழியே வந்த பிரச்சினை அகலும். பிரிந்தவர்கள் வந்திணைவர். பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். அடகு வைத்த நகைகளை மீட்டு கொண்டு வந்து அணிந்து கொண்டு அழகு பார்ப்பீர்கள்.

மே 7 ஆம் திகதி இடபத்தில் புதன் சஞ்சரிக்கும்பொழுது தாய்வழி ஆதரவு கிடைக்கும். இடம், பூமி வாங்குவதில் இருந்த தடைகள் அகலும். தொழில் வளத்தைப் பெருக்கிக்கொள்ள முன்வருவீர்கள். குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். பணவரவு திருப்திகரமாக இருக்கும் எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும். அன்னிய தேச வாய்ப்புகள் வருவதை ஏற்றுக் கொள்வதா? வேண்டாமா? என்று யோசிப்பீர்கள். தெசாபுத்தி பலன் பெற்றவர்கள் மட்டுமே அதை ஏற்றுக் கொள்ளலாம். மற்றவர்கள் சனி விலகிய பிறகே நீண்டதூர பயணத்தை ஏற்றுக் கொள்வது நல்லது.

**இடப சுக்ரனின் சஞ்சாரம்!**

இடப இராசியில் சுக்ரன் மே 5 ஆம் திகதி சஞ்சரிக்கப் போகிறார். அதன்பிறகு அங்கு சேரும் புதனுடன் அது இணையப்போவதால் புத சுக்ர யோகமாக உங்களுக்கு வந்து சேரப்போகிறது. எனவே, வருமானம் திருப்தி தரும். வாய்ப்புகள் வாயில் கதவைத் தட்டும். திருமணம் முதல் தித்திக்கும் செய்திகள் அனைத்தும் தித்திக்கும் விதத்தில் வந்து கொண்டே இருக்கும்.

இம்மாதம் ஆஞ்சநேயர் வழிபாட்டை மேற்கொண்டு ஆனந்தமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

436

## யாருடைய தவறு?

### அம்புலிமாமா கதைகள்



முன்னொரு காலத்தில் கௌசிகன் என்ற ஒரு பிராமணன் இருந்தான். அவன் தெய்வ பக்தியுடையவன். ஒருநாள் அவன் ஒரு பண்டிதரை விருந்துண்ண அழைத்தான். அவரும் வருவதாக ஒப்புக்கொண்டார்.

உடனே அவன் விருந்திற்கான ஏற்பாடுகளைச் செய்யலானான். வழக்கமாகப் பாலும் தயிரும் கொண்டு வந்து கொடுப்பவளிடம் நாளை என்னுடைய வீட்டிற்கு ஒரு விருந்தாளி வருகிறார். கெட்டித் தயிராகக் கொண்டுவா. அதற்கு வேண்டுமானால் பணம் வாங்கிக்கொள் என்றான்.


அவளும் சரியென்று சொல்லிப் போனாள். மறுநாள் அப்படியே நன்றாகத் தோய்ந்த தயிரை சட்டியுடன் கூடையில் வைத்து துணியால் மூடி அந்த பிராமணன் வீட்டிற்குப் போகலானாள். வழியில் காற்றடிக்கவே தயிர்ச்சட்டியின் மீது மூடப்பட்டிருந்த துணி சற்று விலகியது.

இதேசமயம் ஒரு கருடன் ஒரு நல்ல பாம்பைக் கொத்திக்கொண்டு ஆகாய வழியாய் பறந்து சென்று கொண்டிருந்தது. பாம்பின் வாயில் இருந்து விஷம் வெளிவந்து கொண்டிருந்தது. அந்த விஷத்தின் துளி தயிர்க்காரி கொண்டு போன தயிர்ச்சட்டியில் விழ அத்தயிர் முழுவதும் விஷமாகிவிட்டது.

தயிர்க்காரி அந்த தயிரை பிராமணனிடம் கொடுத்துவிட்டுச் சென்றாள். கௌசிகனும் எடுத்துப் பத்திரமாக உள்ளே வைத்தான். பண்டிதர் உள்ளே வந்தார். விசேட முறையில் தயாரிக்கப்பட்ட விருந்தாகையால் வயிறு புடைக்கச் சாப்பிட்டார். கௌசிகனும் தயிர்க்காரி கொடுத்த தயிரை அவருக்குக் கொடுக்க அவரும் சாதத்துடன் பிசைந்து சாப்பிட்டார்.

ஆனால் சிறிது நேரத்திலேயே அந்தப் பண்டிதர் சுருண்டு விழுந்து இறந்தார். என்ன நடந்தது என்று யாருக்கும் ஒன்றும் தெரியவில்லை. இப்படி திடீரென மரணம் ஏற்பட்டதற்காக கௌசிகன் மிகவும் மனம் வருந்தினான்.

பூலோகத்தில் இந்தத் திடீர் மரணம் ஏற்படவே எமலோகத்திலுள்ள எமனின் கணக்குப்பிள்ளை சித்திரகுப்தன் பாடு சங்கடமாயிற்று. பண்டிதரைக்கொன்ற பாவத்தை யாருடைய கணக்கில் எழுதுவது என்பதே அவன் பிரச்சினை. பாவம் பிராமணனை சேருமா சேராதா என்று மனதிற்குள்ளாகவே வாதம் செய்து பார்க்கலானான். ஒரு வேளை தயிரைக்கொண்டு வந்து



கொடுத்த தயிர்க்காரியை சேருமா? தயிர் மீது மூடப்பட்டிருந்த துணியை விலக்கிவிட்ட வாயுதேவனை சேருமா? அல்லது விஷத்தை கக்கிய பாம்பைச்சேருமா? கருடனைச் சேருமா?

இந்தவிதமாக கேள்விகளை சித்திரகுப்தன் கேட்டுக்கொண்டான். பிராமணனுக்கும் தயிர்க்காரிக்கும் தயிரில் விஷம் கலந்திருப்பது தெரியாது. வாயுதேவன் தன் கடமையைச் செய்யாமல் இருக்கமுடியாது. கருடன் பிடியில் அகப்பட்டதனால்தானே பாம்புவிஷத்தைக்கக்கியது. ஆகவே கருடன் மீதுதான் குற்றத்தைச் சுமத்த வேண்டும். ஆனால் அதன் இரையோ பாம்பு. பாம்பைப் பிடிக்கும்போது அது விஷத்தைக் கக்கினால் அது கருடன் குற்றமல்ல. விஷத்தை வேண்டுமென்றே கருடனா தயிர்ச்சட்டியில் போடச் செய்தது. இந்தப்பெரிய பிரச்சினையை எமதர்மனிடம் விட்டுத் தீர்க்கலாம் என எமனிடம் சொல்ல அவனும் யாவற்றையும் கேட்டு ஒரு முடிவு செய்ய முடியாமல் தன்னுடைய தர்பாரிலுள்ள பண்டிதர்களைக் கேட்க அவர்களும் இதற்கு முடிவு காணாமல் திகைக்கலாயினர்.

எமன் பிரச்சினைக்கு முடிவு காண மகாவிஷ்ணுவிடம் செல்ல அவராலும் இதற்கு முடிவு காண முடியவில்லை. அப்போது எமன் சித்திரகுப்தனைப் பார்த்து இது இப்படி இலகுவில் தீரும் பிரச்சினை அல்ல. நான் இதற்கு தகுந்த விடை கூறுகிறேன். அதுவரை இந்தப்பாவத்தை யாருடைய கணக்கிலும் சேர்க்காமல் அனாமத்தாக வைத்திரு எனக் கூறினான்.

பூலோகத்தில் ஒருநாள் இரு பிராமணர்கள் ஒரு மரத்தின் கீழ் இளைப்பாறிக்கொண்டிருந்தனர். அந்தப் பிராமணர்களில் ஒருவருக்கு பட்சிகளின் பாசை தெரியும்.

அந்தமரத்திலுள்ள இரு பட்சிகள் கருடனிடம் இருந்த கௌசிகனை



பற்றிய விபரங்களை பேசிக் கொண்டிருந்தன. இதை அந்தப் பிராமணன் கேட்டுக் கொண்டேயிருந்தான். அவன் உடன் இருந்த பிராமணனை எழுப்பி அந்தப் பண்டிதர் இறந்த விதத்தைக்கூறினான். மேலும் அவன் இதில் பாவம் யாருடையது என்பதை அறிவது வெகுசுலபம். அத்தயிரை பரீட்சிக்காமல் விருந்தாளிக்குப் பரிமாறியது கௌசிகனின் தவறு. எனவே பாவம் கௌசிகனதே என்றான்.



அச்சமயம் அங்குவந்த எமன் தூதர்கள் இதைக்கேட்டு பட்சிகளின் பாசையை அறிந்த பிராமணனைப் பிடித்து எமலோகத்திற்கு கொண்டு சென்றனர். எமனும் அந்தப் பிராமணனைப்பார்த்து நீ பாவம் கௌசிகனை சாரும் என்று சொன்னாயா? என்று கேட்க அவனும் ஆம் என்றான்.

அப்போது எமன் இரண்டு பானைகளில் தயிரை அங்கு வரவழைத்தான். அதில் ஒன்றில் விஷம் கலந்திருந்தது. எமன் அப்பிராமணனைப் பார்த்து நீதான் எல்லாம் தெரிந்தவன் போலப் பேசுகிறாயே இந்த இரண்டு குடத்தயிர்களில் எக்குடத்தில் விஷம் கலந்திருக்கிறது சொல் என்று கேட்டான். அப்போது பிராமணன் திடுக்கிட்டான். எதில் விஷம் கலந்திருக்கிறது என்பதைச் சொல்ல இரண்டு பானைத் தயிர்களையும் அவன் ருசி பார்த்தாக வேண்டும். முதலில் விஷம் கலந்த தயிரை சாப்பிட்டாலோ உயிரே போய்விடும். ஆகவே பிராமணன் ஒன்றும் செய்யமுடியாமல் தத்தளித்து நின்றான்.

அப்போது எமன் கோபத்துடன் உனக்கு தெரியாத விடயத்தில் தலையிட்டு கௌசிகனைப் பாவி என்றாய். அது பெரிய குற்றம். அநாவசியமாக விடயத்தைப் புரிந்துகொள்ளாமல் வாய்க்கு வந்த படி உளறக்கூடாது என்பதை உன்னைப்போன்ற படித்தவர்களே அறியமுடியவில்லை என்றால் ஒன்றுமே அறியாத மூடர்களைப் பற்றி என்ன சொல்வது. எனவே இந்த மரணத்தின் பாவம் உனக்கு சேரட்டும் எனச்சொல்லி சித்திரகுப்தனிடம் அவன் கணக்கில் வரவு வைக்கச் சொன்னான். யாருடைய பாவமோ கடைசியில் அந்தப்பிராமணன் தலையில் வந்து விழுந்தது. பிராமணனும் தலை விதியே என்று அந்த பாவத்தை ஏற்க வேண்டியாதியிற்று. அப்போதுதான் சட்டென்று வாய்க்கு வந்த படி உளறி விடக்கூடாது என்பதை அவன் உணர்ந்தான். ஆனால் என்ன பிரயோசனம்? தவளை தன் வாயினால் கெடும் என்ற பழமொழி போல் தன் வாயினால் தனக்கு சம்மதம் இல்லாத விடயத்தை பற்றி அநாவசியமாக பேசியதால் எமனின் தண்டனையை அவன் அனுபவிக்க வேண்டியே வந்தது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தீர்வுக்கான போராட்டத்தை அபிவிருத்தி, சலுகைகளால் அழித்துவிட முடியாது...!



வடக்குக் கிழக்கிற்கு தனியான ஆட்சிமுறை என்பது, நடைமுறைச் சாத்தியமற்ற விடயம் என்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ அண்மையில் இலங்கை வந்த இந்திய நாடாளுமன்றக் குழுவிடம் தெரிவித்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இது, இனப்பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு காணும் முயற்சியில் அரசாங்கம் கொண்டுள்ள இறுக்கமான் போக்கை மீண்டும் வெளிப்படுத்தியுள்ளது.

கடந்த பெப்ரவரி 4 ஆம் திகதி திருகோணமலையில் நடைபெற்ற சுதந்திர தின நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் கிட்டத்தட்ட இதே கருத்தைத்தான் வலியுறுத்தியிருந்தார்.

இலங்கையில் இன, மத, மொழி அடிப்படையில் நிர்வாக கட்டமைப்புக்கள் ஒருபோதும் உருவாக்கப்பட மாட்டாது என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

வடக்குக் கிழக்கு மாகாணங்களை ஒருங்கிணைத்து கூடுதல் அதிகாரங்களைக் கொண்ட நிர்வாக அலகு ஒன்றை உருவாக்கும் தமிழர் தரப்பின் கோரிக்கைகளை நிராகரிக்கும் வகையிலேயே, அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டிருந்தார்.

சர்வதேச ஊடகங்கள் இதனை தமிழர்களின் சுயாட்சிக் கோரிக்கையை நிராகரிக்கும் அரசாங்கத்தின் நிலைப்பாடாகவே கருத்தில் எடுத்திருந்தன. இப்போது தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கான வழிமுறை என்ன என்ற கேள்வியே இல்லை. அதுபற்றி யாரும் பேசுவதும் இல்லை.

முன்னர் தமிழர்களால் சுயாட்சிக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. பின்னர் தனிநாட்டுக்கோரிக்கை எழுந்தது.

ஆயுதப்போராட்டம், அரசியல் பேச்சு வடிவத்திற்குள் நுழைந்தபோது உள்ளக சுயநிர்ணய உரிமை குறித்தும் பேசப்பட்டது. அவ்வப்போது வேறு சில தீர்வுமுறைகள் குறித்தும் கோரிக்கைகள் எழுந்தன. யோசனைகள் முன்வைக்கப்பட்டன.

ஆனால், இப்போது எந்த தீர்வு முறை குறித்தும் தமிழ் அரசியல் கட்சிகள் வலியுறுத்துவது கிடையாது.

ஆயுதப்போராட்டம் தோற்கடிக்கப்பட்டபின்னர் இலங்கையின் ஒற்றையாட்சிக்கு அப்பாற்பட்ட எந்தவொரு தீர்வையும் வலியுறுத்தும் பலம் தமிழ் அரசியல் சக்திகளிடம் இல்லாமற் போய்விட்டது. அதே வேளை இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணும், எல்லா முயற்சிகளும் முடங்கிப்போய் விட்டதொரு சூழலில், தமிழர் பிரச்சினைக்கு எது சரியான தீர்வாக அமையும் என்று கேள்வி கேட்பாரும் இல்லை. அதுபற்றி அரசாங்கம் பதிலளிப்பதும் இல்லை.

எவ்வாறாயினும், தமிழர் பிரச்சினைக்கு 13வது அரசியலமைப்புத் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. ஆனால், 13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தத்திற்கு அப்பால் செல்லவும் தயாராக இருப்பதாக முன்னர் இந்தியாவுக்கு வாக்குறுதி அளித்திருந்த அரசாங்கம், 13 வது அரசியலமைப்புத் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவே தயாராக இல்லை.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்குவதில்லை என்ற பிடிவாதத்தில் அரசாங்கம் உறுதியாக இருக்கிறது. குறிப்பாக பாதுகாப்புச் செயலர் போத்தபாய ராஜபக்ஷ இந்த விடயத்தில் அதிகளவில் கடும்போக்கைக் காண்பித்து வருகிறார்.

பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு பகிர்ந்தளிப்பது ஆபத்தானது என்றும், அது மீண்டும் பிரிவினைவாதம் வலுப்பெறுவதற்கு காரணமாகிவிடும் என்றும் வலியுறுத்தி வருகிறார். ஆனால், நீண்ட போராட்டங்கள், பெருமளவு அழிவுகளின் பின்னரும் அதிகாரங்கள், உரிமைகளுக்கான பாதுகாப்பு எதுவும் இல்லாத ஒரு தீர்வுக்குத் தமிழர்களை இணங்க வைப்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாகத் தெரிகிறது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும், பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவும் எல்லா மக்களும் சமமானவர்கள், அனைவருக்கும் சமமான உரிமைகள் உள்ளன என்று கூறுகின்றனர். ஆனால், அத்தகைய சூழல், இலங்கையில் உள்ளதா என்பதை எவரும் எவருக்கும் விபரிக்க வேண்டியதில்லை. அவ்வாறு எல்லா மக்களும் சமமானவர்களாக மதிக்கப்படும் நிலையை அரசாங்கம் உருவாக்கியிருந்தால், இந்தியா போன்ற நாடுகள், தமிழர்களுக்கும் சமமான உரிமைகளை வழங்கப்படவேண்டும் என்று இப்போது வலியுறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது.

கிட்டத்தட்ட மூன்று தசாப்தங்களுக்கு மேலாக, நீண்ட பிரிவினைக்கான ஆயுதப் போராட்டத்தை இராணுவ வழிமுறையின் மூலம் அடக்கிவிட்டது அரசாங்கம். ஆனால், இதன் மூலம் நிரந்தரமான அமைதி உருவாக்கப்பட்டுவிட்டதாகவோ, அல்லது பிரிவினைவாதச் சிந்தனைகள் முற்றாகவே அழிக்கப்பட்டுவிட்டதாகவோ கருத முடியாது.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர், போர் முடிவுக்கு வந்தபோது, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகியோர்கள், விடுதலைப்புலிகளின் தலைவருடன் அவரது ஈழக் கனவையும் குழிதோண்டிப் புதைத்துவிட்டதாக கூறினார். ஆனால், இப்போது அரசாங்கம் அப்படிக்கூறத் தயாராக இல்லை.

விடுதலைப்புலிகளின் ஈழக் கனவை நனவாக்க தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முயல்வதாக குற்றம் சாட்டுகிறது அரசாங்கம். அத்துடன், விடுதலைப்புலிகளின் அமைப்புக்கும், பிரிவினைவாதத்துக்கும் உயிர் கொடுக்க முனைவதாக புலம்பெயர் தமிழர்களையும் குற்றம் சாட்டுகிறது.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர், ஆயுதப்போராட்டத்தின் முடிவோடு ஈழக்கனவு செத்துவிட்டதாகத் துணிவுடன் கூறிய அரசாங்கத்தினால், இப்போது அப்படிக் கூற முடியவில்லை. விடுதலைப்புலிகளின் கொள்கைளை நம்புகின்ற- அதன் வழி செயற்படுகின்ற பலர் இன்னமும் இருப்பதாகவே அரசாங்கம் கூறுகிறதென்றால், மீண்டும் ஒரு பிரிவினைப் போர் வராது என்று அடித்துக் கூறும் ஆற்றல் அரசாங்கத்துக்கு இல்லை என்றால், அதன் அர்த்தம் என்ன?

அரசாங்கத்தினால், போரின் மூலம்- இராணுவ ரீதியாக பிரிவினைக் கோரிக்கைக்கு முடிவுகட்ட முடியவில்லை என்பதே அந்த அர்த்தம்.

போரின் மூலம் அழிக்கப்பட்டதும், ஒடுக்கப்பட்டதும் ஆயுதங்களும், ஆயுதப்போராளிகளும்தான். ஆயுதப் போராட்ட இயக்கத்தால் முன்னெடுக்கப்பட்ட, தனியரசே தமிழர் பிரச்சினைக்கு ஒரே- நிரந்தரமான தீர்வு என்ற கொள்கையல்ல என்றே கருத முடிகிறது.

தனியரசே தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு என்ற கருத்தை, ஒருபோதும் அபிவிருத்தியின் ஊடாகவோ சலுகைகளின் ஊடாகவோ அழித்துவிட முடியாது. தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காணப்படவேண்டும்.

அரசியல் மீளிணக்கப்பாடும், பொறுப்புக்கூறலும் இதற்கு அவசியம் என்று அமெரிக்கா திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகிறது. அரசாங்கம் இந்த இரண்டு ஆலோசனைகளையும் ஏற்கத் தயாராக இல்லை.

எல்லோரும் சமமானவர்கள் என்ற கோட்பாட்டின் மூலம், தமிழர் மத்தியில் உள்ள தனிநாட்டுக் கோட்பாட்டை அழித்துவிடலாம் என்று கருதுவதில் தவறில்லை. ஆனால், அதற்கான சூழல் ஏற்படுத்தப்படாமல் வெறுமனே வாய்ப்பேச்சால் எதையும் சாதிக்க முடியாது.

கடந்த காலங்களில், தமிழர்கள் இலங்கையின் ஆட்சியாளர்களுடன் செய்துகொண்ட பல்வேறு உடன்பாடுகளின்போது கடுமையாக ஏமாற்றப்பட்ட வரலாறு உள்ளது. அந்தக் கசப்பான வரலாறு, தமிழர்களை ஒருபோதும் இன்னொரு ஏமாற்றத்துக்குள் தள்ளுவதற்கு இடமளிக்காது.

ஒரு தீர்க்கமான அரசியல் தீர்வு வடிவத்தை உறுதி செய்துகொள்ளாமல் தமிழர் தரப்பை திருப்தி செய்வது மிகக் கடினம்.

தமிழர்களது தாயகப் பகுதிகளில் கூடுதல் அதிகாரங்களுடன், பாதுகாப்பாகவும், நிம்மதியாகவும் வாழும் ஒரு தீர்வு கிடைக்க வேண்டும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்ப்பதில் தவறில்லை. அந்த கூடுதல் அதிகாரங்கள் உள்ள தீர்வைத் தான் அரசாங்கம் நிராகரித்துவருகிறது.

வடக்கு- கிழக்கிற்கு கூடுதல் அதிகாரங்களை வழங்குவது நடைமுறைச் சாத்தியமற்றது என்ற ஜனாதிபதியினதும் பாதுகாப்புச் செயலரினதும் நிலைப்பாடு, தமிழர் பிரச்சினையை முடிவற்ற, நீளும் ஒன்றாக மாற்றுமே தவிர, நிரந்தர அமைதிக்கு வழிவிடுவதாக இருக்காது.

-கே.சஞ்சயன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலி மருத்துவ சான்றிதழுடன் சவுதிக்குச் சென்ற இலங்கைப் பெண்

போலி மருத்துவ சான்றிதழைத் தயாரித்து சவுதி அரேபியாவுக்குச் சென்ற தமிழ்ப் பெண் ஒருவர் மீண்டும் இலங்கை தூதரகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

மஸ்கெலியாவைச் சேர்ந்த குறித்த பெண் கடந்த வாரம் வீட்டுப் பணிப் பெண்ணாக சவுதிக்குச் சென்றார்.

சவுதியில் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட மருத்துவச் சோதனையின் போது அவர் மூன்று மாதங்கள் கருத்தரித்திருப்பது தெரியவந்துள்ளது.

எனினும் கொழும்பில் தயாரிக்கப்பட்ட அவரது மருத்துவ அறிக்கையில் அவர் கருத்தரித்திருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. இந்நிலையில் அவரது வீட்டு ஒப்பந்தகாரர் அவர் வீட்டுப் பணிகளுக்கு ஏற்புடையவர் அல்லர் என்று தெரிவித்து அவரை இலங்கைக்கு திருப்பி அனுப்புமாறு இலங்கை தூதரகத்திடம் ஒப்படைத்துள்ளார்.

அவரை இலங்கைக்குத் திருப்பி அனுப்பும் நடவடிக்கைகளை சவுதியில் உள்ள இலங்கைத் தூதரகம் மேற்கொண்டு வருகின்றது. (அ-2)

# சுற்றுலாத்துறை இம்மாதம் பாரிய வீழ்ச்சி அடைந்துள்ளது

இலங்கையின் சுற்றுலாத்துறையில் இம்மாதம் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக ஆங்கில வர்த்தக சஞ்சிகை ஒன்று சுட்டிக்காட்டியுள்ளது.

எனினும் சுற்றுலா அபிவிருத்தி திணைக்களம் இதனை மறைத்துள்ளது.

கடந்த ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களுக்கான சுற்றுலாப் பிரயாணிகளின் வருகை குறித்த தகவல்கள் முன்கூட்டியே வெளியிடப்பட்டன. எனினும் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதம் முதற் பகுதிக்கான சுற்றுலா அறிக்கை இன்னும் வெளியாகவில்லை.

சுற்றுலாத்துறையில் ஏற்பட்டுள்ள எதிர்பாராத வீழ்ச்சியை சுற்றுலாத்துறை திணைக்களம் மூடிமறைத்து வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இலங்கை அதிகாரிகளால் கடந்த இரண்டு மாதங்களில் சுற்றுலாத் துறையினருக்கு எதிராக முன்னெடுத்த செயற்பாடுகள் காரணமாகவும் இவ் விடயத்தைக் கருத்தில் கொண்டு பிரித்தானிய அரசாங்கம் வெளியிட்டிருந்த பயண எச்சரிக்கை போன்ற காரணங்களாலும் இம்முறை சுற்றுலாத்துறையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கைக்கு எதிராக தமிழகத்தில் இடம்பெறும் ஆர்ப்பாட்டங்களும் இதில் தாக்கத்தை ஏற்படுத்தி இருப்பதாக சுட்டிக்காட்டப்படுகின்றது. (அ-2)

# சிறுவர்களை முகாம்களில் தடுத்து வைக்க வேண்டாம்

## மனித உரிமை அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

சிறுவர்களை அகதி முகாம்களில் தடுத்து வைக்க வேண்டாம் என்ற மனித உரிமைகளின் அமைப்பின் கோரிக்கையை அவுஸ்ரேலிய அரசாங்கம் நிராகரித்துள்ளது.

இலங்கையில் இருந்து அகதிகளாகச் சென்று அவுஸ்ரேலியாவில் தங்கியுள்ள சிறுவர்களை வட அவுஸ்ரேலியாவில் உள்ள கேர்டின் முகாமில் தடுத்து வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அங்கு சிறுவர்கள் தங்களின் தாய்மாருடன் தடுத்து வைக்கப்படுவர். எனினும் இதற்கு மனித உரிமைகள் அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்துள்ளன.

ஏனைய அகதிகளுடன் சிறுவர்களையும் தடுத்து வைக்கும் போது அவர்களின் மனநிலை பாதிக்கப்படும் என்று அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனினும் இந்த தீர்மானத்தை மாற்ற முடியாது என்று அவுஸ்திரேலிய குடிவரவுத்துறை திணைக்களம் அறிவித்துள்ளது. (அ-2)

# போதைப்பொருள் செய்கை பயிரிடப்பட்டமை கண்டுபிடிப்பு

(கொழும்பு)

தெற்கு மக்கள் கொக்கேய்ன் போதைப் பொருள் செய்கையில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. வெள்ளைச் சந்தன பயிர்ச் செய்கை என்ற போர்வையில் இந்த கொக்கா என்ற செடி பயிரிடப்பட்டுள்ளது.

மாலிபொட, அக்குரஸ்ஸ, ஹக்மன, கும்புறுபிட்டிய, அதுருலிய ஆகிய பிரதேசங்களிலிலேயே இவ்வாறு அதிகளவில் குறித்த போதைப் பொருள் செய்கை மேற்கொள்ளப்பட்டு வெள்ளைச் சந்தன செடி என்ற போர்வையில் கொக்கா செடிகள் விநியோகம் செய்யப்பட்டு வந்துள்ளன.

திவிநெகும திட்டத்திற்காக வீட்டுத் தோட்டங்களைப் பரிசோதனை செய்யச் சென்ற போது கொக்கா செடிகள் பயிரிடப்பட்டுள்ளமை அம்பலமாகியுள்ளது.

இது தொடர்பில் விவசாயத் திணைக்கள அதிகாரிகள் மாத்தறை மாவட்ட செயலாளருக்கு அறிவித்தல் விடுத்துள்ளனர். (அ-2)




★1343-எஸ்தோனியாவில் ஜேர்மனியர்களுக்கெதிரான கலவரங்களில் ஆயிரத்து 800 ஜேர்மனியர்கள் உயிரிழந்தனர்.

★1635-ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது அரசுப் பள்ளி, பொஸ்டன் இலத்தீன் பள்ளி, மாசாசுசெட்ஸ் மாநிலத்தில் பொஸ்டன் நகரில் ஆரம்பிக்கப்பட்டது.

★1639-புனித ஜார்ஜ் கோட்டை மதராசில் கட்டப்பட்டது.

★1660-சுவீடன் மற்றும் போலந்து ஆகியவற்றிற்கிடையில் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்கள் தொடர்பாக உடன்பாடு ஏற்பட்டது.

★1867-சக்கரம் ஒன்றில் படங்களைச் செருகி தொடர் படமாகக் காட்டக் கூடிய சோயிட்ரோப் எனும் கருவிக்கான காப்புரிமத்தை வில்லியம் லிங்கன் என்பவர் பெற்றார்.

★1896-நியூயோர்க் நகரில் உள்ள புகழ் பெற்ற கோஸ்டர் அண்ட் பயால்ஸ் மண்டபத்தில் வாட்வில்லி குழுவினரால் இரண்டு அழகிகள் குடை நாட்டியம் ஆடுவது போன்ற காட்சி காண்பிக்கப்பட்டது. இதுதான் விட்டாஸ்கோப் என்ற ஆரம்பகால திரைப்படம் காட்டும் கருவி மூலம் திரையில் காண்பிக்கப்பட்ட முதல் காட்சி ஆகும்.

★1905-யாழ்ப்பாணத்திற்கு முதன் முதலில் தானுந்து கொண்டு வரப்பட்டது.

★1932-நெதர்லாந்தில் 153 ஆண்டுகள் பழைமையான டி ஆட்ரியான் என்ற காற்றாலை தீயில் எரிந்து அழிந்தது.

★1940-மிசிசிப்பியில் நாட்செஸ் என்ற இடத்தில் இரவு விடுதி ஒன்று தீப் பற்றியதில் 198 பேர் உயிரிழந்தனர்.

★1941-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் முப்படைகள் தாக்குதலை ஆரம்பிக்க முன்னர் கிரேக்க மன்னர் இரண்டாம் ஜோர்ஜ் ஏதென்ஸ் நகரை விட்டு வெளியேறினார்.

★1948-அரபு இஸ்ரேல் போர்: 1948 இஸ்ரேலின் முக்கிய துறைமுகம் ஹைஃபா பாலஸ்தீனர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்டது.

★1966-முதலாம் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு கோலாலம்பூரில் நிறைவடைந்தது.

★1982-கொங்க் குடியரசு அமைக்கப்பட்டது.

★1984- எயிட்ஸ் வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது.

★1987-ஐக்கிய அமெரிக்காவின் கொனெக்ரிகட் மாநிலத்தில் பிரிட்ஜ்போர்ட் என்ற இடத்தில் கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் 28 கட்டடத் தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

★1990-நமீபியா ஐ.நா. மற்றும் பொதுநலவாய நாடுகள் அமைப்புகளில் சேர்க்கப்பட்டது.

★1993-இந்திய அரசியல் கட்சி இந்திய தேசிய லீக் உருவானது.

★1993-எரித்திரியாவில் இடம்பெற்ற வாக்கெடுப்பில் எதியோப்பியாவில் இருந்து பிரிவதற்கு எரித்திரியர்கள் பெருமளவில் ஆதரவாக வாக்களித்தனர்.

### பிறப்புக்கள்

★1791-ஜேம்ஸ் பியூக்கானன், ஐக்கிய அமெரிக்காவின் 15 ஆவது ஜனாதிபதி (இ.1868)

★1858-மாக்ஸ் பிளாங்க், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனிய இயற்பியலாளர் (இ.1947)

★1897-லெஸ்டர் பியர்சன், நோபல் பரிசு பெற்ற கனேடியப் பிரதமர்(இ.1972)

★1935-இ.முருகையன், ஈழத்துக் கவிஞர் (இ.2009)

★1938-எஸ்.ஜானகி, தென்னிந்தியத் திரைப்படப் பின்னணிப் பாடகி

### இறப்புக்கள்

★1616-வில்லியன் ஷேக்ஸ்பியர், ஆங்கில நாடக எழுத்தாளர் (பி.1564)

★1951-சார்ள்ஸ் டோவ்ஸ், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி.1865)

★1992-சத்யஜித் ராய், உலகப் புகழ்பெற்ற திரைப்பட இயக்குநர் (பி.1921)

★1993-லலித் அத்துலத் முதலி, இலங்கையின் பாதுகாப்பு அமைச்சர் (பி.1942)

★2007-போரிஸ் யெல்ட்சின், முன்னாள் ரஷ்ய ஜனாதிபதி (பி.1931)

★2009-ரூபராணி ஜோசப், இலங்கை மலையகப் பெண் எழுத்தாளர்

### சிறப்பு நாள்

★உலக புத்தக மற்றும் பதிப்புரிமை தினம்

### வில்லியம் ஷேக்ஸ்பியர்



வில்லியம் ஷேக்ஸ்பியர் ஒரு ஆங்கலக் கவிஞரும் நாடக ஆசரியருமாவார். ஆங்கில மொழியின் மிகப் பெரும் எழுத்தாளர் என்றும் உலகின் மிகப் புகழ் வாய்ந்த நாடக ஆசிரியர் என்றும் அநேக சந்தர்ப்பங்களில் லண்டனின் தேசியக் கவிஞர் என்றும் இவர் அழைக்கப்படுகின்றார். அரசியல் மன்ற உறுப்பினராகவும் திகழ்ந்த ஜான் ஷேக்ஸ்பியருக்கும் செல்வமிகுந்த நில அதிபரின் மகளான மேரி ஆர்டனுக்கும் மகனாக வில்லியம் ஷேக்ஸ்பியர் பிறந்தார். அவரது உண்மையான பிறந்த திகதி அறிய முடியவில்லை. ஆயினும் குழந்தைகளில் மூன்றாவதாகப் பிறந்தார்.

ஷேக்ஸ்பியர் தனது அறியப்பட்ட படைப்புக்களில் அநேகமானவற்றை 1589 மற்றும் 1613 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் தான் உருவாக்கியுள்ளார். ஷேக்ஸ்பியரின் படைப்புக்களில் பர்ஸ்ட் போலியோவில் அச்சிடப்பட்ட 36 நாடகங்கள் அடங்கும். அவை நகைச்சுவை வரலாறுகள் மற்றும் துன்பியல் ஆகிய அவற்றின் வகைப்படுத்தலின் பட்டியலிடப்பட்டன. ஷேக்ஸ்பியர் தன் பெயரிலுள்ள நாடகங்களின் ஒவ்வொரு வார்த்தையையும் அவர் எழுதவில்லை. பல காட்சிகள் அந்த காலகட்டத்தில் ஒரு பொதுவான நடைமுறையாக இருந்த கூட்டுழைப்பின் அடையாளங்களைக் காட்டின.

அவரது படைப்புக்களில் 38 நாடகங்கள், 154 செய்யுள் வரிசைகள், இரண்டு நெடும் விபரிப்பு கவிதைகள் மற்றும் பிற கவிதைகள் அடங்குகின்றன. அவரது நாடகங்கள் உலகில் ஒவ்வொரு பெரிய மொழியிலும் [illegible]கின்றது. வருடந்தோறும் வேறெந்த ஒரு நாடகாசிரியரின் நாடகங்[illegible] இவரது நாடகங்களே அரங்கேற்றப்பட்டன. இவர் 1616 ஆம் ஆண்டு ஏப்ரல் 23 ஆம் திகதி இறந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அராஜகங்களுக்கு எதிராகப் போராட வடக்கில் புதிய ஜனநாயக இயக்கம்

## மாவை சேனாதிராஜா தகவல்

(கொழும்பு)

**வடக்கில் ஆக்கிரமிப்பு, ஊடக அடக்குமுறைகள் உட்பட இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வரும் அராஜகங்களைக் கண்டித்து மாபெரும் போராட்டங்களை முன்னெடுப்பதற்கு ஏதுவாக ஜனநாயக இயக்கம் ஒன்றை அமைக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.**

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள்,குடியியல் அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரை உள்ளடக்கியே இந்த இயக்கத்தை அமைக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இந்த இயக்கம் இன்னும் சில தினங்களில் அமைக்கப்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

யுத்தம் முடிவுக்கு வந்துவிட்டது என இலங்கை அரசாங்கம் சர்வதேசத்திற்கு அறிவித்து நான்கு வருடங்கள் நிறைவடைகின்றன.

சிவில் உடையில் வரும் இராணுவக் குண்டர்கள் மக்கள் மீதும் ஊடக நிறுவனங்கள் மீதும் தொடர்ச்சியாகத் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். ஒட்டுமொத்தத்தில் வடக்கில் அரசாங்கத்தின் அனுமதியுடன் இராணுவத்தின் காட்டாட்சி நிலவுகின்றது.

இந்நிலையில் இன்னும் சில தினங்களில் தமிழ் மக்களை பிரதேச ரீதியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சந்தித்து விழிப்புணர்வு பிரசாரங்களை முன்னெடுக்கவுள்ளனர்.

அத்துடன் வடக்கில் இராணுவத்தினரைப் பயன்படுத்தி அரசாங்கம் மேற்கொண்டு வரும் அராஜகங்களைக் கண்டித்து மாபெரும் போராட்டங்களை நடத்துவதற்கு ஏதுவாக ஜனநாயக இயக்கம் ஒன்றை அமைக்கத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புதீர்மானித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ,உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரை உள்ளடக்கியே இந்த இயக்கம் அமைக்கப்படவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் அமைக்கப்படும் இந்த இயக்கம் மக்களை அணிதிரட்டி ஸ்ரீலங்கா அரசாங்கத்தினரதும் இராணுவத்தினரதும் அராஜங்களை சர்வதேசத்தின் கவனத்திற்கும் கொண்டு செல்லும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா மேலும் தெரிவித்தார். (அ-2)

# வருமான வரியை அறவிட அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

இலங்கையில் அதிகளவானவர்களிடமிருந்து வருமான வரியை அறவீடு செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய இதுவரை காலமும் வரி அறவீடு செய்வதற்கான வருமான எல்லையாக நிர்ணயிக்கப்பட்ட தொகை மேலும் அதிகரிக்கப்படவுள்ளது.

குறைந்த வருமானம் ஈட்டுவோரும் வருமான வரியைச் செலுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படக் கூடுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

6 இலட்சம் ரூபா வருடாந்த வருமானம் ஈட்டுவோருக்கே இதுவரை காலமும் வருமான வரி அறவீடு செய்யப்பட்டது.

இந்த உத்தேச திட்டத்திற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

வரிவருமானத்தை அதிகரித்துக் கொள்ள அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது. (அ-2)

# விளையாட்டு விழா

(கரவெட்டி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டு கழகத்தின் விளையாட்டு விழாவில் இவ்வருடம் கிரிக்கெட், உதைபந்தாட்டம், சைக்கிள் ஓட்டம், வலைப்பந்தாட்டம்,கபடி ,கரப்பந்தாட்டம் ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இதில் எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு மாவட்ட ரீதியில் பெண்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டிகள் இடம்பெறவுள்ளன.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை 5 ஓவர் 6 பேர் கொண்ட கிரிக்கெட் போட்டி இடம்பெறவுள்ளது.

இதில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் போட்டி ஏற்பாட்டாளர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அல்லது 0778075338 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(அ-3-24)

# அரசாங்கம் மதங்களின் மீது வெறித்தனம் காட்டுகின்றது

## பொன்.செல்வராசா எம்.பி. குற்றச்சாட்டு

அரசாங்கம் தற்போது மதங்களின் மீதும் மக்களின்மீதும் தனது வெறித்தனத்தினைக் காட்டி வருகின்றது என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா தெரிவித்துள்ளார்.

களுவாஞ்சிக்குடியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

கடந்த 1965, 1968 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இரண்டு ஒப்பந்தங்கள் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் செல்வநாயகத்தால் கைச்சாத்திடப்பட்டன. பின்னர் அவ் ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டன. இந்த ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டதனால்தான் இன்றும் நாம் இலட்சக்கணக்கான உயிர்களை இழந்தும்கணக்கிடமுடியாதசொத்துக்களை இழந்தும் காணிகளையும் இழந்துமுள்ளோம்.

இந்நாட்டில் இனப்பிரச்சினை இல்லை என்று ஒருபோதும் கூறமுடியாது. ஆனால் இலங்கை அரசு அதனை மறுக்கிறது. இனப்பிரச்சினை இல்லை என்று மூடி மறைப்பதற்கு அரசு ஆங்காங்கே அதுவும் நகர்ப்பகுதியில்தான் சிறுசிறு அபிவிருத்திகளைச் செய்கின்றது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அபிவிருத்தியை ஒருபோதும் மறுக்கவில்லை. அதனை வேண்டாம்என்றும்சொல்லவுமில்லை. ஆனால் தமிழினத்தின் பிரச்சினையை இலங்கை அரசு தீர்த்து வைக்காத பட்சத்திலேதான் நாம் வெளிநாடுகளை வேண்டி நிற்கின்றோம்.

இன்று அமெரிக்கா உட்பட பல நாடுகள் இலங்கை அரசினை எதிர்த்து நிற்கின்றன. அரசாங்கத்தின் நடவடிக்கைகளைக் கவனித்துக்கொண்டு இருக்கின்றன.

ஆனால் அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்கின்ற செயற்பாடுகளையும் தமிழ்மக்களின் அபிலாசைகளையும் தட்டிக்கேட்கும் கட்சியாக கூட்டமைப்பு காணப்படுகின்றது.

தற்போது அரசாங்கம் அப்பாவி மக்கள் மீது வரிகளை சுமத்தியுள்ளது. மின்சாரக் கட்டணம், பால்மா, பாண் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் பலவற்றுக்கும் விலைகளை அதிகரித்துள்ளன. நொந்துபோய் இருக்கின்ற மக்களுக்கு இது மேலும் ஒரு மிகுந்த சுமையாகவுள்ளது எனவும் சுட்டிக்காட்டினார். (அ-2)

# அரசாங்கத்துடன் இணைந்தே பயணிக்கவேண்டிய நிலை

(கொழும்பு)

அரசாங்கத்துடன் இணைந்து செல்லாத அரசியல் பயணம் மிகவும் பயங்கரமானது என ஜனநாயகத் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கம்பஹா கட்சிக் காரியாலயத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இலங்கையில் ஜனநாயகத்தின் முக்கிய அங்கமான மனிதவுரிமைப் பாதுகாப்பு கிடையாது. நீதி நேர்மையை நிலைநாட்டுவது அதனை விடவும் கடுமையானது.

அரசாங்கத்தின் அரசியல் பயணத்திற்கு புறம்பான பயணங்களை மேற்கொள்ள முடியாது.

நாட்டுக்கு நன்மை ஏற்படவேண்டுமாயின் மக்களை ஏமாற்றாத, மக்களில் தங்கி வாழாத அரசியல்கட்சிகள் உருவாக்கப்படவேண்டுமென சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். (அ-2)



யாழ்ப்பாணம் அத்தியடி விநாயகர் கோவில் மஹோற்சவத்தில் ஓதுவார் ஆர்.சண்முகராஜாவை குருக்கள் ஐயர் கௌரவிப்பதை படத்தில் காணலாம்.

# துரிதகதியில் ரயில் பாதை புனரமைப்புப் பணிகள்

(கொழும்பு)

மதவாச்சியிலிருந்து மடுவரையான புகையிரதப் பாதைகள் அமைக்கும் பணி பூர்த்தியாகும் நிலையிலுள்ளது.

மதவாச்சியிலிருந்து தலைமன்னார் வரையான புகையிரதப் பாதைகள் அமைக்கும் பணிகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன. இந்நிலையில் மதவாச்சியிலிருந்து மடு வரையான புகையிரதப் பாதைகள் அமைக்கும் பணிகள் பூர்த்தியாகும் நிலையிலுள்ளன.

மடுத்திருத்தலத்தின் ஆவணிமாத திருவிழாவை முன்னிட்டு மதவாச்சியிலிருந்து மடு வரை புகையிரத சேவைகளை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மடுத்திருத்தலம் வரையான புகையிரதப்பாதை அமைத்தல் மற்றும் புகையிரத தரிப்பிடங்களை அமைத்தல் போன்ற பணிகள் மடுத்திருத்தலத்தின் ஆவணிமாத திருவிழா தொடங்குவதற்கு முன்பாக நிறைவடைந்து விடுமென மன்னாரிலுள்ள புகையிரதத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மதவாச்சியிலிருந்து மடுவரையான முதலாவது புகையிரத சேவை ஆவணிமாத திருவிழா தொடங்குகின்ற அன்று ஆரம்பிக்கப்படுமெனவும் அவர் கூறியுள்ளார். (அ-2)

# சமாதானத்தை சீர்குலைக்கும் நபர்களுக்கு எதிரான உத்தேச சட்டம்

## ஜனாதிபதியிடம் சமர்ப்பிப்பு

சமாதானத்தை சீர்குலைக்கும் நபர்களுக்கு எதிரான உத்தேச சட்டம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இன, மத மற்றும் குலபேதங்களைத் தூண்டும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கக்கூடிய வகையில் தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார புதிய உத்தேச சட்டமொன்றைத் தயாரித்துள்ளார்.

இந்தச் சட்டமே அண்மையில் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

உள்ளடக்கங்களைக் கருத்திற்கொண்டு சட்டத்தை அனுமதிப்பது குறித்து அறிவிக்க உள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இச்சட்டத்திற்கு ஜனாதிபதி இணக்கம் வெளியிடுவார் எனவும் மதங்களுக்கு இடையில் முரண்பாடுகளைத் தூண்டும் வகையில் எழுத்துமூலமோ அல்லது வாய்மொழி மூலமோ கருத்து வெளியிடுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க இது வழிகோலும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார சுமைகளாலேயே மக்கள் நாட்டை விட்டு ஓடுகின்றனர்

## ஐக்கிய தேசியக் கட்சி கொதிப்பு

(கொழும்பு)

**நாட்டில் ஏற்பட்ட பயங்கரவாதத்திற்கு அஞ்சி சொந்த இடத்தை விட்டு அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் தஞ்சமடைந்த மக்கள் தற்போது பொருளாதார சுமைகளினால் வேறு நாட்டிற்குச் செல்லும் நிலைமை ஏற்பட்டுள்ளதென ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,**



இலங்கையின் வரலாற்றில் எந்தவொரு அரசாங்கமும் செய்யாதளவிற்கு மின்கட்டண உயர்வு மற்றும் பொருட்களின் விலை அதிகரிப்புக்களை இந்த அரசாங்கம் செய்துள்ளது.

பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு மக்களை எந்தளவுக்கு ஏமாற்ற முடியுமோ அந்த அளவுக்கு ஏமாற்றி வருகின்றது. மக்கள் அன்று பயங்கரவாதத்திற்கு அஞ்சி நாட்டை விட்டு ஓடி வேறு நாடுகளில் தஞ்சமடைந்தனர். தற்போது அரச பொருளாதார அச்சுறுத்தல்களுக்கு மக்கள் முகங்கொடுக்கமுடியாது நாட்டை விட்டு ஓடும் நிலைமையேற்பட்டுள்ளது.

அரசாங்கத்தில் நிறைந்துள்ள ஊழல் மோசடிகள் மற்றும் வெளிநாடுகளிடம் அதிக வட்டிக்கு வாங்கிய கடனை மீளச் செலுத்தவுமே இவ்வாறான கட்டண உயர்வுகளை உயர்த்தி வரியை அறவிட்டு மக்கள் மீது பாரிய அழுத்தத்தை பிரயோகித்துள்ளது.

சுகாதார சேவை, கல்வித்துறை மற்றும் விவசாயத்துறை போன்ற எதையெடுத்தாலும் ஊழல் மோசடிகளே நிறைந்து காணப்படுகின்றன. அரச வைத்தியசாலையில் அனைத்து வகையான மருந்துகளும் இருக்க தனியார் மருந்தகங்களிலேயே மக்கள் பணம் கொடுத்து அம்மருந்துகளை வாங்க வேண்டிய நிலைமையேற்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டின் மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கில் நிர்மாணிக்கப்பட்ட நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் 19 தடவைகள் மீள் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நாட்டின் பொருளாதாரத்தைச் சீரழிக்கும் நோக்கிலேயே அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது.

உலக சந்தையில் எண்ணெய் விலை குறைவடைந்துள்ளபோதும் எமது நாட்டில் எண்ணெய் விலையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. சிறுபிள்ளைகளுக்கு கூறும் கற்பனைக் கதைகளைக்கூறி நாட்டு மக்களுக்கு பொய்யான விளக்கத்தை கொடுக்க இந்த அரசு முனைகின்றது.

எனவே, இவ்வாறான சண்டித்தனப் போக்கிற்கெல்லாம் நாட்டுமக்கள் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். இந்த அரசைத் தொடர்ந்து ஆட்சியில் நிலை நிறுத்தக்கூடாது. மக்கள் நல்லதொரு ஆட்சி மாற்றத்தை உருவாக்க வேண்டுமென்றால் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து அனைத்து மக்களும் வீதியில் இறங்கிப் போராட வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# க.பொ.த.(சா/த) பரீட்சை முடிபுகள்- 2012

**யா/ வேலணை மத்திய கல்லூரி**

எஸ். சஞ்சைகுமார்- 7ஏபிஎஸ், எ.மயூரி- 5ஏ3பிசி, என்.சுதர்மன்-5ஏ2பிசி, ரி.யதுர்சன்- 4ஏபி2சிஎஸ்.

**நல்லூர் மங்கயர்க்கரசி வித்தியாலயம்**

து.நிக்சன்-5ஏ2பிசிஎஸ், பி.சதுர்ஷிகா- 2ஏபி6சி.

# ஒவ்வாமையால் 15 மாணவர்கள் பாதிப்பு

கட்டுகஸ்தோட்டை கல்வி வலயத்திகுட்பட்ட ஹத்தரலியத்த ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கு நேற்று ஒவ்வாமை ஏற்பட்டுள்ளது.

இதன்படி சுமார் 15 மாணவர்கள் ஒவ்வாமையினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனையடுத்து குறித்த பாடசாலையின் வகுப்பொன்றும் மூடப்பட்டுள்ளது.

சுகவீனமுற்ற மாணவர்கள் வைத்திய சிகிச்சை பெற்ற பின்னர் வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர் என கல்வி காரியாலயம் தெரிவித்தது. இரண்டாம் தவணைக்காக இன்று பாடசாலை ஆரம்பமான நிலையிலேயே சம்பவம் ஏற்பட்டுள்ளது. (அ-2)

# சிலிண்டர் வெடித்ததில் பெண்ணொருவர் பலி!

காஸ் சிலிண்டர் வெடித்ததில் கொழும்பு 15 மோதர பிரதேசத்தை சேர்ந்த பெண்ணொருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். தற்காலிகமாக கொழும்பு 15 மோதர பிரதேசத்தில் வசித்து வந்தார்.

இந்நிலையிலேயே அவர் வசித்து வந்த வீட்டில் காஸ் சிலிண்டர் வெடித்துள்ளது. இச்சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை மோதர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# சர்வதேச சூழ்ச்சியிலிருந்து நாட்டை காப்பாற்றுங்கள்

## அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா

(கொழும்பு)

தேசிய, சர்வதேச சூழ்ச்சிகளிலிருந்து அரசாங்கத்தையும் ஜனாதிபதியையும் பாதுகாப்பதில் சகல மக்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையை நவீன நாடாக கட்டியெழுப்பும் ஜனாதிபதியின் செயற்பாடுகளை எரிச்சலுடனும் பொறாமையுடனும் நோக்குபவர்கள் தேசிய, சர்வதேச ரீதியில் உள்ளனர். அவர்கள் நாட்டின் உண்மை நிலையை அறிந்து கொள்வது அவசியம்.

மக்கள் அன்று அரசாங்கத்திடம் கேட்டதெல்லாம் நாட்டைப் பாதுகாத்து தம்மைப் பாதுகாக்க பங்கரவாதத்தை ஒழிக்குமாறு மட்டுமே. எனினும் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வந்த பின்னர் மக்கள் கடந்த காலத்தை மறந்து பல்வேறு வேண்டுகோள்களை முன்வைக்கின்றனர். அதனை நாம் எதிர்க்கவில்லை. ஏனெனில் இது மக்களின் இயல்பான சுபாவம்.

யுத்தம் முடிவுற்றதன் பின்னர் தமது வாழ்வை மேம்படுத்திக் கொள்வதற்கு இத்தகைய வேண்டுகோள்களை முன்வைக்கும் உரிமை மக்களுக்கு உள்ளது. இந்த வகையில் ஜனாதிபதி யுத்தம் முடிவுற்றதன் பிரதிபலனை சகல மக்களும் அனுபவிப்பதற்குப் பெற்றுக் கொடுத்துள்ளார்.

ஒரு பிரதேசம் என்றில்லாமல் சகல பிரதேசங்களினதும் முன்னேற்றத்திற்கு ஜனாதிபதி வழிவகுத்தார். அதிலும் வடக்கு, கிழக்கு மாகாண அபிவிருத்தியில் அவர் மிகுந்த அக்கறை செலுத்தி வருகிறார். பெருமளவு நிதியைச் செலவிட்டு இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியேற்றும் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளார்.

இதனைப் பலர் மறந்து செயற்படுகின்றனர். தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் இதனைத் தெளிவுபடுத்த வேண்டிய தேவை உள்ளது. தமிழ், சிங்களம், முஸ்லிம் மக்களென சகல இன, மத மக்களுக்கும் சேவைகளைத் திட்டமிட்டு வழங்கிய பெருமை ஜனாதிபதியையே சாரும் என்றார். (அ-2)

# டுபாயில் உள்ள 19 ஈழத்தமிழர்கள் இலங்கைக்கு அனுப்பப்படமாட்டார்கள்

## வைகோவுக்கு மன்மோகன் உறுதியளிப்பு

டுபாயில் வசிக்கும் 19 ஈழத்தமிழர்களை இலங்கைக்கு அனுப்பாமல் வேறு நாடுகளுக்கு அனுப்ப இந்திய வெளிவிவகாரத்துறை உரிய நடவடிக்கை எடுத்து வருவதாக பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பொதுச்செயலாளர் வைகோவுக்கு அவர் கடிதம் ஒன்றை எழுதி அனுப்பி வைத்துள்ளார்.

டுபாயில் உள்ள 19 ஈழத்தமிழர்களை இலங்கைக்கு அனுப்ப டுபாய் அரசு திட்டமிட்டு உள்ளது. அவர்கள் இலங்கைக்கு அனுப்பப்பட்டால் கொடூரமான சித்திரவதைக்கும் உயிர்க் கொலைக்கும் ஆளாவார்கள். எனவே, அவர்களை இலங்கைக்கு அனுப்ப விடாது உடனே தடுத்து நிறுத்த வேண்டும் என்று இந்திய பிரதமர் மன்மோகன்சிங்குக்கு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கடந்த 2 ஆம் திகதி கடிதம் அனுப்பினார்.

இது தொடர்பாக ஏப்ரல் 6 ஆம் திகதி பிரதமரிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வைகோ பேசினார். அப்போது உரிய நடவடிக்கை எடுப்பதாக வைகோவிடம் பிரதமர் உறுதி அளித்தார். அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பிரதமர் மன்மோகன்சிங் வைகோவுக்கு ஏப்ரல் 15ஆம் திகதியிட்ட கடிதத்தில், ஐ.நா.மனித உரிமைகள் ஆணையகம் மூலம் 19 ஈழத் தமிழர்களை டுபாயில் இருந்து இலங்கைக்கு அனுப்பாது வேறு நாடுகளுக்கு அனுப்ப இந்திய வெளிவிவகாரத் துறை உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

அதேபோல் இந்திய முன்னாள் வெளிவிவகாரத்துறை அமைச்சர் யஷ்வந்த் சின்கா வைகோவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் ஈழத் தமிழர்களைக் காப்பாற்ற இந்திய அரசுக்கும் வெளிவிவகாரத்துறைக்கும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கடிதம் எழுதி உள்ளேன் என்று தெரிவித்துள்ளார். (அ-2)





அரியாலை விளையாட்டு கழகத்தினால் நடத்தப்பட்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியில் வெற்றி பெற்று முதலிடத்துக்கு முன்னேறிய கலைவாணி விளையாட்டுக்கழகத்தின் அணித்தலைவருக்கு முன்னாள் யாழ் . மாவட்ட துடுப்பாட்ட பயிற்றுனர் சண்முகலிங்கம் வெற்றிக்கிண்ணத்தை வழங்கி வைப்பதையும் வெற்றிபெற்ற அணியையும் படங்களில் காணலாம்.

(படங்கள் -மானிப்பாய் செய்தியாளர்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிச்சுவான் மாகாணத்தில் பூகம்பம்; 200 ஐ தாண்டியது உயிரிழப்பு



சீனாவின் தென்மேற்கு பகுதியில் அமைந்துள்ள சிச்சுவான் மாகாணத்தில் யாயன் நகருக்கு அருகே நேற்று முன்தினம் காலை ஏற்பட்ட பூகம்பம் ரிக்டர் அளவில் 7 ஆக பதிவானதில் பல மாடிக் கட்டடங்கள் இடிந்து தரைமட்டமாகின.

இந்த நிலநடுக்க அதிர்வுகளால் யாயன் நகரமும் அதை சுற்றியுள்ள பகுதிகளும் சுமார் 20 விநாடிகள் குலுங்கின.

தொழிற்சாலைகளில் பணியில் இருந்தவர்கள் அங்கிருந்து வெளியேறி சாலைகளில் தஞ்சம் பகுந்தனர். நிலநடுக்கத்தினால் ஏற்பட்ட இடிபாடுகளில் ஏராளமானவர்கள் சிக்கிக் கொண்டனர்.

இத்தகவல் அறிந்ததும் மீட்புப் படையினர் விரைந்து சென்றனர். ஆனால், வீதிகளை வழிமறித்து கட்ட இடிபாடுகள் கிடந்ததால் அவர்களால் விரைவாக அந்த பகுதிக்குச் செல்ல முடியவில்லை. இதனால் பலர் இடிபாடுகளுக்குள் சிக்கி மூச்சுத் திணறி பரிதாபமாக இறந்துள்ளனர்.


நேற்றுக் காலை வரையான நிலவரப்படி இடிபாடுகளில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 200 யும் தாண்டியுள்ளது. காயமடைந்தவர்களில் சுமார் 15 ஆயிரம் பேர் மருத்துவமனைகளிலும் தற்காலிக மருத்துவ முகாம்களிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் பல முதியோர்கள் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சைப் பெற்று வருவதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப் படுகின்றது.

சீனப் பிரதமர் லி கெக்கியாங் நிவாரணப் பணிகளை நேரில் பார்வையிட்டு பாதிக்கப்பட்டோருக்கு ஆறுதல் கூறினார். வீடிழந்த மக்களில் பலர் கைக்குழந்தைகளுடன் வயல்கள். கார்கள், வீதியோரம் போன்ற பகுதிகளில் தங்கியுள்ளனர். நிலநடுக்கத்தால் வீதிகளும் பிளவடைந்துள்ளதால் மீட்புப் படையினர் சென்ற வாகனம் பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 2 வீரர்கள் பலியாகியுள்ளனர்.

நிவாரணப் பொருட்களைப் பெற பெரும் மக்கள் கூட்டம் அலைமோதுகின்றது. கைக்குழந்தைகளுடன் உணவுப் பொருட்களைப் பெற பெண்கள் முந்தியடித்துக் கொண்டு கையை நீட்டும் காட்சி மனதைப் பதறச் செய்கின்றது.

மீட்புப் படையினருக்கு உதவுவதற்காக ரஷ்யாவில் இருந்து சுமார் 200 மீட்புப் பணியாளர் கொண்ட குழுவினர் நேற்று பிற்பகல் சீனா வந்தடைந்துள்ளனர். (அ)

# வங்கதேசத்தின் ஜனாதிபதியாக அப்துல் ஹமீத் தெரிவானார்



வங்களாதேசத்தில் புதிய ஜனா திபதியாக அப்துல் ஹமீத் நேற்று போட்டியின்றி தேர்வு செய்யப்பட் டார்.

ஆளும் கட்சியான அவாமி லீக் சார்பில் பாராளுமன்ற சபாநாயகராக பொறுப்பு வகித்து வந்த அப்துல் ஹமீத் தற்போது வங்களாதேச ஜனாதிபதியாகியுள்ளார்.

வங்களாதேசத்தின் 20 ஆவது ஜனாதிபதியாக அப்துல் ஹமீத் (வயது 69) போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டதாக தலைமை தேர்தல் கமிஷனர் காசி ரகீபுதீன் அஹமத் நேற்று அறிவித்துள்ளார்.

54ஆண்டு கால அரசியல் அனு பவம் கொண்ட அப்துல் ஹமீத் கடந்த மாதம் 14 ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி ஜில்லூர் ரகுமான சிங்கப்பூர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டது முதல் அந்நாட்டின் தற்காலிக ஜனாதிபதியாக பொறுப்பு வகி த்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி இறந்த 90 நாட்களுக்குள் புதிய ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்ற வங்களா தேச அரசியலமைப்பு சட்டத்திற்கிணங்க அப்துல் ஹமீத் இப்போது தேர்வு செய்யப்பட்டுள்ளார். (அ-2)

# வீட்டுக்காவலில் உள்ள முஷாரப் இரண்டு அறைகளை பயன்படுத்தலாம்

(இஸ்லாமாபாத்)

கைது செய்யப்பட்டு வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப்புக்கு மேலும் ஒரு அடியாக அவர் 2 அறைகளில் மட்டுமே இருக்க கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தான் ஜனாதிபதியாக இருந்த முஷாரப் அவசர நிலையை அமுல்படுத்தியதுடன் 60 இற்கும் மேற்பட்ட நீதிபதிகளை பதவி நீக்கம் செய்தார்.

இதன் காரணமாக இது தொடர்பான வழக்கில் கைதுசெய்யப்பட்ட முஷாரப்பை தீவிரவாத தடுப்பு நீதிமன்றம் 15 நாட்கள் நீதிமன்றக் காவலில் வைக்க உத்தரவிட்டது.

இஸ்லாமாபாத்துக்கு புறநகரில் சக்ஷஜாத் பகுதியில் இருக்கும் முஷாரப்புக்கு சொந்தமான அரண்மனை போன்ற பங்களாவை துணை சிறைச்சாலையாக அறிவித்து அதிலேயே அவர் வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டார்.

இந்நிலையில் அவர் 2 அறைகளுக்கு மட்டும் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அனைத்து பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி தலைவர்களில் ஒருவரான முகம்மது அம்ஜத் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அம்ஜத் மேலும் தெரிவிக்கையில், முஷாரப் தனது பெரிய அரண்மனையில் 2 அறைகளில் மட்டுமே நடமாடலாம் என கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. ஏனைய அறைகளுக்குச் செல்ல அவர் அனுமதிக்கப்படவில்லை.

தனது குடும்ப உறுப்பினர்கள், அலுவலர்கள் ஆகியோரை சந்திக்கவும் அனுமதி வழங்கப்படவில்லை. வழக்கறிஞர்களைக் கூட அவர் சந்திக்க முடியவில்லை. இதனால் அவர் மீது பல்வேறு நீதிமன்றங்களில் தொடரப்பட்ட வழக்குகள் பற்றி விவாதிக்க முடியவில்லை. முஷாரப்புக்கு மட்டும் சட்டத்தரணிகளைச் சந்திக்க அனுமதி மறுக்கப்படுவது கண்டிக்கத்தக்கது எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் முன்னாள் பிரதமர் யூசுப் ரசா கிலானி ராவல் பிண்டியில் சில ஆண்டுகளுக்கு முன் சிறையில் இருந்த போது அவருக்கு அனைத்து வசதிகளும் சுதந்திரமும் வழங்கப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். (அ-5)

# போராட்டக்காரர்களை ஒடுக்க சிரியாவுடன் இணைகிறது ஈரான்

(டமாஸ்கஸ்)

சிரிய ஜனாதிபதி அசாத்தின் ஆட்சிக்கெதிராகப் போராடிவரும் மக்களை ஒடுக்கு வதற்கு சிரியாவிற்கு பக்கபலமாக இருக்கப் போவதாக ஈரான் அறிவித்துள்ளது.

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் அசாத்தின் ஆட்சிக்கு எதிராக கடந்த 3 ஆண்டுகளாக மக்கள் போராடி வரும் நிலையில் அந்நாட்டு அரசு இராணுவத்தை ஏவி போராட்டக்காரர்களை ஒடுக்கி வருகிறது.

மேலும் பொதுமக்கள் வசிக்கும் பகுதிகளில் போர் விமானங்கள் குண்டு மழை பொழிந்து வருவதால் சிரியாவில் இருந்து இலட்சக்கணக்கான மக்கள் வெளியேறி ஈரான்,



லெபனான், பாலஸ்தீனம் உள்ளிட்ட அண்டை நாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

இவர்களில் லெபனானில் மட்டும் 4.25 இலட்சம் அகதிகள் தஞ்சமடைந்து உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சிரியாவின் போராட்டக்காரர்களுக்கு அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகள் உதவி செய்து வருகின்றன.

இந்நிலையில் 3 நாட்கள் பயணமாக சிரியா சென்றுள்ள ஈரான் நாட்டின் தேசிய பாதுகாப்புச் செயலாளர் அலய்தீன் போரோ ஜெர்டி மேற்கத்தேய நாடுகளின் மூர்க்கத்தனமாக வெளியுறவுக் கொள்கையினால் நெருக்கடியை சந்தித்து வரும் சிரிய அரசுக்கு ஈரான் பக்க பலமாக இருக்கும் என உறுதியளித் துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2-5)

# பேருந்து கவிழ்ந்ததில் ஒருவர் பலி; 23 பேர் காயம்

மத்திய பிரதேசத்தில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் ஒருவர் பலியானதுடன் மேலும் 23 பேர் வரை படுகாயமடைந்துள்ளனர். மத்திய பிரதேச மாநிலம் பாலாகத் என்ற இடத்தில் இருந்து மண்ட்லா நோக்கி நேற்று காலை ஒரு பேருந்து சென்று கொண்டிருந்தது. அப்பேருந்து கிராமத்தின் அருகில் மலைப்பாதையில் சென்றபோது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி தடம் புரண்டதில் குறித்து விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த பேருந்தில் பயணம் செய்த நபர் பலத்த காயம் அடைந்து சம்பவ இடத்திலேயே பலியானார். சாரதி உட்பட 23 பேர் காயமடைந்து மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் சாரதியின் உடல் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

இவ்விபத்து குறித்து பொலிஸார் வழக்கு பதிவு மேற்கொண்டு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-5)

## பொஸ்டன் குண்டு வெடிப்பின் பின்

# பாதுகாப்புக்குழு-ஒபாமா ஆலோசனை! வழக்கமான பணிகளில் தாக்குதல்தாரி!!

(வோஷிங்டன்)

பொஸ்டன் குண்டுவெடிப்புச் சம்பவத்தின் எதிரொலியாக அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தேசிய பாதுகாப்புக் குழுவினருடன் சனிக்கிழமை ஆலோசனை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.


அமெரிக்காவின் புகழ் பெற்ற பொஸ்டன் மரதன் ஓட்டத்தின் போது நிகழ்ந்த குண்டு வெடிப்பில் 3 பேர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் 180 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் தீவிர விசாரணை மேற்கொண்டதையடுத்து செசன்யாவைச் சேர்ந்த சகோதரர்களுக்கு இதில் தொடர்பு இருந்தது தெரியவந்துள்ளது.

தொடர்ந்து பொலிஸார் மேற்கொண்ட தீவிர தேடுதல் வேட்டையின் போது இரு தரப்புக்கும் இடையே துப்பாக்கி மோதல் ஏற்பட்டதில் மூத்த சகோதரர் தமர்லேன் சர்னேவ் (வயது 26) என்பவர் கொல்லப்பட்டார். இதில் காயமடைந்த அவரது சகோதரர் ஜோஹார் சர்னேவ் (வயது 19) என்பவர் பலத்த காயங்களுடன் படகில் மறைந்திருந்த போது பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இதற்கிடையே பொஸ்டன் குண்டு வெடிப்பு சம்பவத்தை அடுத்து தேசிய பாதுகாப்புக் குழுவுடன் ஜனாதிபதி ஒபாமா ஆலோசனை மேற்கொண்டதுடன் 90 நிமிடங்கள் நடைபெற்ற இக்கூட்டத்தில் தற்போதைய சூழல் குறித்து விவாதிக்கப்பட்டதாகும் பாதுகாப்பைப்பலப்படுத்துதல் பற்றியும் ஆலோசனை நடைபெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பொஸ்டன் குண்டு வெடிப்பு சம்பவத்துக்கு பின் ஜோஹார் சர்னேவ் வழக்கம் போல் தனது பணிகளை மேற்கொண்டுள்ளார் எனவும் தெரியவருகின்றது. (அ-2-5)



குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் பிரம்மகுமாரிகள் தீர்த்த விழா நடைபெற்றது. இந்நிகழ்வினை முதல்வர் நரேந்திரமோடி ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகிய பழங்களில் எதைக் கொள்ளுவோம். இதைத் தள்ளுவோம் என்று தேர்வது எப்படி?
–ஷேக்ஸ்பியர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவு

## வலி.வடக்கு மீள்குடியேற்றக்குழு அறிக்கை

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள காணிகளை விடுவிக்கக்கோரியும், நில அபகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்தும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு வலி.வடக்கு மீள் குடியேற்ற குழு ஆதரவு தெரிவித்துள்ளதோடு மக்களை யும் தவறாது கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பில் அக் குழுவின் தலைவரும் வலி.வடக்கு உதவியாளரு மான ச.சஜீவன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

நிலப்பறிப்பு தமிழ் மக்களின் வாழ்வின் உயிரைப் பறிப்பது போன்றது. உயிர் நாடியில் கையை வைப்பது என்பது ஒட்டுமொத்த தமிழர்களையும் இலங்கையில் இருந்து துரத்துவது போன்றது.

மூன்று தசாப்த போர் முடிவுக்கு வந்தும் நாலாம் கட்டமாக நிலப்பறிப்பு இடம்பெறுகிறது .

இதனை தடுப்பதற்கான சக்தி தமிழர்களிடம் இல்லாது போயின் எதனையும் எடுப்பதற்கான சக்தியும் இல்லாமல் போய்விடும்.

எல்லோரும் நீதிக்காக பாதை அமையுங்கள். உலகின் நியாயபூர்வமான அறிவுறுத்தல்களைப் புறந்தள்ளி விட்டு தமிழ்மக்களை தொடர்ந்தும் அவலத்துக்குள்ளாக்கி மகிழும் பேரினவாத வெறியின் மிக மோசமான நடவடிக்கையே வலி.வடக்கு நில அபகரிப்பு உத்தியாகும்.

வலி.வடக்கில் நில சுவீகரிப்பின் மூலம் 22 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 30 ஆயிரம் மக்கள் நடுவீதியில் விடப்பட்டுள்ளனர்.

வலி.வடக்கில் நில அபகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து நாளை மறுதினம் நடைபெறும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ளுமாறு வலி.வடக்கில் இருந்து இடம் பெயர்ந்த 24 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த அனைத்து மக்களையும் கேட்டுக் கொள்கிறோம் என்றுள்ளது. (ஏ–6)

## பொதுவேட்பாளரைத் தேடும் நிலையில் தமிழ் அரசியல் தரப்புகள்

ஒரு பெரியவரிடம் சென்று ஐயா! தத்துவத்திற்கும் மகா தத்துவத்திற்கும் என்ன வித்தியாசம் என்று கேட்டோம். அதற்கு அந்தப் பெரியவர்,

கேட்போனுக்கு விளங்கவில்லை ஆயின் அது தத்துவம். கேட்போனுக்கும் சொல்பவனுக்கும் விளங்கவில்லை ஆயின் அது மகாதத்துவம் என்றார்.

பெரியவரின் விளக்கத்தைக் கேட்டபோது தான் எங்கள் அரசியல் தலைமைகளின் நிலைமையையும் உணர முடிந்தது.

எங்களிடம் அரசியல் தொடர்பில் மகாதத்துவ நிலைதான் உள்ளது.

அதாவது கேட்பவனுக்கும் புரியவில்லை. அதைச் சொல்பவனுக்கும் புரியவில்லை. இந்த மகாதத்துவ நிலை பிரச்சினைக்குத் தீர்வைத் தராது.

முதலில் எங்களுக்கு இருக்கக்கூடிய பிரச்சினையை–அதற்குத் தீர்வாக அமையக் கூடியதை முதலில் நாம்தான் இனங்காண வேண்டும்.

எனினும் எங்கள் தமிழ் அரசியல் கட்சிகளிடம் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் இன்னமும் ஒரு தெளிவான சிந்தனை ஏற்படவில்லை.

இதன் காரணமாகத்தான் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த இந்தியப் பிரதிநிதிகளிடம் இருவேறுபட்ட தீர்வு நிலைகள் பற்றி பேசப்பட்டன.

மகாதத்துவம் இருக்கும் இடத்தில் மகா ஞானிகளும் இருப்பர். அவர்கள் தங்களிடம் வேறு யாரிடமும் இல்லாத புத்திக்கூர்மை இருப்பதாக எண்ணி காரியத்தைக் கெடுப்பர் என்ற உண்மை எங்களிடமும் நிஜமாகி விடுகின்றது.

எதுவாயினும் எதிர்வரும் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் பதவிக்கு கட்சி சாராத பொது வேட்பாளர் ஒருவரைத் தேடுகின்ற தேவை தமிழ் அரசியல் கட்சிகளுக்குள் உருவாகியுள்ளது.

இந்த நிலைமை, கூட்டுச் சேர்ந்த எவர் மீதும் எவருக்கும் நம்பிக்கை இல்லை என்பதை நிரூபிக்கின்றது.

அப்படியானால் தமிழ் அரசியல் தரப்பில் இன்னமும் திருத்தம் தேவை. அதாவது தமிழ் அரசியல்வாதிகள் பரிசுத்தப்பட வேண்டும் என்பதை தமிழ் அரசியல் தரப்புகள் ஏற்றுக் கொள்கின்றன. இந்தத் திருத்தம் காலங்கடத்துவதாக இல்லாமல் உடனடியாக ஏற்பட வேண்டும்.

தமிழ் அரசியல் தரப்பில் திருத்தம் ஏற்படாவிட்டால், வடக்கு மாகாண முதலமைச்சர் பதவிக்கு பொது வேட்பாளர் என்று வரையறுத்துக் கொள்ளாமல் மாகாண சபைக்கான வேட்பாளர்கள் அனைவரையும் பொது வேட்பாளர்களாகத் தெரிவு செய்யுங்கள் என்று கூறும் அளவில் நிலைமை உருவாகுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

# இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸை குற்றஞ்சாட்டுகிறார் மனோ கணேசன்

(கொட்டகலை)

கொட்டகலை ஆர்ப்பாட்டத்திற்கு இடையூறு விளைவித்து கல் வீச்சுத் தாக்குதல் நடத்தியது அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியினரே என மலையக தொழிற்சங்க கூட்டமைப்பின் தலைவர் மனோகணேசன் மற்றும் அதன் செயலாளர் அ.லோரன்ஸ் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

இதன்போது கூட்டு ஒப்பந்தத்துக்கு எதிராக மலையக தொழிற்சங்க கூட்டமைப்பு கொட்டகலையில் நடத்திய ஆர்ப்பாட்டத்திற்கு இடையூறு விளைவிக்கப்பட்டதுடன் கல் வீச்சுத் தாக்குதலும் நடத்தப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பில் கருத்து வெளியிட்ட மலையகத் தொழிற்சங்க கூட்டமைப்பின் தலைவர் மனோ கணேசன்,

கொட்டகலையில் நடந்த ஆர்ப்பாட்டத்தின்போது என் மீது தாக்குதல் நடத்திய குழுவில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன் , நுவரெலியா பிரதேச சபையின் முன்னாள் தலைவர் சக்திவேல், இ.தொ.காவின் மத்திய மாகாண சபை உறுப்பினர் ஆகியோர் இருந்தனர்.

இவர்களை நான் நேரடியாகவே கண்டேன். அனைவரும் மது போதையில் இருந்தனர்.

கொட்டகலையில் கூட்டு ஒப்பந்தத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாக நாம் இரண்டு வாரங்களுக்கு முன்னரே அறிவித்துவிட்டோம்.

நிலைமை அப்படியிருக்கையில் அதே தினத்தில் இன்னுமொரு நிகழ்வு நடைபெறுவது திட்டமிட்ட அடிப்படையில் எமது போராட்டத்தை குழப்பும் செயலாகும்.

இவ்விடயம் தொடர்பாக பிராந்திய பொலிஸ்மா அதிபர் மகாதெரவிடம் நாம் தெரிவித்தோம்.

அவர் கலவரம் ஏற்படும் என்ற பதிலை எமக்கு வழங்கினார்.

எமது போராட்டத்தைக் குழப்பியது இ.தொ.காவினரே. இவ்விடயத்தில் இ.தொ.காவின் செயலாளர் ஆறுமுகம் தொண்டமானையே நாம் குற்றவாளியாக கருதுகிறோம் என்று கூறினார்.

எது எப்படி இருந்தபோதிலும் தடைகளைத் தகர்த்தெறிந்துவிட்டு வெற்றிகரமாக நாம் எமது போராட்டத்தை நடத்தினோம் என்றார். (ஏ–11)

## இரும்புக் கடைகளில் பழைய ஆயுதங்கள்

(கொழும்பு)

வடக்கில் கைப்பற்றப்பட்ட பழைய ஆயுதங்கள் அனுராதபுரம் மற்றும் நொச்சியாகம பிரதேசத்தில் இரும்புக் கடைகளுக்கு விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட குழுவொன்றினால் பீரங்கிக் குண்டுகள், பீரங்கிப் பாகங்கள், வெற்று மோட்டார் குண்டு உள்ளிட்ட பொருட்கள் இவ்வாறு விற்பனை செய்யப்படுகின்றது.

இவ்வாறு விற்பனை செய்யப்பட்ட வெடி பொருட்கள் காரணமாக அண்மையில் வெடிப்புச் சம்பவமொன்றும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பழைய ஆயுத விற்பனையினால் பிரதேச மக்கள் பீதியடைந்துள்ளனர். இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இந்த சம்பவங்கள் குறித்து எவ்வித தகவல்களும் கிடைக்க வில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஏ–1)

## வலி.வடக்கு மக்கள் இன்று ஒன்றுகூடுவர்

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கில் இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்டுவரும் தமிழ் மக்களின் காணி அபகரிப்புக்கு எதிராக எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் குறித்து முடிவெடுக்க அப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களை இன்று காலை 8.30 மணிக்கு மல்லாகத்திலுள்ள பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் ஒன்று கூடுமாறு வலி.வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஏ–6)

## மினிபஸ்–மோ.சைக்கிள் விபத்து; தந்தையும் 3 பிள்ளைகளும் காயம்

(யாழ்ப்பாணம்)

மினிபஸ்– மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் மற்றும் அவரது பிள்ளைகள் மூன்று (சிறுவர்கள்) காயங்களுக்குள்ளாகி (சிவன் கோயில் அருகில்) கே.கே.எஸ். வீதியில் நேற்று முன்தினம் பிற்பகல் ஒருமணியளவில் வேகமாக வந்த மினிபஸ் சிறுவர்களுடன் வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது.

மோட்டார்சைக்கிளை மினிபஸ் மோதியதோடு சிறுவர்களும் பஸ்ஸின் கீழ் அகப்பட்டிருந்தனர். இருப்பினும் மயிரிழையில் அவர்கள் சிறுகாயங்களுடன் உயிர் தப்பினர். (செ–6)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## உலகை மாற்றும் ஒற்றைச் சொல்



✦ நீங்கள் எல்லையில்லாத வலிமை பெற்றவர்கள். உங்களின் உண்மை இயல்போடு ஒப்பிடும்போது காலமும் இடமும்கூட ஒரு பொருட்டல்ல.

✦ இல்லை என்று ஒருபோதும் சொல்லாதீர்கள். என்னால் இயலாது என்று எதையும் மறுக்காதீர்கள். எதையும் உங்களால் சாதிக்கமுடியும்.

✦ பலவீனத்திற்கு பரிகாரம் வலிமையைக் குறித்துச் சிந்திப்பதே.

✦ உபநிடதங்களில் இருந்து கிளம்பி அறியாமைக்குவியல் மீது குண்டைப்போல வெடிக்கும் சொல் அஞ்சாமை என்பதுதான். இந்த ஒற்றைச் சொல்லிலேதான் வேதத்தின் சாரம் அடங்கியிருக்கிறது. இந்தச் சொல்தான் உலகையே மாற்றியமைக்கும்

✦ கடுமையாக உழைக்க முன்வந்தால் குறிக்கோளை எளிதில் அடையலாம்.

✦ மனதில் வலிமை இருந்தால் மகிழ்ச்சியும் வளமும் நிறைந்த நிரந்தரமான வாழ்வு கிடைக்கும். பலவீனம் இருந்தால் இடையறாத துன்பமும் சித்திரவதையுமான வாழ்வு அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய ஆட்டங்கள்

ROYAL CHALLENGERS BANGALORE

Vs

மாலை 4 மணி

PUNE WARRIORS INDIA

KINGS XI PUNJAB

இரவு 8 மணி

Vs

DELHI DAREDEVILS

# ரிச்சர்ட்ஸின் திட்டம் பலித்தது!

## சொல்கிறார் அதிரடியாக ஆடிய சேவாக்

மும்பை இந்தியன்ஸ் அணியுடனான வெற்றிக்குப் பின் தனது அதிரடி ஆட்டத்தை பற்றி டில்லி அணியின் வீரர் சேவாக் கருத்து வெளியிடும்போது.

தொடர்ந்து தோல்வியை சந்தித்து வந்த எங்கள் அணி வீரர்களுக்கு விவியன் ரிச்சர்ட்ஸ் நம்பிக்கை அளிக்கும் விதமாக சில திட்டங்களையும் ஆலோசனையையும் வழங்கினார். அவரது திட்டங்களும் ஆலோசனைகளும் உதவியாக இருந்தது. இதற்கு பலனும் கிடைத்தது. இதற்காக அவருக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். என்னிடம் அவர் நீங்கள் நல்ல நிலையில் இருப்பதாக தெரிவித்தார். ஆடுகளத்தில் துடுப்பாட்ட வீரர்கள் பயத்தில் இருந்தால் கூட அதை வெளியே காட்டிக்கொள்ளாமல், தான் உறுதியுடன் இருப்பதாக காட்டி கொள்ள வேண்டுமென்று கூறினார். துடுப்பாட்டம் என்றால் எந்த நிலையிலும் பயப்படக்கூடாது என்ற அவரது ஆலோசனை நம்பிக்கையை ஏற்படுத்தியது. இவ்வாறு கூறினார் ஷேவாக்.




மும்பை இந்தியன்ஸ் அணியை தனது மின்னல் வேக ஆட்டத்தின் மூலம் அதிர வைத்த டில்லி அணியின் சேவாக்கை மும்பை இந்தியன்ஸ் அணியின் உரிமையாளர் நிற்றா அம்பனி கைலாகுகொடுத்து வாழ்த்துகின்றார்.
இந்த ஆட்டத்தில் அதிரடியாக ஆடிய சேவாக் ஆட்டமிழக்காமல் 13 பவுண்டரிகள் 2 சிக்ஸர்கள் உட்பட 95 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை ரசிகர்களுக்கு விருந்தாக்கினார்.

## புனேயுடனான போட்டியில் அற்புதமான வெற்றி

### - கில்கிறிஸ்ட்

ஐ.பி.எல். போட்டியில் பஞ்சாப் அணி பரபரப்பான ஆட்டத்தில் புனே வாரியர்ஸ் அணியை வென்றது. முதலில் விளையாடிய புனே வாரியர்ஸ் 4 விக்கெட் இழப்புக்கு 185 ஓட்டங்களைக் குவித்தது.

பின்னர் விளையாடிய கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி ஒரு பந்து எஞ்சி இருந்த நிலையில் 3 விக்கெட் இழப்புக்கு 186 ஓட்டங்களை எடுத்து 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. கடைசி 2 பந்தில் வெற்றிக்கு 6 ஓட்டங்கள் தேவை. 5ஆவது பந்தில் மில்லர் சிக்சர் அடித்து அணியை வெற்றி பெற வைத்தார். அவரே ஆட்டநாயகனாக தேர்வு பெற்றார்.

இந்த வெற்றி குறித்து பஞ்சாப் அணியின் தலைவர் கில்கிறிஸ்ட் கருத்துவெளியிடும் போது.

186 ஓட்டங்கள் என்ற இலக்கை ஈட்டியது அற்புதமானது. இதற்காக மில்லர், மன்தீப் சிங்கை பாராட்டுகிறேன். இருவரது ஆட்டமும் சிறப்பாக இருந்தது. இதேபோல வோராவும் தனது பங்களிப்பை வெளிப்படுத்தினார். நாணயச் சுழற்சியில் வென்று களத்தடுப்பை தேர்வு செய்தது கடின முடிவே. ஆடுகளம் துடுப்பாட்டத்துக்கு ஏற்ற வகையில் இருந்ததால் இந்த ஓட்ட இலக்கை எட்ட முடிந்தது. இந்த வெற்றி மிகுந்த நம்பிக்கையை ஏற்படுத்தி உள்ளது. இவ்வாறு கில்கிறிஸ்ட் கூறினார்.

## ஜொகோவிச் சம்பியன்

மொன்டிகார்லோ மாஸ்டர்ஸ் டெனிஸ் தொடரின் சம்பியன் பட்டத்தை, சேர்பியாவின் நொவெக் ஜொகொவிச் சுவீகரித்துள்ளார்.

இறுதிப் போட்டியில் ஸ்பெய்னின் ரபாயல் நடாலை எதிர்கொண்ட நொவெக் ஜோகொவிச், 6 - 2, 7 - 6 என்ற செட் கணக்கில் வெற்றி வாகை சூடினார்.

இந்த வெற்றியின் மூலம் மொன்டிகார்லோ மாஸ்டர்ஸ் டெனிஸ் தொடரில் ரபாயல் நடால் பெற்றுவந்த தொடர் வெற்றிகளுக்கு, ஜொகொவிச் முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.

இந்தத் தொடரின் ஆரம்ப சுற்றுக்களில், உபாதையினால் நொவெக் ஜொகொவிச் சிரமங்களை எதிர்நோக்கியிருந்தபோதிலும், இறுதியில் மீண்டும் தனது திறமையை வெளிப்படுத்தியுள்ளார்.

## விலகினார் வொட்சன்

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் துணைத் தலைவரான ஷேன்வொட்சன், சமீபத்தில் நடந்த இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் துடுப்பாட்டத்தில் சிறப்பாக செயற்படாததுடன், ஒழுங்கீன நடவடிக்கைக்கும் உள்ளானார். 2010ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்துக்கு பிறகு டெஸ்ட் போட்டியில் சதம் அடிக்காத ஷேன் வொட்சன், அணியின துணைத் தலைமைப் பதவியில் இருந்தும் விலகியுள்ளார்.

துணைத் தலைவர் பதவியில் இருந்து விலக எடுத்த முடிவு கடினமானது என்றாலும் இந்த முடிவு அணிக்கும், எனக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்று நம்புகிறேன். சிறந்த டெஸ்ட் வீரராகவும், ஓட்டங்களை குவித்து அணிக்கு பயன் அளிக்கும் வகையில் விளங்க வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்' என்று தெரிவித்தார்.

## கார் பந்தயத்தில் வெட்டல் சம்பியன்!

'பார்முலா1' கார் பந்தயம் 19 சுற்றுகளை கொண்டதாகும். இதன் முடிவில் முதலிடம் பிடிக்கும் வீரர் சம்பியன் பட்டத்தை வெல்வார். இந்த போட்டியில் 4ஆவது சுற்றான பக்ரைன் கிராண்ட்பிரி போட்டி மனாமாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.




இந்த போட்டிக்கு எதிராக சில அமைப்புகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் பக்ரைனில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் இந்த போட்டி நடந்தது. 308 கிலோ மீற்றர் தூரம் கொண்ட இந்த போட்டியில் ஜேர்மனி வீரர் செபாஸ்டியன் வெட்டல் (ரெட்புல்) மின்னல் வேகத்தில் காரை செலுத்தி 1 மணி 36 நிமிடம் 00.498 வினாடியில் கடந்து முதலிடத்தை பிடித்தார்.


வெட்டல் மலேசியன் கிராண்ட்பிரியிலும் முதலிடத்தை வென்று இருந்தார். வெட்டலை விட 9.1 வினாடி பின்தங்கிய பின்லாந்து வீரர் கிமி ரெய்க்கோனன் (லோட்டஸ்) 2ஆவது இடத்தையும், 19.5 நிமிடங்கள் காலதாமதமாக பந்தய தூரத்தை கடந்த பிரான்ஸ் வீரர் ரோமைன் குரோஜன் (லோட்டஸ்) 3ஆவது இடத்தையும் பிடித்தனர். ஸ்போர்ஸ் இந்தியா வீரர் பால்டி ரெஸ்டா (இங்கிலாந்து) 4ஆவது இடம் பெற்றார்.

இதுவரை நடந்த 4 சுற்றுகள் முடிவில் ஜேர்மனி வீரர் செபாஸ்டியன் வெட்டல் (ரெட்புல்) 77 புள்ளிகளுடன் முதலிடத்திலும், பின்லாந்து வீரர் கிமி ரெய்கோனன் 67 புள்ளிகளுடன் 2ஆவது இடத்திலும், இங்கிலாந்து வீரர் லீவிஸ் ஹாமில்டன் 50 புள்ளிகளுடன் 3ஆவது இடத்திலும் உள்ளனர். இந்த போட்டியின் 5ஆவது சுற்றான ஸ்பெயின் கிராண்ட்பிரி அடுத்த மாதம் (மே) 12ஆம் திகதி நடைபெறவுள்ளது.

## வாகை சூடியது சிம்பாவே

பங்களாதேஷ் அணிக்கு எதிரான முதல் டெஸ்டில் சிம்பாப்வே அணி 335 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

சிம்பாவே சென்றுள்ள பங்களாதேஷ் அணி, இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. ஹராரேயில் நடைபெற்ற முதல் டெஸ்ட்டில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே 389 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு தனது முதல் இன்னிங்சுக்காக ஆடிய பங்களாதேஷ் 134 ஓட்டங்களைப் பெற்றது.



தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்சில் ஆடிய சிம்பாப்வே 7 விக்கெட்டுக்களை இழந்து 227 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. டெய்லர் (102), கீகன் மெத் (31) ஆட்டமிழக்காமல் இருந்தனர். பங்களாதேஷ் சார்பில் ரோபியுல் இஸ்லாம் 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

483 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு 2ஆவது இன்னிங்சை ஆரம்பித்த பங்களாதேஷ் அணிக்கு முகமது அஷ்ரபுல் (40), நாசிர் ஹொசைன் (23), ஜுஹருல் இஸ்லாம் (22), மகமதுல்லா (21) ஓரளவு கைகொடுத்தனர். ஏனைய வீரர்கள் ஏமாற்ற 2ஆவது இன்னிங்சில் பங்களாதேஷ் அணி 147 ஓட்டங்களுக்கு சுருண்டு தோல்வி அடைந்தது. சிம்பாப்வே சார்பில் கிரிமர் 4, ஜார்விஸ் 3, மசகட்சா, சிகும்புரா தலா ஒரு விக்கெட் கைப்பற்றினர்.

இந்த வெற்றியின் மூலம் சிம்பாப்வே அணி 1-0 என முன்னிலை வகிக்கிறது. ஆட்ட நாயகன் விருது, இரண்டு இன்னிங்சிலும் சதம் அடித்து அசத்திய சிம்பாப்வே அணித் தலைவர் பிரண்டன் டெய்லருக்கு வழங்கப்பட்டது.

இவ்விரு அணிகள் மோதும் இரண்டாவது மற்றும் கடைசி டெஸ்ட் வரும் 25ஆம் திகதி ஹராரேயில் ஆரம்பமாகிறது.

## ஐ.பி.எல்.அணிகள் பெற்ற புள்ளிகள்

IPL-2013

| Teams | Mat | Won | Lost | Tied | Pts | Net RR |
|---|---|---|---|---|---|---|
| Bangalore | 7 | 5 | 2 | 0 | 10 | +0.47 |
| Hyderabad | 7 | 5 | 2 | 0 | 10 | -0.10 |
| Chennai | 6 | 4 | 2 | 0 | 8 | +0.73 |
| Rajasthan | 6 | 4 | 2 | 0 | 8 | +0.71 |
| Punjab | 6 | 3 | 3 | 0 | 6 | +0.20 |
| Mumbai | 6 | 3 | 3 | 0 | 6 | -0.19 |
| Kolkata | 6 | 2 | 4 | 0 | 4 | +0.02 |
| Pune | 7 | 2 | 5 | 0 | 4 | -0.71 |
| Delhi | 7 | 1 | 6 | 0 | 2 | -0.91 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வோட்சன், ஹஸி அதிரடி சென்னை திரில் வெற்றி





ஹசியின் அதிரடியால் ராஜஸ்தானுக்கு எதிரான போட்டியில் சென்னை அணி 5 விக்கெட்டுக்களால் திரில் வெற்றி பெற்றுள்ளது.

6-வது ஐ.பி.எல். தொடரின் 30-வது லீக் போட்டி சென்னை சேப்பாக்கம் எம்.ஏ. சிதம்பரம் அரங்கில் நடைபெற்றது.

இப்போட்டியில் உள்ளூர் அணியான சென்னை அணி, ராஜஸ்தான் றோயல்ஸ் அணியை எதிர்கொண்டது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் றோயல்ஸ் அணி முதலில் துடுப்பாட்டத்தை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் அணி வோட்சனின் அபார சதத்தின் உதவியுடன் 20 ஓவர்களின் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 185 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக வோட்சன் 61 பந்துகளில் 6 பவுண்டரிகள், 6 சிக்ஸர்கள் அடங்கலாக 101, ஸ்ருவர்ட் பின்னி ஆட்டமிழக்காமல் 36 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சென்னை அணி சார்பாக அஷ்வின், பிராவோ ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

186 என்ற கடின வெற்றியிலக்குடன் களமிறங்கிய சென்னை அணிக்கு மைக்கல் ஹசி - சுரேஷ் ரெய்னாவின் அதிரடியான 2-வது விக்கெட் இணைப்பாட்டமும் இறுதி ஓவரில் பிராவோ காட்டிய அதிரடி ஆட்டமும் இணைந்து அணியின் வெற்றியை உறுதிப்படுத்தியது.

இறுதியில் சென்னை அணி தனது வெற்றியை 19.5 ஓவர்களின் நிறைவில் 5 விக்கெட்டுக்களால் அடைந்து கொண்டது. துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக மைக்கல் ஹசி 88, ரெய்னா 51, பிராவோ 9 பந்துகளில் 15 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி சார்பாக போல்க்னர் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். போட்டியின் சிறப்பாட்டக்காராக மைக்கல் ஹசி தெரிவானார். இவ்வெற்றியின் மூலம் சென்னை அணி 2 புள்ளிகளை பெற்றுக் கொண்டது.

## இன ஒருமைப்பாட்டை கட்டி...

நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த அவர் இதனைத் தெரிவித்தார். அத்துடன் யாழ். குடாநாட்டில் பாதுகாப்புத் தரப்பினர் செய்து வரும் வேலைத்திட்டங்கள் மகிழ்ச்சியளிப்பதாகக் கூறினார்.

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து கனடா நாட்டில் வாழ்ந்து வரும் மொரிஸ் சோண்ட் ஜயதிலக்க என்பவரின் 20 இலட்சம் ரூபாய் செலவில் 52-வது படைப்பிரிவினரின் ஏற்பாட்டில் தென்மராட்சி வலயத்திற்குட்பட்ட 24 பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்கள் மற்றும் 100 ஆசிரியர்கள், 1500 மாணவர்களுக்கு சீருடைகள்வழங்கும்நிகழ்வுநேற்றுபடைத்தலைமையகத்தில்இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சீருடைகளை வழங்கிய பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ மேலும் தெரிவிக்கையில், யாழ்.குடாநாட்டில் படைத்தரப்பினர் செய்துவரும் சேவை பெருமகிழ்ச்சி அளிக்கிறது.

அத்தோடு இன்றைய (நேற்று) நிகழ்வில் இடம்பெற்ற மாணவிகளின் நடனமும் நன்றாகயிருந்தது. அதற்கும் இராணுவத்தினருக்கு பாராட்டு தெரிவிக்கிறேன்.

நாட்டில் கலை கலாசாரம் வளர்ச்சியடைய வேண்டும். பண்பாடு கட்டியெழுப்பட்ட வேண்டும். சகல இன மக்களின் கலாசாரமும் ஒன்றுபட வேண்டும்.

இலங்கையில் பல மொழி பேசுபவர்கள் உள்ளனர். பல்லின கலாசாரத்தை கொண்டது எமது நாடு. எல்லா மதமும் மொழியும் கலாசாரமும் ஒன்றுபட்டால் அழகாக இருக்கும்.

நாட்டில் ஒருமைப்பாடும் கட்டியெழுப்படும் எனத்தெரிவித்ததோடு இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்பவர்கள் மீண்டுமொரு யுத்தத்தை இங்கு ஏற்படுத்திவிடாது. இன ஒற்றுமையை மேம்படுத்த ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

கடந்த கால யுத்த அழிவுகளினால் எமது திறமைகள் மழுங்கடிக்கப்பட்டுவிட்டன. எமது திறமைகள் வெளிக்கொண்டு வரப்படவில்லை. யுத்தம் எமது திறமைகளை வெளிக் கொண்டு வர பாரிய தடையாக இருந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த கத்துருசிங்க உள்ளிட்ட இராணுவத்தினர் பலர் கலந்து கொண்டிருந்தனர். (எ-6)

## சமாதானத்...

சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

உள்ளடக்கங்களை கருத்திற் கொண்டு சட்டத்தை அனுமதிப்பது குறித்து அறிவிக்க உள்ளதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

மதங்களுக்கு இடையில் முரண்பாடுகளைத் தூண்டும் வகையில் எழுத்து மூலமோ அல்லது வாய் மொழி மூலமோ கருத்து வெளியிடுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க இந்தச் சட்டம் வழிகோலும் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். (எ-11)

## சொகுசு பஸ்...

இது தொடர்பாக கிளிநொச்சிப் பொலிஸாரையும், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையும் தொடர்பு கொண்ட போது அது குறித்து தகவல் எவையையும் பெறமுடியவில்லை. (எ-11)

## இந்தியாவு...

முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்த அரசியல்வாதிகள் நாட்டின் உண்மை நிலைமையை நேரில் பார்வையிட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்தில் மேற்கொள்ளப்படும் போராட்டங்களில் இந்தியாவுடனான உறவுக்ளில் பாதிப்பு ஏற்படக் கூடிய சாத்தியம் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-11)

## திட்டமிட்டபடி செய்...


அதேவேளை ஜனாதிபதி நேற்றைய அறிவித்தல் குறித்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கருத்து தெரிவிக்கையில், வட மாகாண தேர்தல் தொடர்பான உத்தியோகபூர்வ அறிவித்தல் வெளியானதன் பின்னரே தமது நிலைப்பாடு வெளிப்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தகவலை தெரிவித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்றஉறுப்பினர்மாவை சேனாதிராஜா தமது கட்சி கூடி ஆராய்ந்ததன் பின்னரேதமது நிலைப்பாட்டினை வெளிப்படுத்தவுள்ளதாக தெரிவித்தார்.

இது தவிர வேறு எவருடனனும் இணைந்து அரசியல் செயல்பாட்டை முன்னெடுக்கும் எண்ணம் இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை இலங்கை அரசாங்கம் மனித உரிமைகள் தொடர்பில் அவதானமாக செயல்படும் அரசாங்கம் என்றும் அவர் குறிப்பிட்டார். (எ-11)

## மரண அறிவித்தல்



### மகாதேவன் சதீஸ்குமார்

தொண்டைமானாறு - வல்லை வீதியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட மகாதேவன் சதீஸ்குமார் 20.04.2013 அன்று அகாலமரணமானார்.

அன்னார் மகாதேவன் - பத்மராணி (வவா) தம்பதியரின் அன்பு மகனும் சதீபன், சாயினி (பிரான்ஸ்), அஜந்தினி (மட்டக்களப்பு பல் கலைக் கழகம்), செல்வனா (மட்டக்களப்பு பல்கலைக்கழகம்), மயூதினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெகனின் (பிரான்ஸ்) மைத்துனரும் ஜெசானி (பிரான்ஸ்), ஜெனிசா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வல்லை வீதி,
தொண்டைமானாறு.

தகவல்: குடும்பத்தினர்
சி. ஜெயக்கொடி (பெரியப்பா)

## மரண அறிவித்தல்

### திருமதி ரதிதேவி பாலசிங்கம்

உரும்பிராய் தெற்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ரதிதேவி பாலசிங்கம் அவர்கள் 22.04.2013 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சாரங்கபாணி, தங்கரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஐயாத்துரை ராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பாலசிங்கம் (களஞ்சியக் காப்பாளர், மகாராஜா நிறுவனம்) அவர்களின் அன்பு மனைவியும் சுசிலாதேவி சாரங்கபாணி(பேரவை உறுப்பினர், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்) அவர்களின் அன்புச் சகோதரியும், பிரதிபா(ஆசிரியை, உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை), கௌதமி(லண்டன்), பிரகலாதன்(சிரேஷ்ட விரிவுரையாளர், களனி பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், புஸ்பானந்தம் (உதவி நில அளவை அத்தியட்சர் , வவுனியா), ஜயந்தன்(லண்டன்), ஜீவன்(விரிவுரையாளர், களனி பல்கலைக் கழகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.04.2013 அன்று பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

தகவல்
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்களும் சிறந்த முதலீட்டாளராகலாம்"

பங்குச்சந்தை முதலீட்டாளர்களுக்கான

**பயிற்சிப்பட்டறை**

யாழ்.நகரில் ஒவ்வொரு சனிக்கிழமைகள் தோறும்.

(9.00-12.00)

தொடர்பு: 0777822014 www.cse.lk


## இலங்கையில் குடும்ப...

அதற்கான முழுமையான ஒத்துழைப்பையும் வழங்குவோம் என்று ஐதேகவின் சிரேஷ்ட உப தலைவரும்,கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினருமான லஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

மனித உரிமைகள் தொடர்பான நாடுகளில் அறிக்கை 2012 என்ற அறிக்கை கடந்த வெள்ளிக்கிழமை 19ம் திகதி அமெரிக்க இராஜாங்கத் திணைக்களச் செயலாளர் ஜோன் கெரியால் வெளியிடப்பட்டது.

இலங்கையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குடும்ப ஆட்சி அதிகாரம், நிர்வாகத்தில் மேலோங்கிக் காணப்படுகிறது. நீதித்துறைச் சுயாதீனம் முடக்கப்பட்டுள்ளது. ஊடக அடக்குமுறைகள், பொலிஸாரின் தாக்குதல்கள், சித்திரவதைகள் தொடர்கின்றமை உள்ளிட்ட பல குற்றச்சாட்டுகள் அந்த அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ளன.

இது குறித்து கருத்து வெளியிட்டபோதே நாடாளுமன்ற உறுப்பினர் லஷ்மன் கிரியெல்ல மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் குடும்ப ஆட்சியின்கீழ் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் மேலோங்கிக் காணப்படுகின் றன என அமெரிக்கா முன்வைத்துள்ள குற்றச்சாட்டு முற்றிலும் சரியானதும் உண்மையானதும் ஆகும்.

தினந்தோறும் நாம் தொடர்ச்சியாக முன்வைக்கும் குற்றச்சாட்டுகளைத்தான் அமெரிக்காவும் முன்வைத்துள்ளது. சர்வதேசத்தின் பலமிக்க நாடுகள் எம்மீது குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் அளவுக்கு அநீதியான ஆட்சியை நடத்திக்கொண்டு அவற்றைப் பகைத்துச் கொள்ளும் நடவடிக்கைகளைத்தான் அரசு தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகிறது.

இந்தியா,அமெரிக்கா மற்றும் ஐரோப்பா உள்ளிட்ட பலமிக்க நாடுகளுடன் அரசு பகைமையை ஏற்படுத்திக் கொண்டுள்ளது. இந்நிலை நாட்டுக்குத்தான் பேராபத்தை ஏற்படுத்தும் என நாம் தொடர்ச்சியாக அரசை வலியுறுத்திவருகிறோம். ஆனால் அரசோ எமது பேச்சைக் கருத்திற் கொள்ளாது செயற்படுகிறது.

அரசின் நடவடிக்கைகளை அவதானிக்கையில் சர்வதேச நாடுகளுடன் நட்புறவைப் பேணும் தேவையும்,நோக்கமும் அதற்கு இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

சர்வதேச நாடுகளுடன் நட்புறவு என்பது அரசுக்குத் தேவை இல்லையெனினும்,அது நாட்டுக்கு அத்தியாவசியத் தேவையாகும்.

எனவே இவற்றைக் கருத்திற் கொண்டு சர்வதேச நாடுகளுடனான முறுகல் நிலையை முடிவுக்குக் கொண்டுவர அவற்றுடன் சமரசப் பேச்சுகளில் ஈடுபட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசு இவ்வாறானதோர் நடவடிக்கையில் இறங்கினால் அதற்கு முழு ஒத்துழைப்பையும் வழங்க நாமும் தயாராகவுள்ளோம் என்றார். (எ-11)

## பாடசாலை சீருடைத் துணி...

அதிபர்கள், நூறு ஆசிரியர் களிற்கும் சீருடை வழங்கப்பட்டது.

இந்தச் சீருடை வழங்கும் நிகழ்வுக்காக இராணுவத்தினர் அப்பகுதியிலுள்ள மாணவர்கள் 1500 பேர் மற்றும் நூறு ஆசிரியர்கள், அதிபர்கள் உள்ளிட்டோரே காலை 8 மணிக்குச் சென்று பேருந்துகளில் ஏற்றிக் கொண்டு வந்து படை முகாமில் இறக்கி விட்டுள்ளனர்.

அத்தோடு ஒரு விழா மண்டபத்தினுள் இருக்குமாறும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை பணித்துள்ளனர். இருப்பினும் பாதுகாப்புச் செயலாளர் விழா மண்டபத்திற்கு பிற்பகல் 3.30 மணிக்கு வருகை தந்திருந்தார்.

இராணுவத்தினரின் விசேட வாகன அணி வகுப்புடன் அழைத்து வரப்பட்ட அவருக்கு சிங்கள கலைஞர்களின் வரவேற்பு நடனத்துடன் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. தமிழ் மாணவிகளைக் கொண்டு மலர் மாலை அணிவித்து விருந்தினர்கள் விழா மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டது தொடக்கம் விழா முடியும் வரை மாணவர்களின் கூக் குரலும் ஓயவில்லை.

அத்தோடு சினம் தாங்க முடியாது சில மாணவர்கள் விழா மண்டபத்தை விட்டு வெளியேற எத்தனித்த போதும் பாதுகாப்புத் தரப்பினர் தடுத்து விட்டனர்.

இது தவிர சிங்களத்தில் தமிழ் மாணவிகளைக்கொண்டு தேசிய கீதம் பாடப்பட்டதோடு யாழ்ப்பாணத்தில் உள்ள ஊடகவியலாளரும் பாதுகாப்புத் தரப்பினரால் மிகவும் மோசமாக நடத்தப்பட்டனர்.

கொழும்பு ஊடகங்களின் ஊடகவியலாளர்கள் சுதந்திரமாக விழா மண்டபத்தில் செய்தி மற்றும் புகைப்படம் எடுக்க அனுமதிக் கப்பட்ட போதும் யாழ்ப்பாணத்தில் உள்ள ஊடகவியலாளர்களுக்கு பல தடைகள் போடப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6)

## வடக்கு மாகாண...

குறித்து டக்ளஸ் தேவானந்தா தீவிரமாக ஆராய்ந்து வருவதாக அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் ஈபிடிபி இந்தத் தேர்தலில் தனித்துப் போட்டியிடவே வாய்ப்புகள் உள்ளன.

இதையடுத்து ஆளும் ஐக்கிய மக்கள் முன்னணியின் சார்பில் விடுதலைப் புலிகளுடன் முன்னாள் ஊடகப் பேச்சாளரான தயாநிதி மாஸ்டரை வடக்கு மாகாணசபைத் தேர்தலில் முதல்வர் வேட்பாளராக நிறுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ளமை குறித்து அவர் உறுதிப்படுத்தாத போதிலும் இன்னும் இரண்டு வாரங்களில் தனது முடிவை அறிவிப்பதாக தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (எ-11)


**RAVEENS ENGLISH MEDIUM CLASSES**
**KARAVEDDY**
**G.C.E O/L RESULTS-2012**

| S.No | Name | Results | Maths | English | Tamil | science | History | Religion | Optional Subjects: Engl.lit | ICT.Eng | Geo.Eng | Com.Tam |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | T.Thuvaraka | 8A,B | A | A | A | A | A | A | B | A | A | - |
| 2 | L.Vithursha | 7A,B,C | A | A | A | A | A | A | C | A | B | - |
| 3 | M.Arane | 6A,2B,C | A | A | A | B | A | A | C | A | B | - |
| 4 | B.Elaxsana | 9A | A | A | A | A | A | A | A | A | - | A |
| 5 | T.Pirathiga | 8A,B | A | A | A | A | A | A | B | A | - | A |
| 6 | R.Ponnarashi | 7A,B,C | A | A | A | A | A | A | B | A | C | - |
| 7 | K.Niththila | 2A,2B,4C,S | B | A | C | C | C | A | S | B | - | C |
| 8 | R.Kasthuri | 6A,2B,S | A | A | A | B | A | A | S | A | B | - |
| 9 | R.Pirasanna | 7A,B,C | A | A | A | A | A | A | C | A | B | - |
| 10 | M.Pavalan | 4A,3B,2C | A | A | A | B | B | A | C | B | C | - |
| 11 | K.Janagan | 5A,B,2C,S | A | A | A | A | C | A | S | B | C | - |
| 12 | J.Jeyaram | 2A,3B,4C | B | A | B | C | B | A | C | C | - | C |

T.P: 0212263321
Web:www.raveensemc.com

Director
P.Easwaranathan B.Sc(Ag) Hons
Raveens EMC
Karaveddy
(C-3081)



**டோஹா, கட்டாரில் (Doha,Qatar) உடனடி வேலைவாய்ப்பு**

பொறியியல், நிர்மாணத்துறையில் பிரசித்திபெற்ற நிறுவனங்களுக்கு இலங்கை அரசாங்கத்தினால் SLBFE அங்கிகரிக்கப்பட்ட Air Trust வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தினூடாக 30க்கும் அதிகமான வேலைவாய்ப்புக்கள் அதி உயர் சம்பளத்துடன் கீழ்க் காணும் வேலை வாய்ப்புக்கள் காத்திருக்கின்றன.

மேசன் 1200 - 1500 எலக்ரீசியன் 1200 - 2000 பெயின்டர் 1200 - 1500 Plumber 1200 - 1500 கம்பி கூடுகட்டுபவர் - 1200 - 1500 காப்பென்டர்ஸ் 1200 - 1500 பொது உதவியாளர் 900 - 1000 லேபர் 900 - 1000 கிளினிங் லேபர் 800 - 1000 Mechanic 1200 - 2000 Mechanic Helper 1000 Driver (Valit License) 1500 - 2000 6 G Welder 1200 - 1500

மிக குறைந்த கட்டணத்தில் இரண்டே வாரத்தில் பயணமாகலாம். உங்கள் விண்ணப்பங்கள் பாஸ் போர்ட் மற்றும் ஏனைய ஆவணங்களுடன் எதிர் வரும் 27.04.2013 A9 வீதி, பரந்தன் ஸ்டார் ரெஸ்ட் இலும் 28ஆம் திகதி இல 33, ஆசீர்வாதம் லேன்ட் ஹொஸ்பிட்டல் வீதி, கிறின் கிறாஸ் ஹோட்டல்யாழ்ப்பாணத்திலும் காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை உங்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். (LL. No - 2490)

உடன் தொடர்புகளுக்கு : வவுனியாவில் T.P. : 0777 92 94 75, 077 23 93 165

தலைமை நிறுவனம் : Air Trust
Overseas Manpower Consultant, 945, Maradana Road, Colombo - 8
011 2676777, 077 2393165
(C-3041)


## மனித உரிமை...

வதாகவும் அவர் தெரிவித்துள்ளார். பாரியளவில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்று வருவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொள்ள முடியாது என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

ஏதேனும் ஆதாரங்களுடன் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டால் அது குறித்து விசாரணை நடத்தத் தயார் எனஅவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம் பெறுவதாகவும், காவல்துறையினர் சித்திரவதைகளை மேற்கொள்வதாகவும் கடந்த வாரம் அமெரிக்கா வெளியிட்டிருந்த மனித உரிமை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ-11)


**வேலை வாய்ப்பு**

வடக்கு வாழ் இளைஞர்களுக்கு அரிய வாய்ப்பு. கனடாவை சேர்ந்த Granton International நிறுவனமானது 3 ஆம் ஆண்டில் காலடி வைக்கும் தருணத்தை முன் னிட்டு 25 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்க முன் வந்துள்ளது.

- 6 மாத கால தகுந்த பயிற்சி வழங்கப்பட்டு உள் வாங்கப்படுவர். பயிற்சி காலத்தில் 12 000 சம்பளம் பெற முடியும். பின் 38 000 அடிப்படை சம்பளத்துடன் பணிபுரியும் வாய்ப்பு.
- தங்குமிடம் இருபாலாருக்கும் (போக்குவரத்து சிரமம் உடையோர்க்கு)வழங்கப்படும்.
- பயிற்சியின் பின் வெளிநாடுகளில் உள்ள வேறு கிளைகளிலும் பணிபுரியலாம்.
- பயிற்சியின் பின் வெளிநாட்டு சுற்றுலா வசதிகள் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு :- முகாமை 077 0878555 (2434)



**முக்கிய அறிவித்தல்**

**V.S.P நல்லெண்ணெய்**

அன்பான V.S.P நல்லெண்ணெய் விற்பனையாளர்களுக்கும், பாவனையாளர்களுக்கும் தெரியப்படுத்துவது என்னவெனில், V.S.P என்று போலியான லேபில்களை பயன்படுத்தி நல்லெண்ணையாக வெளிவருகின்றன. எனவே நீங்கள் எமது தயாரிப்பான V.S.Pஐ இலகுவாக இனம்கண்டுகொள்ள பரிமளா ஸ்ரோர்ஸ், 26 A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடன், உரிமையாளர் பொ. பாஸ்கரன் என்பவரின் பெயரும் அச்சிடப்பட்டுள்ளது.

ஆதலால் அன்பான விற்பனையாளர்களும், பாவனையாளர்களும் இதனை நன்கு கவனித்து கொள்வனவு செய்து கொள்ளவும் என்பதனை அன்புடன் அறியத்தருகின்றோம்.

பரிமளா ஸ்ரோர்ஸ்
26A, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-3016)

உரிமையாளர்:பொ.பாஸ்கரன்
0212229165,
0212224135.



**மு/ குமுழமுனை மகா வித்தியாலயம்**

**பழைய மாணவர்சங்க**

**வருடாந்த பொதுக் கூட்டம்-2013**

மு/ குமுழமுனை மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டமானது எதிர்வரும் 23.04.2013 அன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 3.00 மணியளவில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவிருப்பதனால் அனைத்து பழைய மாணவர்களும் கலந்து கொண்டு சிறப்பிப்பதோடு எமது வித்தியாலயத்தின் எதிர்கால அபிவிருத்தி தொடர்பான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் முன்வைக்குமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

செயலாளர்
பழைய மாணவர் சங்கம்
குமுழமுனை ம.வி.

(சி-3070)


**மரண அறிவித்தல்**



அமரர்

**பொன்னுத்துரை பரமேஸ்வரி**

ஏழாலை மேற்கு பள்ளஞ்சீமாவை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை பரமேஸ்வரி அவர்கள் 22.04.2013 நேற்று காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா ,சுந்தரம் ஆகியோரின் மகளும் ,காலஞ்சென்ற பொன்னுத்துரையின் மனைவியும் ,கனகரத்தினம், அன்னலட்சுமி ,குணரத்தினம் ஆகியோரின் சகோதரியும், குணசீலன் ,ரஞ்சிதமலர்,சத்தியசீலன்(சுவிஸ்),தவமலர் ஆகியோரின் பாசமிகு தாயாரும்,பராசக்தி,சற்குணராசா , சுதாயினி(சுவிஸ்), சந்திரகாந்தன் ஆகியோரின் மாமியாரும்,தர்சன்,சுகன்யா ,கயனன், நிசங்கன்,திவ்யா , டினோயா ,சௌமியா ,கீர்த்தனா ,ஆரூரன்,ஆதீசன்(சுவிஸ்), கவிதாஞ்ஜி,நந்தலாலன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 23.04.2013 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை மேற்கு,
பள்ளஞ்சீமா,
ஏழாலை.

(2435)

தகவல்
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.04.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org